www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි
Puthiya Poomi

சுற்று 15 ஒக்ரோபர் 2008 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 118

## ஒக்ரோபர் 1 சர்வதேச சிறுவர் தினத்தில் வன்னிச்சிறுவர்களின் அவல நிலை









## உணவை ஆயுதம் ஆக்காதீர்!

வன்னியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டு பகுதிகளில் அரசாங்கத்தின் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று கூறவேண்டிய குரல்கள் அடங்கியே இருக்கின்றன. தாக்குதல்களினால் மக்கள் இடம் பெயர்ந்து காடுகளில் மரங்களின் கீழும் உணவு மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்கள் எதுவுமின்றித் துன்பப்படுகின்றனர். அத்துடன் விமானத் தாக்குதல்கள் எறிகணை வீச்சுகளிலிருந்து உயிரைப் பாதுகாத்துக் கொள்வதென்பதும் பெரிய சவாலாக இருக்கின்றது.

அங்கு கடமையாற்றி வந்த தன்னார்வ நிறுவனங்கள் சர்வ தேச தன்னார்வ நிறுவனங்கள் யாவும் வெளியேற்றப்பட்டுள்ளன. இந் நிலையில் அங்குள்ள மக்கள் தங்கள் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாதிருக்கின்றனர். அங்கு வாழும் 2 1/2 லட்சத்திற்கு மேற்பட்ட மக்களுக்கு உணவு மருந்து போன்ற பொருட்களை அரசாங்கம் அப்பகுதிக்கு அனுப்பி வைக்க வேண்டும். அத்துடன் முறையாக விநியோகிப்பதற்கும் சீரான வலைப்பின்னல் ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்கான பொறுப்பு இலங்கை அரசாங்கத்திற்குரியதாகும். இந் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது மக்களைக் கேடயமாகவோ பணயமாகவோ வைத்துக் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது. அதாவது மக்களை பேரவலத்திலிருந்து பாதுகாக்கும் நடவடிக்கைகள் அரசாங்கத்தின் இராணுவ நடவடிக் கைகளின் பகுதியாகவோ அல்லது இராணுவ நிகழ்ச்சி நிரலின் பகுதியாகவோ இருக்கலாகாது. அவ்வாறு அமையுமாயின் அது யுத்தம் நடைபெறும் பகுதிகளில் மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் மக்களை பாதுகாப்பதற்கும் அரசாங்கத்திற்குள்ள கடப்பாட்டிலிருந்து தவறுவதாகவே அமையும். இதற்குரிய மனிதாபிமான சட்ட ஒழுங்கு விதிகள் சர்வதேச செஞ்சிலுவை சங்க சர்வதேச உடன்படிக்கைகளில் கூறப்பட்டுள்ளன. அவ் உடன்பாட்டில் இலங்கை அரசும் கையெழுத்திட்டு இணக்கம் தெரிவித்துள்ளது. அவற்றையெல்லாம் ஒரேயடியாகத் தூக்கியெறிந்து விட்டு உதாசீனமாக இலங்கை அரசாங்கம் செயற்படலாகாது.

ஆயுதத் தாக்குதலில் ஈடுபடாதவர்களின் உயிர், உடைமை என்பதை பாதுகாப்பது மட்டுமன்றி அவர்களை மரியாதையுடனும் கௌரவத்துடனும் நடத்தவும் அரசாங்கம் பொறுப்புடையதாகும். இதனை ஐ.நா மட்டுமன்றி சர்வதேச நாடுகள் பல வலியுறுத்தி வருகின்றன. அவை யுத்தத்தை நிறுத்துவதற்குப் போதுமான அழுத்தங்களைக் கொடுக்கத் தவறிவிட்டன. யுத்தத்தை நடத்துவதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு இந்திய அரசாங்கம் பூரணமான ஆதரவை வழங்கி வருகிறது. ஆனால் இலங்கையில் நடைபெறும் யுத்தத்திற்கு எதிராக மக்கள் இயக்கங்கள் தமிழகத்தில் முன்னெடுக்கப்படுகின்றன. அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு இலங்கை அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளை ஆதரித்து வருகின்றன. இந்தியாவும், பாகிஸ்தானும், சீனாவும் என்றுமில்லாதவாறு ஒரு முகமாக இலங்கை அரசாங்கத்திற்கு இராணுவ உதவிகளை செய்துவருகின்றன. மஹிந்த ராஜபக்சாவின் அரசாங்கத்திற்கு உள்நாட்டிலும் ஒரு முகமாக பலசக்திகளும் பக்கபலமாக இருக்கின்றன. த.தே. கூட்டமைப்பைத் தவிர ஏனைய தமிழ் கட்சிகளும் மலையகக் கட்சிகளும், ஐ.தே. கட்சியிலிருந்து விலகி சென்ற பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கத்துடன் இருக்கின்றனர்.

தொடர்ச்சி 3

## ஊழல் மோசடி உச்ச நிலையில்

### "அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி"

"சக்விதி" என்ற முதலீட்டு நிறுவனத்தை நடாத்தி வந்த ஆங்கில ஆசிரியரான ரணசிங்க என்பவர் மேற்படி முதலீட்டு நிறுவனத்தில் வைப்புச் செய்த 5000 பேர்களின் 90 கோடி (900 மில்லியன்) பணத்தை மோசடி செய்து கொண்டு நாட்டை விட்டு ஓடிவிட்டார். அதனால் தமது பணத்தை இழந்தவர்கள் நடு வீதியில் கைவிடப்பட்டுள்ளனர். தமது தேவைகளுக்காகச் சேர்த்து வைப்பிட்ட பலரில் இருதய சிறுநீரக மற்றும் சத்திரசிகிச்சை போன்ற அவசிய மருத்துவத்திற்கு சேர்த்து வைப்புச் செய்தவர்களும் அடங்குவர். இது பொது மக்களுக்கு எதிரான பாரிய மோசடியாகும். இது பற்றி மத்திய வங்கியும் அரசாங்க உயர் மட்டமும் கவனத்திற் கொள்ளாமலும் கண்டும் காணாமலும் இருந்ததாலேயே இம் மோசடி இடம் பெற்றுள்ளது என்றே கூறப்படுகிறது.

இது போன்ற மோசடி இடம் பெறக் கூடிய முதலீட்டு நிறுவனங்கள் பற்றி 2007ம் ஆண்டின் முன் கூறில் கோப் (COPE) எனப்படும் பொது நிறுவனங்கள் பற்றிய பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முதலாவது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. அதனை மத்திய வங்கியும் அரசின் தலைவர்களும் உடனடிக் கவனத்தில் எடுத்திருந்தால் பொது மக்களின் பணம் இவ்வாறு மோசடிக்கு உள்ளாகியிருக்காது. நாட்டை விட்டு ஓடியுள்ள ஏமாற்றுப் பேர்வழியான சக்விதி ரணசிங்கா அரசாங்கத்தினதும் மத்திய வங்கியினதும் உயர் அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பு உடையவருமாவார் எனக் கூறப்படுகிறது.

இவ்வாறான மோசடியும் ஏனைய ஊழல்களும் இது தான் ஒன்றல்ல. இலங்கையில் அண்மைக் காலமாக ஊழல் மோசடி என்பன தலைவிரித்தாடிய வண்ணம் உள்ளன. இது அரசாங்க பொது நிறுவனங்களில் தான் அதிகமாக இடம் பெற்று வருகின்றன. அதன் காரணமாகவே பொது நிறுவனங்கள் பற்றிய பாராளுமன்றத் தெரிவுக் குழு அமைத்து விடயங்கள் கண்டறியப்பட்டன.

அதன் தலைவராக விஜயதாச ராஜபக்ஷ என்ற அரசாங்கத்தின் பக்கம் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் அதன் தலைவராக இருந்தார். அவர் ஒரு ஜனாதிபதி சட்டத்தரணியும் நேர்மையாக இருக்க வேண்டும் என விரும்பியவருமாவார். அவர் 2007ல் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த முதலாவது அறிக்கையில் 26 அரசாங்க பொது நிறுவனங்களில் ஊழல் மோசடி இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளதை வெளிப்படுத்தினார். இதில் 150 கோடி ரூபாய்கள் ஊழலுக்கும் மோசடிக்கும் உள்ளாகி இருப்பதை சுட்டிக்காட்டினார். அவரது இரண்டாவது அறிக்கையில் மேலும் பதினாறு நிறுவனங்களின் ஊழலும் எடுத்துக் காட்டப்பட்டது. அவரது அறிக்கையை அரசாங்கம் பாரதூரமாகக் கொள்ளவில்லை. காரணம் அதில் அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருப்பவர்கள் உயர் பதவிகளில் உள்ளோர் ஜனாதிபதிக்கு வேண்டியவர்கள் அரசாங்கத்தைப் பாதுகாத்து நிற்போர் உள்ளடங்கி இருந்தமையாகும். ஆதலால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது விசாரணை செய்வதற்குப் பதிலாக குற்றஞ் சாட்டிய பாராளுமன்றக்குழுவின் தலைவர் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டது. அதனால் விஜயதாச ராஜபக்ச மேற்படி கோப் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு எதிர்க் கட்சி வரிசைக்குச் சென்று அமர்ந்து கொண்டார். அரசாங்கம் வெட்கமின்றி அந்த தலைவர் பதவிக்கு ஜனாதிபதியின் சகோதரர் பசில் ராஜபக்ஷவை நியமித்தும் கொண்டது. இந்

தொடர்ச்சி 2

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்





**எமது தோழர்கள் தடுப்புக்காவலில் 20 மாதங்கள். விடுதலை செய் அல்லது விசாரணை செய் எனக் கோருகிறோம்.**

# மலையகத்தில் பிரச்சினைகள் இல்லையா? சுகம் காணும் தலைமைகளிடம் கேட்கிறோம்

இன்றைய இலங்கையில் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொரு மனிதர்களுக்கும் நிறையவே பிரச்சினை இருந்து வருகின்றன. அவற்றை அம் மக்களிடையே உள்ள அரசியல் தொழிற்சங்க சமூகத் தலைமைகள் சுட்டிக் காட்டி பரிகாரம் காணுமாறு வற்புறுத்தி வருகின்றன. அதனால் சில பிரச்சினைகள் குறைந்தளவாவது கவனிக்கப்படுகின்றன. அல்லது ஓரளவுக்குத் தானும் தீர்க்கப்படுகின்றன.

ஆனால் மலையக மக்களின் இன்றைய நிலைமைகள் பற்றி மலையகத்தின் அரசியல் தொழிற்சங்கத் தலைமைகள் எவ்விதத்திலும் அக்கறைப்படுவதாக இல்லை. எமது சம்பளப் பிரச்சினை பற்றி இருந்திருந்துவிட்டு ஏதாவது அறிக்கைகள் ஏட்டிக்குப் போட்டியாக அத்தலைமைகளால் விடப்படுமே தவிர அவர்களால் எமது நியாயமான சம்பள உயர்வை முன்வைத்துப் பெற முடியாத நிலையே இன்றுவரை தொடர்கிறது. மேலும் இத்தகைய தலைமைகளை மீறி நாம் வீதியில் இறங்கி வேலைநிறுத்தம் செய்தால் உடனே அதில் தலையிட்டு கோடரிக் காம்புகளாக மாறி போராட்டத்தை காட்டிக் கொடுத்து முடித்து வைத்து விடுவார்கள்.

சம்பளப் பிரச்சினை என்பதற்கும் அப்பால் வீடு கல்வி சுகாதாரம் வேலை வாய்ப்பு இன மொழிப் புறக்கணிப்பு போன்ற அடிப்படை வாழ்வாதாரப் பிரச்சினைகளால் நாளாந்தம் அல்லற்படும் மக்களாகவே மலையகத் தமிழ்ச் சமூகம் வாழ்ந்து வருகின்றது. இருநூறு வருடத் தொடர் வாழ்வில் நிலமற்ற மக்கள் சமூகமாகவே நாம் விடப்பட்டிருக்கிறோம். வீடு என்பது இன்றுவரை லயம் என்பதாகவே இருந்து வருகின்றது. தோட்ட மேற் கீழ்ப் பிரிவுகள் என்று அழைக்கப்படுகிறதே தவிர வீட்டு முகவரி என ஒன்று இல்லை. இலங்கையில் முகவரி அற்ற மக்களாக தபால் சேவைக்கு உட்படாத மக்களாக வாழ்ந்து வருகின்றோம் என்பது தான் எமது சோகமாகும்.

ஒரு காலத்தில் வாக்குரிமை அற்று இருந்தமைக்காக வருந்தினர் எமது மக்கள். ஆனால் இன்று ஏன் தான் எமக்கு வாக்குரிமை கிடைத்தது என்று வேதனைப்படவேண்டியவர்களாக வாழ்கிறார்கள். அந்தளவுக்கு வாக்குகளைப் பெற்றுக் சென்ற மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகள் மலையக மக்களை மிகவும் கேவலமாகப் பயன்படுத்தி வருகிறார்கள்.

இன்று எட்டு அமைச்சர்கள் மலையக மக்களின் வாக்குகள் பெற்று ஆளும் அரசாங்கத்தில் இருந்து வருகிறார்கள். மாகாண சபைகளிலும் அமைச்சர்கள் உள்ளனர். மாகாணசபை பிரதேச சபை மாநகர நகர சபைகளிலும் வீற்றிருக்கி றார்கள். இவர்கள் அனைவர்களது பதவிகளால் மலையக மக்களா கிய நாம் பெற்ற உரிமைகள் யாவை? இத்தனை பேரும் உள்ளடங்கிய மலையகத் தலைமைகள் தாம் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களின் விமோசனத்திற்கு எதனைச் செய்தார்கள். கல்வி சுகாதர தபால் நீதி உட்கட்டமைப் ஆகிய துறைகளுக்கான பிரதி அமைச்சர் பதவிக ளில் மலையகத்தின் பிரதிநிகளே இருந்து வருகிறார்கள். மத்திய மாகாணக் கல்வி அமைச்சர் பதவியும் தலையகத்தவர் தான். இவற்றுடன் இளைஞர் வலுவூட்டல், சமூக அநீதி ஒழிப் அமைச்சர்களாகவும் உள்ளனர். போதாதற்கு ஜனாதிபதி ஆலோசகர்களாகவும் உள்ளனர். இவ் வாறு தொடர்ச்சியாக எல்லா அரசாங்கங்களிலும் அமைச்சுப் பதவி பெற்று சுகம் அனுபவித்துக் கொண்டதைத் தவிர ஒட்டு மொத்த மலையக சமூகத்தின் வாழ்க்கையில் மாற்றங்கள் கொண்டு வர என்ன முயற்சிகளைச் செய்தனர். ஏகப் பிரதி நிதிகளாக ஆதிக்கத் தலைமைகளாக சகல சுகங்களை அனுபவிப்பவர்களாக இருந்து கொண் டனர். பதவிகள் பட்டங்கள் அனுபவிப்புகள் என்பவ ற்றை ஆளும் பேரினவாத ஆட்சிகளிடம் பெற்று வாலாட்டி நிற்கும் அரசியல் பண்பாட்டையே இவர்கள் கொண்டிருந்தனர். அதனால் அவர்களு க்கு மலையக மக்களின் பிரச்சினைகள் எதுவும் கண்ணில் படவில்லை. இவர்களது கண்டு கொள் ளாமை மலையக மக்களுக்கு சம்பள உயர்வைத் தவிர வேறு பிரச்சினைகள் எதுவும் இல்லை என்ற தோற்றத்தை உருவாக்கவே உதவி நிற் கிறது.

இவை மலையகத் தலைமைகள் மீதான குற்றச் சாட்டுக்கள் மட்டுமல்ல புதிய தலைமுறையினர் நன்கு சிந்தித்து செயல்பட வேண்டிய அரசியல் சிந்தனைக்கான சிறுகுறிப்புமாகும்.

*அட்டன்* *ச. வடிவேலன்*

---

**ஊழல் மோசடி உச்ச**

1ம் பக்க தொர்ச்சி

நிலையில் ஊழல் மோசடி வளருமா அல்லது. தேயுமா?

ஏற்கனவே வற் வரி மோசடியில் திறைசேரி அதிகாரிகள் ஈடுபட்டு வழக்கில் உள்ளனர். நிதி அமைச்சின் செயலாளர் டி.பி. ஜெயசுந்தரா உயர் நீதிமன்றத்தால் ஊழல் குற்றச்சாட்டின் பேரில் அபராதம் விதிக்கப்பட்டார். அவர் இன்னும் பல்வேறு பதவிகளில் இருந்து வருகிறார்.

ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தலில் புலிகளுக்குப் பணம் கொடுத்ததாகப் பாராளுமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டது. இப்போது அது பற்றி அறிய ஒரு பாராளுமன்றத் தெரிவுக் குழு நியமிக்கப் பட்டுள்ளது. வேலிக்கு ஓணான் சாட்சி என்பது போல அக்குழுவிற்கு தலைவராக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு தான் இன்றைய ஊழல் மோசடியின் நிலை காணப்படுகிறது. மேலிருந்துதான் இந்த ஊழல் மோசடி ஊற்றெடுக்கிறது. அதனைப் பார்க்கும் சாதாரணமானவர்கள் இவ்வளவும் மேலே நடக்கும் போது நாம் சிறிய அளவில் செய்தால் தவறு இல்லைத் தானே என்ற விதமாகவே யாவும் இடம் பெறுகின்றன. அரசன் எவ்வழி குடிகள் அவ் வழி என்பதற்கு அமையவே இவை இடம் பெறுகின்றன.

இவையாவற்றுக்கும் இன்றைய உலகமயமாதல் பொருளாதார நடைமுறைகளும் அதன் பாற்பட்ட சிந்தனைகளும் தான் தோற்றுவாயாகும். பணம் பணம்! எப்படியும் சேர்க்க வேண்டும். அதற்கு எத்தகைய குறுக்கு வழியையும் பயன்படுத்தலாம் என்ற நிலை முன்னுரிமை பெற்று நிற்கும் போது ஊழல் மோசடி என்பன சமூக ஓட்டத்தில் இயல்பானதாக்கப்பட்டுள்ளது. லஞ்சம் எங்கும் கட்டாய நடை முறையாகி உள்ளது. ஏமாற்றுதல் அவர் அவரது ஆற்றலுக்கு உட்பட்டதாகியுள்ளது. மேல் மட்டங்களில் தாராளமாக ஊழல் மோசடி ஏமாற்றுதல்கள் இடம் பெறும் போது தனது ஆற்றலைப் பயன்படுத்தி சத்வித்தி ரணசிங்க 90 கோடியைச் சுருட்டியது அவரைப் பொறுத்த வரை சரியாகவேபட்டது. ஆனால் மக்கள் தான் பாதிக்கப் பட்டனர் ஏமாற்றப்பட்டனர்.

எனவே இவற்றுக்கும் இன்றைய பொருளாதார அரசியல் அரசாங்க அமைப்பு முறையின் கீழான சீரழிவுகள் இயலாமைகள் ஏமாற்றுத்தனங்களுக்கும் நிறையவே தொடர்புகள் உண்டு என்பதே ஊடுருவிப் பார்க்க வேண்டிய பிரதான அம்சமாகும்.

---

**உணவை ஆயுதம்**

1ம் பக்க தொடச்சி

இயக்கத்ததை முன்னெடுத்து வந்த இடதுசாரி இயக்கங்கள் பலவீனப்பட்டுள்ளன. தமிழ் மக்களின் உரிமைகள் பற்றி பேசி வந்த சிங்கள மக்கள் மத்தியில் இருக்கும் ஜனநாயக முற்போக்கு இடதுசாரிகள் தேசத்துரோகிகளாக 'சிங்களப் புலிகளாக' முத்திரை குத்தப்பட்டு ஓரம் கட்டப்பட்டுள்ளன.

இதனால் யுத்தத்தை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்திற்கு ஆதரவான சூழ்நிலை இருக்கிறது. மக்களின் பேரவலம், அழிவு என்பவை காரணமாக யுத்தத்திற்கு எதிராகப் பேசும் மனிதாபி மானிகள் "பயங்கரவாதிகளுக்கு" ஆதரவளிப்பவர்களாகவே காட்டப்படுகின்றனர்.

தற்போது மனிதாபிமான உதவிகளை மக்களுக்கு செய்ய வேண்டு மென்று கோருபவர்கள் அரசாங்கத்தின் யுத்தத்தை ஆதரிப்பவர்களல்லர். மக்களின் பேரவலம் போக்கப்படுவதே தற்போதைய உடனடித் தேவை என்ற அடிப்படையிலேயே இக் கோரிக்கை முன்வைக்கப்படுகிறதேயொழிய இராணுவ நடவடிக்கைகளால் அமைதி நிலை நாட்டப்படும் என்ற நம்பிக்கையினால் அல்ல.

அரசாங்கத்தின் இராணுவ முன்னேற்றங்கள் பிரதேசங்களை கைப்பற்றும் நடவடிக்கைகள் போன்றன ஆயுதமோதல் இல்லாத சூழ்நிலையை உருவாக்கப் போவதில்லை. நியாயமான அரசியல் தீர்வு காணப்படாவிட்டால் தொடர்ந்து ஆயுத நடவடிக்கைகள் எதிர்ப்பு நடவடிக்கைகளாகத் தொடரவே செய்யும். அதனால் அரசாங்கத்தின் தற்போதைய இராணுவ நடவடிக்கைகள் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்க முடியாது.

யுத்தத்தின் மூலம் தீர்வு என்பது தேசிய இனப்பிரச்சினையைப் பயங்கரவாதமாகக் காட்டி சிங்கள மக்களைத் திசை திருப்பி வைத்து தொடர்ந்தும் ஆட்சி அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் உள்நோக்கம் கொண்டதேயாகும்.

---

## நாலு நடக்கும் உலகிலே

நற்குணன்

### கேட்ட ஞாபகம் இல்லையோ?

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினராக 1977ல் தெரிவு செய்யப்பட்டு ஒரு சில வருட இடைவெளி போகத் தமிழ்த் தேசியவாதிகளின் பாரா ளுமன்ற உறுப்பினராக இருந்து வந்திருக்கும் இரா. சம்பந்தன் செப்டெம்பர் மாதம் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் தாங்கள் என்றுமே பிரிவினை கேட்கவில்லை என்று சொல்லியிருக்கிறார். இது டெய்லி மிரர் ஏட்டில் கொட்டை எழுத்தில் பிரகரிக்கப்பட்டிருந்தது.

உண்மையாகவே அவர்கள் கேட்கவில்லை என்றால் 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானம் ஒரு ஏமாற்று விளையாட்டா? 1977 தேர்தல் வரையிலான பிரசாரம் எல்லாம் என்ன தமிழ் மக்களைப் பேய்க்காட்டுகிற ஒரு நாடகமா? அவர்கள் கேட்கவில்லை என்று இரா. சம்பந்தன் சொல்வது பொய். அவர்கள் உண்மையில் பிரிவினைக்கு ஆயத்தமாக இருக்கவில்லை என்பதும் உண்மை. அவர்கள் அந்தரங்க சுத்தியுடன் தமிழ் ஈழக் கோரிக்கையை முன் வைக்கவில்லை என்பதும் உண்மை. சம்பந்தன் அந்த உண்மைக்ளைச் சொல்லாமல் மொட்டையாகத் தாங்கள் என்றுமே பிரிவினை கேட்கவில்லை என்று ஏன் பொய். சொல்ல வேண்டும்? அவருக்கு மறதியாக இருக்காது. தமிழ் மக்களுக்கு மறதி அதிகம் என்று அவர் நம்புகிறதால் அப்படிச் சொல்லியிருப்பார் போலத் தெரிகிறது. ஆனால் அவர்கள் நாடகமாடுகிறார்கள் என்பதை மாக்சிச லெனினிசவாதிகளுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி 1976 முதல் நடத்தி வந்த சில விவாதங்களின் மூலம் அன்று அம்பலமாக்கப்பட்டதையும் மேற்கொண்டு விவாதம் வேண்டாம் என்று அமிர்தலிங்கம் தடை விதித்ததையும் இப் போது நினைவு கூராமல் இழுக்க இயலுமா?

### அதே கதை

பழைய பலஸ்தீன நாட்குறிப்பொன்றைப் புரட்டிப் பார்த்த போது பின்வரும் மேற்கொள் இருந்தது:

"அதிகரிக்கப்பட்ட (யூத) குடியேற்றம் போரில் நாம் வென்றவற்றுக்கு வலிமை தரும். பிரதேசங்களைக் கைப்பற்றுவது போதாது அங்கே நாங்கள் குடியேற்றவும் வேண்டும்." 11. 9. 67 அன்று இஸ்ரேலிய அயல் அமைச்சர் அபா எபான் பேசியது.

காலம் இடம் என்பன வேறு. ஆனாற் பேர்களை மாற்றிப் போட்டுப் பாருங்கள் எங்கேயெல்லாம் பொருந்தி வருகின்றன?

### சில நேரங்களில் சில மனிதர்கள்

வான்படைத் தளபதியாயிருந்த ஹரி குணதிலக்கவின் மூத்த மகன் வான்படையிற் பணியாற்றி பத்து ஆண்டுகட்கும் சிறிது முன்னர் போரில் இறந்தார். அதன் பின்பு ஹரி குணதிலக்க போருக்கு எதிரான பிரசாரத்தில் மிகத் தீவிரமாயிருந்தார். அவரது கட்டுரைகளைத் தமிழ்த் தேசியவாத ஏடுகள் பல முறையும் பிரசுரித்துள்ளன.

சில காலம் முன்பு அவரது இளைய மகன் றொஹன் குணதிலக்க வான்படைத் தளபதியாகப் பொறுப்பேற்ற பின்பு அவரது போர் எதிர்ப்பு மங்கி இலங்கை அரசாங்கத்தின் போர் முயற்சிகளை மெச்சிப் பேசத் தொடங்கிவிட்டார். இப்போது அவரது இளைய மகன் ராணுவத் தளபதிக்குச் சற்றுஞ் சளையாத விதமாகப் போரை இறுதி வெற்றி வரை கொண்டு நடத்துவதாக சூளுரைத்துப் பேசி வருகிறார். இது வான் படையின் அண்மைக்காலப் பாதுகாப்புக் குழறுபடிகளை மூடிமறைக்கும் முயற்சியா அல்லது பேரினவாத அரசியலின் வெளிப்பாடா என்று சொல்வது கடினம்.

அரசியல் நிலைப்பாடு என்று ஒன்று அல்லாத மனிதர் தமது உடனடியான சூழ்நிலைகட்கேற்பத் தங்கள் நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்கிறார்கள் என்று தான் கூற வேண்டும்.

### பெண்ணுரிமைக்கு வெற்றியா?

இஸ்ரேலின் புதிய பிரதமர் ஒரு பெண்- இஸ்ரேலின் உளவு நிறுவனமான மொசாடில் பணியாற்றிய இவர் ஒரு தீவிர ஸியோனிசவாதி. இப்போது இவர் பதவிக்கு வந்துள் ளதால் நிலைமைகள் மாறுமா? இவரது கடினா கட்சியின் தலைமையிலான ஆட்சியின் கீழ் பலஸ்தீன மக்கள் குறிப்பாக காஸாவில் வாழும் சாதாரண மக்கள் மிகுந்த கொடுமைகட்கு உட்பட்டிருக்கின்றனர்.

இந்தப் பெண் பிரதமரால் பலஸ்தீனத்தின் பல லட்சக் கணக்கான பெண்கட்கு ஏதாவது விமோசனம் கிட்டுமா?

பிரதமர் ஆணா பெண்ணா என்பதை விட அதிகாரத்தில் உள்ளது எந்த வர்க்கம் அதன் அரசியல் நோக்கு என்ன என்பன அதிகம் முக்கியமானவை

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# கிழக்கில் "மீட்கப்பட்ட ஜனநாயகமும்" தொடரும் மனித உரிமை மீறலும்

சண்முகம்

கிழக்கு மாகாணம் அரசாங்கப் படைகளால் மீட்கப்பட்டு அங்கு தேர்தல் நடாத்தப்பட்டு மாகாண சபை உள்ளூராட் சபைகள் இயங்குவதாக அரசாங்கப் பரப்புரைகள் தொடர்ந்து வாசிக்கப்பட்டு வருகின்றன. சார்க் மாநாட்டிலும் ஐ.நா. சபை உரையிலும் ஜனாதிபதியால் மேற்படி விடயம் ஒரு சதானையாகச் சுட்டிக் காட்டப்பட்டது. அவ்வாறு நடந்திருந்தால் எல்லோரும் மகிழ்ச்சி மட்டுமன்றி நிம்மதிப் பெருமூச்சும் விட்டிருக்கலாம். ஆனால் கிழக்கின் நிலைமை அவ்வாறு இல்லை என்பதையே அங்கு இடம் பெறும் அன்றாட நிகழ்வுகள் நமக்கு எடுத்துச் சொல்கின்றன. கிழக்கில் படை நடவடிக்கையின் போது புலிகள் இயக்கம் தமது பலத்தைப் பாதுகாக்கும் நோக்கில் பின்வாங்கிச் சென்றார்கள். அவர்களுக்கு அரசாங்கப் படைகளுடனும் தங்களில் இருந்து பிரிந்து சென்று படையினருடன் இணைந்த குழுவுடனும் மோதினால் அழிவுகள் இழப்புக்கள் ஏற்படும் என்ற நிலையில் பின்வாங்கிச் செல்லும் உக்தியைக் கையாண்டனர். அது அவர்களது வடக்கின் இருப்பிற்கும் அவசிய மாகியது. அதனால் கிழக்கை அரசாங்கம் தனது படைகளின் நகர்வு நடவடிக்கைகள் மூலம் மீட்டுக் கொண்டது.

அதன் பின் அங்கு தேர்தல் நடந்ததும் உள்ளூராட்சி மாகாணசபைகளில் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததும் இடம் பெற்றன. மகிந்த சிந்தனை அரசாங்கம் தனது பேரினவாத நிலைப்பாட்டின் அடிப்படையில் தமது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் சின்னத்திலேயே தேர்தலில் போட்டியிட்டது. புலிகளில் இருந்து பிரிந்த கருணா- பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களும் முஸ்லீம் காங்கிரசிலிருந்த பிரித்தெடுக்கப்பட்டவர்களும் ஐ.ம.சு. முன்னணியின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டு பதவிக்கு வந்தனர். முதலமைச்சராகப் பிள்ளையான் எனப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தனும் சுகாதார மற்றும் முக்கிய துறைகளைக் கொண்ட அமைச்சராக ஹிஸ்புல்லாவும் வந்தனர்.

இதன் மூலம் கிழக்கில் ஜனநாயகம் பட்டொளி வீசிப் பறப்பதாகவும் அபிவிருத்தி துரித கதியில் மேற்கொள்ளப் படுவதாகவும் பரப்புரைகள் இடம் பெறுகின்றன. ஆனால் அவை சொல்லப்படும் வகையில் இடம் பெறுகின்றனவா என்பதே எழுப்பப்படும் கேள்வியாகும். அபிவிருத்தி எனக் கூறப்படுவது மூன்று நிலைகளில் காணப்படுகின்றன. ஒன்று அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்பிருந்தும் மீட்பிற்குப் பின் இருந்தும் முன்னெடுத்து வரும் செயற்பாடுகளாகும். அவை கூடியளவு வீட்டுத் திட்டங்கள் பாடசாலைக் கட்டிடங்கள் போன்றவையாகும். இவைகளில் சுனாமி அழிவுக்குள்ளான மக்களுக்குரியவைகளும் இன்றைய அபிவிருத்தி என்றே காட்டப்படுகிறது. இரண்டாவது, மாகாணசபை உள்ளூராட்சி சபைகள் தமக்குள்ள நிதியினைக் கொண்டு முன்னெடுக்க முயற்சிக்கும் திட்டங்களாகும். இதில் முக்கியமாக வீதிகள் பாலங்கள் புனரமைப்புகளாகும். இதில் அரசாங்கம் சம்மந்தப்படுவதுடன் உள்ளார்ந்த பேரினவாதத்திட்டங்களும் உள்ளடங்கும். அதாவது திட்டமிட்ட வகையிலான நிலச் சுகவீகரிப்பு அல்லது அரச நிலங்கள் பகிர்ந்தளிப்பு என்பனவற்றுடன் திட்டமிட்டே குடியேற்றங்களும் விகாரைகள் புதிதாக நிறுவதும் புதிப்பிப்பதும் இடம் பெறவே செய்கின்றன. இதில் ஜே.வி.பி ஹெறல உறுமய மற்றும் பௌத்த அமைப்புக்கள் நேரடியாகவே சம்பந்தப்பட்டும் வருகின்றன. மூன்றாவது அந்நிய மூலதனம் கிழக்கில் புகுந்து வருகின்றன. திருகோணமலையில் இந்தியாவின் அனல் மின் நிலையம் அமைக்க பல நூறு ஏக்கர் நிலங்கள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் கிழக்கின் கரையோரங்களில் உல்லாசத்துறை அபிவிருத்தி எனக் கூறி ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்பட உள்ளன.

ஆனால் கிழக்கில் அதன் நில நீர் மனித வளங்களின் ஆற்றலுக்கு ஏற்றவாறான விவசாய மீண்பிடி அபிவிருத்தி என்பது திட்டமிட்டதாக முன்னெடுக்கப்படவில்லை.

இவையனைத்திற்கும் மக்களின் மீளக்குடியமர்வும் அவர்களது இழப்புகளுக்குரிய இழப்பீட்டு நிவாரணங்களும் உரியவாறு வழங்கப்படவில்லை. இதனால் ஏற்கனவே நொந்து கெட்ட நிலையில் வாழ்ந்து வந்ததிலும் மோசமான வாழ் நிலையிலேயே கிழக்கின் உழைக்கும் மக்கள் வாழ்கின்றனர். விவசாயிகளும் மீனவர்களுமான அம் மக்கள் ஏதோ தமது சொந்த இடங்களில் வாழச் சென்றாலும் அங்கெல்லாம் அச்சத்துடன் பீதியுடன் தான் வாழ வேண்டியுள்ளது. கொலைகள் ஆட்கடத்தல்கள் முடிவுக்கு வரவில்லை. மாற்றுக் கருத்துடையோர் அல்லது அவர்களது குடும்பத்தினர் கொலைகளுக்கும் ஆட்கடத்தல்களுக்கும் தாக்குதல்களுக்கும் ஆளாகி வரும் போக்கு கிழக்கில் தொடர்ந்த வண்ணம் உள்ளது. புலிகளைப் பயங்கரவாதிகள் எனக் கூறி அவர்களை ஒழிக்க நிற்கும் அரசாங்கம் அதே புலிகள் இயக்கத்தில் இருந்த போது மனித உரிமை மீறல்களிலும் ஜனநாயக விரோத செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்தவர்களில் ஒரு பிரிவினரைக் கொண்டே இப்போது கிழக்கில் ஜனநாயகத்தை நிலை நாட்டி வருவதாகக் கூறுவது தான் வேடிக்கையானது. அவர்கள் ஜனநாயக நீரோட்டத்திற்கு சகல வகை ஆயுதங்களுடனும் வந்துள்ளார்கள். எனவே இலங்கையின் தற்போதைய ஜனநாயகத்தில் ஆயுதங்களும் பாதாள உலகமும் பிரிக்க முடியாத பகுதி என்பதையே நிலைமைகள் எடுத்துக் காட்டுகின்றன. இது முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சியின் வளர்ச்சியாகும்.

எனவே கிழக்கில் ஜனநாயக மீட்பு அபிவிருத்தி என்பதெல்லாம் ஒருவகைப் பிரச்சாரப் புகைத்திரையேயாகும். தேசிய இனப் பிரச்சினைக்கு உரிய சுயாட்சித் தீர்வு ஏற்படாதவரை உண்மையான அதிகாரப் பகிர்வு நடைமுறைக்கு வராதவரை கிழக்கின் மக்கள் உண்மையான சுதந்திரம் ஜனநாயகம் சமாதானம் அபிவிருத்தி சுபீட்சம் போன்றவற்றை அடைய முடியாது என்பதே கிழக்கின் யதார்த்தமாக உள்ளது.

# மலையகத்தில் இப்படி நடந்தது

தோட்ட தபால்சேவை தேசிய தபால் சேவையுடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும் தோட்டங்களில் நேரடி தபால் விநியோகம் செய்யப்படுவதாகவும் கூறப்பட்டு வருகிறது. தபால் தொடர்பு பிரதியமைச்சராக இ.தொ.கா வின் உபதலைவர்களில் ஒருவரான எம்.எஸ் செல்லசாமி இருக்கிறார். ஆனால் உரிய விலாசத்திற்கு நேரடியாகத் தபால் விநியோகிக்கும் நடைமுறை அங்கு இல்லை. இதனால் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மலையக மாணவனுக்கு உரியகாலத்தில் கடிதம் கிடைக்காததால் உரிய காலத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு ஆவணங்களை சமர்ப்பிக்க முடியவில்லை. அதனால் அம் மாணவன் பல்கலைக்கழக அனுமதியை இழந்துள்ளார். அவருக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அனுப்பப்பட்டிருந்த கடிதம் அவரது வசிக்கும் தோட்டக் காரியாலயத்திலேயே இரண்டு மாதங்களாகத் தேங்கிக் கிடந்திருக்கிறது. அவரிடம் அக்கடிதம் நேரடியாக சேர்ப்பிக்கப்படவில்லை.

இலங்கையின் நகரங்களிலும், கிராமங்களிலும் வாழ்பவர்களுக்கான கடிதங்கள் நேரடியாக அவர்களது வீடுகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. தோட்டப் புறங்களில் மட்டும் அந்த நடைமுறை இல்லை. சில தோட்டங்களில் காரியாலயங்களிலுள்ள தபால் பெட்டிகளிலேயே அவை தேங்கிக் கிடக்கும். சில தோட்டங்களில் கொழுந்து நிறுக்கப்படும் மடுவங்களில் வைத்து விநியோகிக்கப்படும்.

தபால் நேரடியாக விநியோகிக்கப்படாததால் பெல்மதுல ஒப்பாத்த தோட்டத்தை சேர்ந்த மேற்படி மாணவன் ஒருவரே பல்கலைக்கழக அனுமதி வாய்ப்பை இழந்துள்ளார். இவ்வாறு கடிதங்கள் நேரடியாக விநியோகிக்கப்படாததால் நேர்முகப் பரீட்சை வாய்ப்பை இழந்தவர்களும், வேலை வாய்ப்பை இழந்தவர்களும் நிறைய மலையகத் தோட்டங்களில் இருக்கிறார்கள்.

மலையகம் முன்னேறிவிட்டது என்று கூறிக்கொள்வதில் சிலருக்கு பெருமை. ஆனால் சாதாரணமான கடிதம் கூட விநியோகிக்கப்படுவதில்லை. தோட்டக்குடியிருப்புகள் கிராம நகர குடியிருப்புகள் போன்று கணிக்கப்பட்டு வீடுகளுக்கு இலக்கம் கொடுக்கப்பட்டு விலாசம் கொடுக்கப்படவில்லை. அதனால் பெருந்தோட்டங்களில் வாழ்வோர் இன்னும் விலாசம் அற்றவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். இப் பரிதாப நிலை எப்போதுமாறும்?

# சட்டத்தரணி வெலியம்முன வீட்டின் மீது கைக்குண்டு தாக்குதலுக்கு கண்டனம்

அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பான வழக்குகளில் ஆஜராகும் சட்டத்தரணி எஸ்.பி வெலியம்முனவின் வீட்டிற்கு கைக்குண்டு எறியப்பட்டுள்ளது. அவர் ஆஜராகும் வழக்கின் மனுதாரர் சில நாட்களுக்கு முன்பு சுட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அவரின் மரணத்திற்கு நீர்கொழும்பு பொலீஸ் பொறுப்பதிகாரியும் உதவி பரிசோதகரும், சார்ஜண்டும் காரணமென கொல்லப்பட்டவரின் மனைவி தெரிவித்துள்ளார். அவர் நீர்கொழும்பு பொலிஸாருக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் அவ்வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்ளும்படி வலியுறுத்தி அவர் பயமுறுத்தப்பட்டு எச்சரிக்கப்பட்டதாகவும் அவர் அவ்வழக்கை வாபஸ் பெறாதபடியாலேயே சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் கொல்லப்பட்டப் பின்னர் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மேற்படி விடயங்களை சட்டத்தரணி வெலியம்முன உயர்நீதிமன்றத்துக்கு எடுத்துக் கூறியுள்ளார். அதற்கு எதிரொலியாக அவரின் வீட்டின் மீது குண்டெறியப்பட்டிருக்கலாம் என்றே கூறப்படுகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சட்டத்தரணி உயர்நீதிமன்றத்தின் முன்னால் சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டமொன்றைச் செய்துள்ளனர்.

சட்டத்தரணிகள் இதற்கு முன்பும் தாக்கப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் அதற்கான எதிர்ப்புகள் பெரிதாகக் காட்டப்படவில்லை. இலங்கையின் சட்டத்தரணிகள் அரசியல் கட்சிகள் சார்ந்தும், சாராமலும் இருக்கின்றனர். அவர்கள் மக்களின் ஜனநாயகம், மனித உரிமைகள், நீதி தொடர்பாக சுதந்திரமாக ஒரு சமூகமாக அக்கறை கொள்வதில்லை. அவர்களது சேவைகள் வழக்குகளை நடத்துவதுடன் வரையறுக்கப்பட்டே இருக்கின்றன. அவர்கள் மீது அடக்குமுறைகளும் ஒடுக்குமுறைகளும் இருக்கின்றன என்பதை அவர்கள் கண்டுகொள்வதும் இல்லை. அதற்கு எதிராக ஒரு சமூகமாக குரல் கொடுப்பதும் இல்லை. செயற்படுவதுமில்லை. வெலியம்முனவின் வீட்டின் மீதான தாக்குதல் இனியும் சட்டத்தரணிகள் அவ்வாறு இருந்து விடமுடியாது என்பதை எடுத்துக் காட்டுகிறது. உரிய செயற்பாடுகளில் சட்டத்தரணிகள் இறங்க வேண்டும். இறங்குவார்களா?

இலங்கைச் சட்டத்தரணிகள் பாகிஸ்தான், இந்தியச் சட்டத்தரணிகளின் சமூக செயற்பாட்டை அவதானிப்பது அவசியமாகும். நீதித்துறை இத்தகைய மிரட்டல் தாக்குதல் போன்றவற்றுக்கு முகம் கொடுப்பதாயின் சட்டத்தரணிகள் ஒன்றுபட்டு எதிர்த்து நிற்பது இன்றைய தேவையாகும்.

# வன்னி மக்களை வாட்டி வதைக்காதே

## புதிய- ஜனநாயக் கட்சி வற்புறுத்தல்

வன்னிப் பிரதேசம் மீது நடாத்தப்பட்டு வரும் தரை ஆகாயத் தாக்குதல்களால் சுமார் இரண்டரை லட்சம் வரையான மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாகி அல்லற்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு உணவுப் பொருட்களும் மருந்து வகைகளும் அவசியத் தேவைகளாக உள்ளன. குழந்தைகள் பால்மா இன்றித் தவிக்கின்றனர். நோயாளர்கள் உரிய சிகிச்சைகள் கிடைக்காமையால் அவதியுறுகின்றனர். மக்கள் மரங்களின் கீழும் வயல் வெளிகளிலும் காடுகளிடையேயும் அன்றாட வாழ்வைக் கழித்து வருகின்றனர். யுத்தத்தில் வெற்றி பெறுவதற்காக உணவையும் மருந்தையும் ஆயுதங்களாகப் பயன்படுத்துவதை அரசாங்கம் உடன் நிறுத்த வேண்டும். வன்னி மக்களைப் பட்டினி போட்டுப் பழிவாங்கும் செயற்பாட்டை அரசாங்கம் உடன் நிறுத்தி அவர்களுக்குரிய அத்தியாவசிய உணவு மருந்து பால்மா என்பனவற்றை அவசரமாக அங்கு அனுப்பி வைக்க வேண்டும் எனப் புதிய- ஜனநாயக கட்சி வற்புறுத்திக் கேட்டு கொள்கின்றது.

இவ்வாறு புதிய- ஜனநாயக கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில், இன்று கிளிநொச்சியைக் கைப்பற்றுவதிலும் வன்னியை மீட்பதிலும் யுத்தம் முனைப் பாக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியும் அமைச்சர்களும் அதனை நியாயப் படுத்துவதில் முழு மூச்சாக உள்ளனர். ஆனால் இதுவரையான படை நடவடிக்கைகளின் உக்கிரத்தினால் சுமார் இரண்டரை லட்சம் மக்கள் இடம் பெயர்ந்து உணவு உடை இருப்பிடமின்றி குழந்தைகளுக்கு பால்மா கொடுக்க முடியாமலும் நோயாளர்களுக்கு உரிய மருந்துகள் இன்றியும் நிர்க்கதிக்குள்ளாகி நிற்கின்றனர். பௌத்த தர்மம் பேசும் ஜனாதிபதியும் அமைச்சர்களும் இந்த மனித அவலம் பற்றி அக்கறை காட்டாது இருந்து வருகின்றனர். வன்னிக்குள் பரிதவிக்கும் தமிழ் மக்கள் இந் நாட்டுப் பிரசைகள் இல்லையா? அவர்களைப் பட்டினி போட்டுப் பழிவாங்க நிற்பதனை ஜனநாயகம் என்பதா அல்லது பௌத்த தர்மம் எனக் கொள்வதா? மகிந்த சிந்தனை என்பது இன்று யுத்த சிந்தனையாகி நிற்பதையே காண முடிகின்றது. எனவே வன்னி மக்கள் படும் அவலம் நீக்கவென ஊருக்குப் பெயருக்காக ஒரு சில லொறிகளில் குறைந்தளவு உணவுப்பொருட்களை அனுப்பாது அம் மக்களுக்குத் தேவைப்படும் போதிய அத்தியாவசிய உணவு மருந்துவகைகளை அனுப்ப அரசாங்கம் விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையையே வற்புறுத்துகின்றோம்.

அதேவேளை கிளிநொச்சியைக் கைப்பற்றவும் வன்னியை மீட்கவும் நடாத்தி வரும் யுத்தத்தின் மூலம் யுத்தத்திற்குக் காரணமான தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விட முடியாது என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம். சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவரும் கலந்து கொள்ளக் கூடிய விரிவான பேச்சுவார்த்தை மூலம் உடன்பாடு காணப்படும் நியாமான அரசியல் தீர்வே யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர உள்ள வழிமுறையாகும். அத்தகைய அரசியல் தீர்வே தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி நாட்டிற்கும் அனைத்து மக்களுக்கும் அவசியமாகின்றது. அதன் மூலம் ஐக்கியப்பட்ட இலங்கையில் பல்லினங்களும் சமாதானம் அமைதியுடன் இணைந்து வாழும் புதிய சூழல் தோன்ற முடியும் என எமது கட்சி திடமாக நம்புகின்றது என்றும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

30-09-2008

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ. சந்திரசேகரம் தோட்டத் தொழிற்சங்கங்களுக்கும் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்துக்குமிடையில் ஏற்படுத்தப்பட்டு நடைமுறையில் இருக்கும் கூட்டு ஒப்பந்தத்தை கிழித் தெறிய வேண்டுமென கூறியுள்ளார். இக்கூற்று ஆச்சரியத்தை தருகிறது. காரணம் கடந்த வருடம் தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரி பாரிய போராட்டங்களில் ஈடுபட்டபோது அவர்களின் போராட்டங்களுடன் இணைந்திருப்பதாகக் காட்டிக் கொண்டு பின்னர் அற்ப சம்பள உயர் வினை பெற்றுக் கொள்ள ஒத்துழைத்த இ.தொ.கா வினைப் பாராட்டினார் என்பது குறிப்பிடத் தக்கது.

# கூட்டு ஒப்பந்தம் பற்றி பேசத் தகுதி இல்லாதவர்கள்

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கள் நேரடியாக தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கான போராட்டத்தை காட்டிக் கொடுத்தன. அதில் இ.தொ.கா, இ.தே.தோ.தொ சங்கம் (ஐ.தே. கட்சியின் சங்கம்) பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி (சில இடதுசாரி தொழிற்சங்கங்கள்) என்பன கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு வருகின்றன என்பது தெரிந்ததே.

இதை விட கூட்டு ஒப்பந்தத்தை எதிர்ப்பதாக வீராவேசம் பேசும் சில தொழிற்சங்கத் தலைவர்களும் இருக்கிறார்கள். ஆனால் அவர்களும் அரசாங்கத்துடனேயே ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் வீராவேசப் பேச்சுகளும் ஒரு விதமான பிழைப்பு வாதமே. அரசியல் தொழிற்சங்கப் போட்டியில் தங்களை தக்கவைத்துக் கொள்வதற்காகவே பேசுகிறார்களேயன்றி இதயசுத்தியுடனல்ல.

கூட்டு ஒப்பந்தம் என்பது தொழிலாளர்களின் சம்பள உயர்வு போன்ற உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இருக்கின்ற ஒரு வழி முறையாகும். அதனை சரியாக தொழி லாளர்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் ஆக்கிக்கொள்வது தொழிற் சங்கங்களின் சக்தியிலேயே தங்கி இருக்கிறது.

# மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தின் 3வது ஆண்டு நிறைவு

இம் மாதம் (ஒக்டோபர்) 2 ஆம் திகதியுடன் மேல் கொத்மலை திட்டத்திற்கு எதி ரான மக்கள் இயக்கத்தின் செப்டெம்பர் இயக்கத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவடைகிறது. மேல் கொத்மலைத்திட்டத்தை எதிர்த்து பாரிய மக்கள் இயக்கங்கள் முன்னெடுக்கப்பட்டன. 27 ஏப்ரல் 2005 அன்று பொகவந்தலாவை நகரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மே- 2005 அன்று தலவாக்கொல்லையில் எதிர்ப்பு கூட்டமும் ஊர்வலமும் நடைபெற்றது.

மே 15 ஆம் திகதி மலையகமெங்கும் எதிர்ப்பு இயக்கங்கள் முன்னெடுக்கப்பட்டு நாளாந்த நடவடிக்கைகள் யாவும் முடக்கப்பட்டன. இதனை தொடர்ந்து யூன் 3 ஆம் திகதி கொழும்பு கோட்டை ரயில்வே நிலையத்தின் முன்பாக ஆர்ப்பாட்ட இயக்கம் முன்னெடுக்கப்பட்டது.

செப்டெம்பர் மாதம் முழுவதும் எதிர்ப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அத்திட்டத்திற்கு நிதியுதவி செய்யும் ஜப்பான் அரசாங்கத்திடமும் எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன. கொழும்பிலுள்ள ஜப்பான் தூதுவராலயத்தில் மகஜரொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

செப்டெம்பர் மாத எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்டிருந்த பல செயற்பாட்டாளர்கள் எதிர்ப்புகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஆளாகியிருந்தனர். போஸ்டர் இயக்கத்தில் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டது செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதி தலவாக்கொல்லை கதிரேசன் கோவில் மண்டபத்தில் எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது.

செப்டெம்பர்மாத நிறைவு நிகழ்வாக தலவாக்கொல்லை நகரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களைக் காடையர்கள் தாக்கினர். இது அரசாங்கத் தினதும் பேரினவாதிகளினதும் திட்டமிட்ட நடவடிக்கை ஆகும்.

இந்த எதிர்ப்பு இயக்கங்களில் கலந்து கொண்ட மக்களை பிற்போக்கு மலையக தொழிற் சங்கத் தலைமைகள் திசைத்திருப்பி அழிவு நிறைந்த அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கத்திற்கு ஆதரவளித்தன. அத்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதனால் ஏற்படுகின்ற சூழலியல் பாதிப்புகளுக்கு மக்கள் முகம் கொடுத்து வருகின்றனர். அதனால் பாதிக்கப்பட்டு இடம் பெயரும் மக்களுக்கு வசதியான வீட்டுடன் காணியும் நட்டஈடும் வழங்கப்படும் என்று வாக்குறுதியளிக்கப்பட்டது. அவ்வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. அன்று எதிர்ப்பியக் கத்திற்கு எதிராக செயற்பட்டவர்கள் இன்று ஏற்படும் பாதிப்புகளுக்காக வருந்துகிறார்கள். ஆனால் எதிர்ப்பியக்கத்துடன் இணையவோ அதனைப் பலப்படுத்தவோ முன்வராது காட்டிக் கொடுத்த மலையகத் தலைமைகளிடமே நிவாரணம் கோரி மண்டியிடுகின்றனர். எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்ட சில தொழிற்சங்கத் தலைவர்கள் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டு சலுகைகள் பெற்று வாழ்கின்றனர்.

எதிர்ப்பியக்கத்தில் ஈடுபட்ட எந்தவொரு இடதுசாரி அமைப்பும் போராட்டத்தை காட்டிக் கொடுக்கவில்லை. அவ்வியக்கத்தில் முன்னணியில் இருந்த புதிய- ஜன நாயக கட்சியின் ஐந்து தோழர்கள் சில புகையிரத் தொழிற் சங்கத் தோழர்கள் சில நடமாடும் கலைஞர்கள் அக்குன பத்திரிகையாளர்கள் கடந்த 20 மாதங்களுக்கு முன்பு அவசரகால சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு இன்னும் எவ்வித நீதி விசாரணையுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மக்களும் மக்களின் சார்பில் போராடியவர்களும் அடக்குமுறைகளுக்குள்ளாகி இருக்கின்றனர். மக்களைக் காட்டிக் கொடுத்த மலையகத் தலைமைகள் சலுகைகள் அனுபவிக்கின்றனர். இது தான் மலையகத் தலைமைகளின் இலட்சணம்.

## நாளைக்காக

பட்டுத்தெளிவதே வாழ்க்கையென்பதால்
பாதியில் சாவதா?
வாழ்ந்தே தீர்வதென சபதமெடுப்போம்.
குழியில் வீழ்ந்தாலும் மண்ணெடுப்போம்
குடிசையாவது கட்டுவோம்.
பாதுகாப்போம்.
வாழும் பரம்பரை வளர்ப்போம்
நாளையை அவர்களிடம்
ஒப்படைக்கும் வரை ஓயோம்.

**மலைமகள்**

## வரலாறு அறியும்

கசப்பான வாழ்க்கை
வாடிக்கையாகி விட்டதால்
எம் மக்களால் நீங்கள்
பூரணமாக வெறுக்கப்படவில்லை.
அதனால் உங்கள்
பூரண கும்ப வரவேற்பில்
நாங்கள் விழுந்து விடுகிறோம்
நீங்கள் இனிக்காத தேன்
என்பதை மக்களறிவார்கள்
உம் வார்த்தைகள்
இனிக்கும் விஷம்
என்பதையும் அவர்களறிவார்கள்.
காட்சி மயக்கங்களால்
அவர்கள் இன்னலுறுகிறார்கள்.

மயக்கங்களின் ஆயுளுக்கும்
தெளிவின் தெரிவுகளுக் குமிடையே
உள்ள வேறுபாடுகளை
வரலாறு அறியும்
சரித்திரம் அடக்கமுள்ள
நல்லாசான்.

**வே. தினகரன்.**




இலங்கை முதலாளிமார் சம்மேளத்துடன் கூட்டு ஒப்பந்தத்தை செய்து கொண்டு கையெழுத்திட்ட தொழிற்சங் கங்களை தவிர ஏனையவை கூட்டு ஒப்பந்தத்தை கிழித்தெறிய வேண்டும் என்று பரபரப்பான அறிக்கைகளை விடுத்துவருகின்றன. கூட்டு ஒப்பந்தத்தில் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறைதான் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு பற்றி தீர்மானிக்கப்படலாம் என்ற காலவரையறை இருக்கிறது என்பதால் அவ்வொப்பந்தமே சம்பள உயர்வை கேட்பதற்கு தடையாக இருப்பதாக அத்தொழிற்சங்கங்களின் தலைவர்கள் கூறுகின்றனர். சதாசிவம் தலைமையிலான இ.தொ.ஜ முன்னணியும், தொ.தே. சங்கமும் கூட்டு ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தன. சட்டப்படி அதனை ரத்து செய்ய முடியாது என்று தெரிந்து கொண்டும் பிரசார நோக்கத்திற்காக அவ்வழக்கை தொடுத்தன. அவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட கதையை அத் தொழிற்சங்கங்கள் வெளியில் சொல்லமுடியாத அளவிற்கு வாயடைத்துப் போயுள்ளன.

பெரும் எண்ணிக்கையான தேயிலை றப்பர் தோட்டங்கள் 22 தனியார் கம்பெனிகளினால் நடத்தப்படுகின்றன. தனியார்துறை தொழிலாளர்களின் சம்பள விடயத்தை அரசாங்க சம்பளநிர்ணய சபை நடவடிக்கைகளினூடாக தீர்க்கப்பட வேண்டும் அல்லது கம்பெனிகளுக்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையிலான பேரப்பேச்சினூடாக செய்து கொள்ளப்படும் கூட்டு ஒப்பந்தத்தினூடாக தீர்க்கப்பட வேண்டும். இந்த இரண்டு வழிவகைகளை தவிர வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

பேரப்பேச்சில் தொழிற்சங்கங்கள் பலமாக இருப்பதன் மூலமே அதிகபட்ச சம்பள உயர்வை பெறமுடியும் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பு வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு காரணமாக சம்பளத்தை மீளாய்வு செய்வதாயின் தொழிற்சங்கங்களின் பேரப்பேச்சின் பலமிருக்க வேண்டும். அப்பலம் தொழிலாளர்களிடையேயும் தொழிற் சங்கங்களிடையேயும் ஐக்கியமும் புரிந்துணர்வு இருப்பதன் மூலமே உறுதி செய்யப்படும்.

எனவே செய்யப்பட வேண்டியது யாதெனில் தொழிலாளர்களின் நலன்களை உறுதி செய்யும் வகையில் கூட்டு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதேயன்றி கூட்டு ஒப்பந்தத்தை எதிர்த்து அறிக்கை விட்டுக் கொண்டிருப்பதல்ல. தொழிலாளர்களின் ஐக்கியப்பட்ட போராட்ட நடவடிக்கைகளுக்கூடாக தொழிற்சங்க இயக்கத்தை பலப்படுத்தி பேரம்பேசும் சக்தியை அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

பூகோளமயமாதல் சூழ்நிலையில் அரசாங்கங்கள் அவற்றின் பொறுப்பை நாளுக்கு நாள் கையுதிர்த்துக் கொண்டு போகின்றன. பல்தேசிய கம்பெனிகள் பலமடைகின்றன. அரசாங்கம் அவற்றின் பக்கம் நிற்கின்றது. தொழிற்சங்கங்களின் சக்தி பல வழிகளிலும் சிதைக்கப்படுகின்றன. தொழிலாளர்களின் போராட்டங்கள் என்று மில்லாதவாறு நசுக்கப்படுகின்றன. நீதிமன்றங்களின் தீர்ப்புகளை கொண்டு வேலை நிறுத்தம் செய்யும் உரிமை பறிக்கப்படுகின்றன.

இந்த நிலைமைகளை சரியாக மதிப்பிட்டு செயற்படக்கூடிய தொழிற்சங்க இயக்கமே தற்போதைய சூழ் நிலையில் நின்று பிடிக்க முடியும். மலையக தொழிற்சங்கங்களிடம் அவ்வாறான எதிர்பார்ப்பை கொண்டிருக்க முடியாது. ஏனெனில் இ.தொ.கா காலனித்துவத்திற்கு பிற்பட்ட காலத்து நினைப்புகளுடனே இன்றும் இயங்குகிறது.

அதற்குப் போட்டியாகத் தோன்றிய தொழிற்சங்களும் சரி அண்மைக்காலமாக புற்றிசல்கள் போல் புறப்பட்டுள்ள தொழிற்சங்கங்களும் கூட பிழைப்புவாதத்தை அடிப்படையாகக் கொண்டவையே. அவற்றாலும் இன்றைய பூகோளமய சூழ் நிலையில் பலமாக இருக்கும் கம்பெனிகளுடன் போராடி தொழிலாளர் உரிமைகளை உறுதி செய்ய முடியாது. சம்பள உயர்வைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு சங்கத்திலிருந்து இன்னொரு சங்கத்துடன் இணைந்துகொள்வது சரியாகாது. குட்டித் தலைவர்களையும், புதிய தலைவர்களையும் உருவாக்குவதாலும் சம்பளஉயர்வு கிடைக்காது. இன்றைய நிலைமையை சரியாக மதிப்பிட்டு வர்க்க அடிப்படையில் இயங்கும் தொழிற்சங்க இயக்கத்தை கட்டியெழுப்பி பலப்படுத்தி உரிமைப்போராட்டங்களை முன்னெடுப்பதன் மூலமே பேரம் பேசும் பலத்தை வளர்க்க முடியும்.

தொழிற்சங்க சந்தாவை சம்பளத்திலிருக்க பிடித்து தொழிற்சங்கங்களுக்கு அனுப்பிவைப்பதற்காக தொழிலாளர்களிடமிருந்து விண்ணப்பங்களை பெற்று கம்பெனிகளிடம் வருடத்திற்கு இரண்டு முறை சமர்ப்பிக்க முடியும். ஒன்று யூன் மாதத்திலும் மற்றது மார்கழி மாதத்திலுமாகும். இந்த இரண்டு காலகட்டங்களிலும் தொழிற்சங்கத் தலைவர்கள் காரசாரமமான பத்திரிகை அறிக்கைகளை விடுப்பார்கள் தொழிலாளர்கள் மீது அன்பைப் பொழிவார்கள் அன்பளிப்புகளையும் வழங்குவார்கள். ஏனெனில் அங்கத்தவர்களை அதிகரித்துக் கொள்வதற்கும் அதன் மூலம் சந்தா வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்குமாகும். இந்த சந்தா வருமானத்தைக் கொண்டு பிழைப்பு நடத்தும் குட்டித்தலைவர்களும் இருக்கிறார்கள். சுகபோகமாக மிக ஆடம்பரமாக வாழும் பெரிய தலைவர்களும் இருக்கிறார்கள்.

இருக்கின்ற தொழிற்சங்க இயக்கத்தின் இயலாமை தொழிற்சங்கத்தலைவர்களின் பிற்போக்குத்தனம் போன்றன பற்றி விமர்சிப்பது என்பது தொழிற்சங்க இயக்கமே வேண்டாமென்பதாகாது. ஏனெனில் தொழிற்சங்கம் இல்லாமல் தொழிலாளர்கள் வென்றெடுத்துள்ள உரிமைகளை பாதுகாத்துக்கொள்ள முடியாது. குறிப்பாக கூட்டு ஒப்பந்தமாக இருப்பினும் சம்பள நிர்ணய சபையாக இருப்பினும் தனிநபர்களன்றி தொழிற்சங்கங்களே பற்கெடுக்க முடியும். அவற்றினூடாக தொழிலாளர்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

பிற்போக்கு தொழிற்சங்க இயக்கத்தை அம்பலப்படுத்து வேறு தொழிற்சங்க இயக்கத்திற்கு எதிராக செயற்பட்டு தொழிற்சங்க இயக்கத்தை அழிக்கும் நோக்கில் செயற்படுவது வேறு. என்.ஜி. ஓக்கள் முழு தொழிற்சங்க இயக்கத்திற்கும் எதிராகவே செயற்பட்டன. செயற்படுகின்றன. இந்நடவடிக்கை தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிரான சதியாகும். எனவே பிற்போக்கு தலைமைகளிடமிருந்தும் என்.ஜி.ஓக்களிடமிருந்தும் சுதந்திரமான தொழிற்சங்க இயக்கம் கட்டப்படுவதும், பலமாக்கப்படுவதும் இன்றைய மலையகத்திற்கு மிகவும் அவசியமாகும். அதேபோன்று கூட்டுப் பேரப்பேச்சும் இன்றியமையாதாதகிறது. ஆனால் பலமான தொழிற்சங்கப் பேரப்பேச்சே பலனைத் தரும். இதனை உணரவேண்டியவர்கள் தோட்டத்தொழிலாளர்கள் தான் என்பது தான் முக்கியமானதாகும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
சுற்று 15 ஒக்ரோபர் 2008 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 118
இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com, web : www.ndpsl.org.

# இன்னும் எத்தனைகாலம் இப்படிப் பேசுவார்கள்?

"இந்த நாடு சிங்களவர்களுக்கு சொந்தமானது இங்கு சிறுபான்மையாளர்களும் வாழலாம். ஆனால் அவர்கள் கோரிக்கைகளை முன்வைக்கவோ நிபந்தனைகளை விதிக்கவோ முடியாது." என்று இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இந்தக்கூற்று அண்மையில் காலமான முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கவின் கூற்றொன்றை நினைவு படுத்துகிறது. 1994 ஆண்டு அவர் இந்நாட்டில் "சிங்களவர்கள் பெருமரமாவர். அம்மரத்தில் படர்ந்திருக்கும் செடிகொடிகளே சிறுபான்மையினராவார்" என்று கூறினார்.

இந்தக் கூற்றைக் கண்டித்துப் பேசி 1994 ஆம் ஜனாதிபதித்தேர்தலில் வெற்றி பெற்ற சந்திரிகா குமாரணதுங்க இரண்டாவது முறையும் இலங்கையின் ஜனாதிபதியாக வந்தபிறகு "இந்நாட்டின் பூர்வீகக்குடியினர் சிங்களவர்களே ஏனையோர் வந்தேறு குடிகளே" என்று தென்னாபிரிக்காவில் வைத்து கூறியிருந்தார்.

இது சிங்களவர்களுக்கே சொந்தமான நாடு என்று சொல்லப்படுவது இதுதான் முதற்தடவை அல்ல. அதனை மேலே கூறப்பட்டவர்கள் மட்டும் சொல்லவில்லை. பலபேர் சொல்லி வந்தனர். ஆனால் இராணுவ தளபதி இவ்வாறு கூறியிருக்கும் இச் சந்தர்ப்பமே முக்கியமாகிறது. இலங்கை இராணுவப்படையினரின் தாக்குதல்கள் அதிகரித்து ஆதிக்கம் செலுத்தி வரும் இச் சூழ்நிலையில் அவரின் கூற்று கவனத்தை ஈர்க்கிறது.

அரசியல் தீர்விற்கு இடமே இல்லை என்ற அரசாங்கத்தின் நிலைப்பாடு மேலோங்கியிருக்கும்போது 'சிறுபான்மையினர் இங்கு வாழலாம் ஆனால் எந்தக் கோரிக்கைகளையும் முன்வைக்கக் கூடாது' என்று கூறியிருப்பது தமிழ் மக்களுக்கு ஆகக்குறைந்த அதிகாரப்பங்கீட்டுக்கு வழியில்லை என்று கூறியிருப்பதாகவே கொள்ள வேண்டும். அத்துடன் இராணுவத் தளபதியின் அரசியல் நிலைப்பாடு தொடர்பான இக் கூற்றுக்கு ஜனாதிபதியோ அவரின் அரசாங்கமோ எவ்வித கருத்தையும் இன்னும் தெரிவிக்கவில்லை. அப்படியே தெரிவித்தாலும் அது அவரின் சொந்தக் கருத்து என்று கூறப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதேபோன்று 1983 ஆம் ஆண்டு யூலை இன வன்முறையை அடுத்து அவ்வன்முறையை சிங்கள தேசியத்தின் எழுச்சி என்று ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜயவர்த்தன கூறினார் என்பதும் இவ்வேளை நினைவிற்கு வருகிறது.

அவர் தொடக்கிய யுத்தத்தை பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்று குறிப்பிட்டார். காலவரையறை குறித்து 'பயங்கரவாதத்தை' அதற்குள் ஒழிக்கப்போவதாகவும் தெரிவித்தார். அவரின் இரண்டு பதவிக்காலம் முடிவடைந்தும் ஆர். பிரேமதாஸ, டி.பி. விஜயதுங்க, சந்திரிக்காவின் (இரண்டு பதவிக்காலம்) பதவிக் காலமும் முடிவடைந்து இன்னும் யுத்தம் நடக்கிறது. புதிய ஜனாதிபதி சந்திரிகா சமாதானத்திற்காக யுத்தம் செய்வதாகத் தெரிவித்தார். சமாதானம் நிலைநாட்டப்படவுமில்லை யுத்தம் நிறுத்தப்படவும் இல்லை.

இன்று நடைபெறுவது யுத்தமே அல்ல தமிழ் மக்களுக்கு ஜனநாயகத்தை உறுதிசெய்வதற்கான 'மனிதாபிமான நடவடிக்கை' என்றே அரசாங்கமும், ஜனாதிபதியும் கூறிவருவதைக் கேட்கிறோம்.

இது யுத்தமல்ல மக்களை மீட்பதற்கான மனிதாபிமான நடவடிக்கை என்று 'கொசோவோவாவை' ஆக்கிரமிப்பதற்கு காரணமாக அமெரிக்க ஏகாதிபத்தியமும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் கூறியதும் நினைவு கூரத்தக்கதாகும். அதாவது இராணுவ வல்லமை மிக்க நாடுகள் யுத்தங்களையோ, இராணுவ நடவடிக்கைகளையோ மேற்கொள்வதற்கு பிரயோகித்த சுலோகங்கள் தான் எமது நாட்டிலும் உச்சரிக்கப்படுகின்றன.

தனிநாடொன்றைக் கோரி தமிழ் மக்களே யுத்தத்தைத் தொடக்கினார்கள் என்றும் இராணுவ தளபதி கூறியுள்ளார். தமிழ்ப் பிரதேசங்களில் பாராளுமன்றத் தேர்தல்கள் பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடு, மற்றும் உள்ளூராட்சி சபைகள் அரச நிறுவனங்கள் முதலாளித்துவ அமைப்பின் கீழ் இயங்கக்கூடிய அளவிற்கு இயங்கின. அவற்றுக் எதிரான தமிழ்த் தலைமைகள் கேள்வி எழுப்பவில்லை. ஆனால் இன ரீதியில் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகள் மறுக்கப்பட்டமையும் அவர்கள் மீதான இனரீதியான அடக்குமுறைகளும் அவர்கள் மத்தியில் இருந்த முதலாளித்துவ தலைமைகளை தனி நாடு கோரும் நிலைமைக்கு தள்ளின. அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் 1977 பாராளுமன்ற தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி வடக்கு கிழக்கில் (தமிழ்ப்பிரதேசத்தில்) அமோக வெற்றி பெற்றது. அதனை அடுத்து இலங்கை பாராளுமன்றத்தில் த.வி. கூட்டணி எதிர்க்கட்சியாகவும் அதன் தலைவர் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவருமானார். பேச்சுவார்த்தைகள் பல நடந்தன. ஆகக்குறைந்த அதிகாரப்பங்கீட்டிற்கு கூட இலங்கையின் ஆளும் வர்க்கப் பேரினவாதிகள் தயாராக இருக்கவில்லை.

இதன் தொடர்ச்சியாக தமிழ் இளைஞர்கள் மத்தியிலிருந்து பேரின்வாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவை தனிநாட்டை வென்றெடுப்பது என்ற சுலோகத்துடன் மேற்கொள்ளப்பட்டன. தமிழ் மக்கள் மீதான இனரீதியான ஒடுக்குமுறைகள் இராணுவ, பொலிஸ் அடக்குமுறைகளாக வளர்ச்சியடைந்ததற்கு எதிராகவே தமிழ் இளைஞர்கள் மத்தியிலிருந்து ஆயுத நடவடிக்கைகள் வளர்ச்சிடைந்தன.

எனவே 1983 இற்கு முன்னர் தமிழ்ப்பிரதேசங்களில் பாராளுமன்றத் தேர்தல்கள் உள்ளூராட்சி சபை தேர்தல்கள் நடைபெறாமல் இல்லை. அதற்குப் பிறகும் நடைபெற்றன. அரசாங்கமும் படையினரும் கூறுவது போல் கிழக்கு மாகாணத்தை இராணுவம் கைப்பற்றியப் பிறகு தான் தேர்தல்கள் நடைபெற்று "மக்களுக்கு ஜனநாயகம்" உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறமுடியாது.

மக்களை மீட்கும் மனிதாபிமான ஜனநாயக நடவடிக்கைகளில் கொல்லப்படும் மக்களின் எண்ணிக்கையும் ஏற்பட்டு வரும் சொத்தழிவுகளும் அதிகமாக இருக்கும் போது செய்யப்படுவது யுத்தமல்ல என்று எப்படிக் கூறமுடியும். சிறுபான்மையினர் என்ற சொல்லின் பிரயோகமே தவிர்க்கப்பட வேண்டும் என்ற கருத்து சமகால உலக நிலைப்பாட்டில் வலுவாக இருந்து வருகின்ற போதும் இன்னும் சிறுபான்மையினர் என்று சொல்லை பாவிப்பது மேலாதிக்கத்தின் வெளிப்பாடே. அத்துடன் இலங்கை நாடு சிங்களவர்களுக்கு மட்டுமே என்று சொல்வதும் மேலாதிக்க கருத்தாகவே வெளிப்படுகிறது. அந்த அடிப்படையில் சிங்களவர்கள் இந்தியாவிலிருந்து வந்தவர்களல்லர் அவர்கள் இந்நாட்டின் பூர்விகக் குடிகளான இயக்கர், நாகர்களின் வழித்தோன்றல்கள் என்று கூறுகின்றனர். முன்னர் சிங்களவர்கள் ஆரியர்களின் வழித்தோன்றல்கள் என்று கூறுவதைப் பெருமையாகக் கொண்டனர். இவ்வாறானவை வசதி கருதிச் செய்யப்படும் வரலாறுப் புரட்டல்களாகும்.

பிரச்சினை என்னவென்றால் இலங்கையின் தேசிய அரச கட்டுமானத்திற்கும் வளர்ச்சிக்கும் அரசியல், சமூக, பொருளாதார பண்பாட்டு பங்களிப்புச் செய்தவர்களாக சிங்களவர்கள் தமிழர்கள் முஸ்லீம்கள், மலையகத் தமிழ்மக்கள் இருக்கின்றனர். அதே போன்று பறங்கியர்களும் வேடர்களும் இந்நாட்டு சமூகத்தினரே. இவர்கள் யாவரும் சமத்துவமானவர்களாவதுடன் சுயாட்சி உரிமையும் கொண்டவர்களாவர். இதனை பல்லினங்களது நாடுதான் இலங்கை என்பதன் ஊடாகவே காண முடியும்.

நடைபெறுகின்ற யுத்தம் பேரினவாத மேலாதிக்க இராணுவ நடவடிக்கையாகும். இதனால் இங்கு வாழும் மக்களிடையே சமத்துவத்தையும், ஐக்கியத்தையும் உறுதிப்படுத்த முடியாது. அவர்களின் சுயாட்சி உரிமையை அங்கீகரிக்காமல் சமத்துவம், ஐக்கியம் சமாதானம் ஒரு போதும் சாத்தியமில்லை.

**ஆசிரியர் குழு**

# மத்திய அரசின் மௌனமும் மாநிலக் கட்சிகளின் எதிர்ப்பும்

**வெகுஜனன்**

இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்திய மத்திய அரசு கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தலையிட்டு வந்துள்ளது. அத்தகைய தலையீடு அப் பிரச்சினையை இன்றைய கொடூர யுத்தம் வரை வளர்த்தும் வந்திருக்கிறது. இதில் மத்திய அரசின் கொள்கை வகுப்பாளர்கள் "முயலையும் உசிப்பி நாயையும் ஏவி விட்டது" போன்றே செயல்பட்டு வந்திருக்கிறார்கள். தமிழர் தரப்பில் ஆயுதம் ஏந்துமாறு தமிழ் இளைஞர்களைக் களத்தில் இறக்கிய இந்திய ஆளும் வர்க்கம் தனது பிராந்திய மேலாதிக்க நலன்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்ற அளவில் தமது சொற்படி அவ் இயக்கங்கள் செயல்பட வேண்டும் என்பதையே விரும்பி அதற்கான நிகழ்ச்சி நிரலையும் முன்னெடுத்தன. ஆனால் அவர்கள் விரும்பியவாறு இலங்கையில் விடயங்கள் இடம் பெறவில்லை. அதே தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தில் அமெரிக்க- மேற்குலக சக்திகள் சம்மந்தப்படவும் தமது உலக மேலாதிக்க நோக்கங்களுக்கு ஏற்றவாறு பயன்படுத்திக் கொள்ளவும் முயன்றன. இதன் விளைவு தேசிய இனப்பிரச்சினையைச் சாட்டாக வைத்து இலங்கை மீது யார் ஆதிக்கம் செலுத்துவது என்ற போட்டி ஏற்பட்டது. இந்தியாவா அல்லது அமெரிக்க மேற்குலகமா என்பது பின்புலப் போட்டியாக வளர்ந்து வந்தது. இந்த ஆதிக்கப் போட்டிக்கு தமிழ் இளைஞர் இயக்கங்களும் இலங்கையில் பதவிக்கு வந்த அரசாங்கங்களும் தகுந்த கருவிகளாகிக் கொண்டன. இன முரண்பாடு பகை நிலைக்குத் தள்ளப்பட்டு பேரினவாத முதலாளித்துவ ஒடுக்கு முறை ஒரு புறமாகவும் அதனை எதிர்த்த தமிழர் தரப்புப் போராட்டம் மறுபுறமாகவும் வளர்க்கப்பட்டன. இதில் சோகமும் வேதனையும் யாதெனில் சாதாரண தமிழ் முஸ்லீம் மக்களும் சிங்கள மக்களும் இழப்புகளையும் பாதிப்புக்களையும் பெற்றுக் கொண்டமை தான். பௌத்த சிங்களப் பெரும் தேசியவாதம் ஆளும் அகங்காரத்துடன் தனது போர் வெறித்தனத்தை விஸ்தரித்துக் கொண்டு வந்தது. அதே வேளை ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்கு விடுதலை என்ற முழக்கத்துடன் தமிழர் தரப்பில் குறுந்தேசியவாதம் தனது ஆயுதப் போராட்டத்தை ஏகப்பிரதிநிதித்தவ நிலைப்பாட்டுடன் முன்னெடுத்தது. தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ண உரிமைக்கான தேவையும் அவசியமும் யதார்த்தமாக இருப்பதை எவரும் மறுக்கவியலாது. ஆனால் இன்றைய யுத்தமும் அதை தனித்து நின்று எதிர்த்துப் போராடும் சூழலும் சுயநிர்ணய உரிமைக்கான நியாயமான அபிலாஷையினை சிதைவுக்கு உள்ளாக்கியுள்ளது.

இதனையே இன்று வன்னி மீதான மகிந்த சிந்தனை தொடுத்து நிற்கும் யுத்தம் எடுத்துக் காட்டுகின்றது. சுமார் இரண்டரை லட்சம் தமிழ் மக்கள் அங்கு மனிதப் பேரவலத்திற்கு உள்ளாகி உள்ளனர். அது பற்றி பேரினவாத ஒடுக்குமுறை அரசாங்கத்திற்கு அக்கறை கிடையாது. அரசின் மனித உரிமை மீறல்களும் மிரட்டல்களும் யுத்தத்திற்கு எதிரான சக்திகளை மௌனிக்க வைத்துள்ளது. யுத் தம் நியாமானது பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற அரசாங்கப் பிரச்சாரம் சிங்கள மக்களை மயக்க வைத்திருக்கிறது. பாராளுமன்றத்திற்குள் பலமான யுத்த எதிர்ப்புக் குரல் மட்டுமன்றி வன்னி மக்களின் மனிதப் பேரவலத்தைக் தடுத்து நிறுத்துவதற்குக் கூட குரல் முன்வைக்கப்படவில்லை. ஒரு சில தமிழர் தேசியக் கூட்டமைப்பு ஆங்காங்கே எடுத்துக் கூறினாலும் அவற்றைப் புலிகளின் குரல்களாகவே கொள்ளப்படுகிறது. அவர்களது இயலாமை வெறும் அறிக்கையுடன் நிற்பதை வெளிப்படுத்துகிறது.

இந் நிலையில் இனப்பிரச்சினையை இன்றைய நிலை வரை வளர்த்து வருவதற்கு ஒரு காரணமாக இருந்து வந்த இந்திய மத்திய அரசு தற்போது மௌனத்தைக் கடைப்பிடித்து வருகின்றது. முன்பு கிழக்கு மாகாணத்தை விடுவிக்கும் அரசின் ராணுவ நடவடிக்கையின் போதும் இந்தியா மௌனம் காத்தே வந்தது. இப்போதும் அதே மௌனத்தையே கடைப்பிடிக்கிறது. மௌனம் சம்மதத்தின் அறிகுறி என்று கூறிவதில் உண்மை உண்டு. இந்திய மத்திய அரசுக்குப் புலிகள் இயக்கம் பலவீனப்படுத்தப்பட வேண்டும் அல்லது ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் உள்ளார்ந்த நிலைப்பாடு உண்டு. அது தனியே ரஜீவ் காந்தி கொலையின் ஏற்பட்ட நிலைப்பாடு அல்ல. அந்த இயக்கம் தனது கட்டுக்குள் நிற்காத ஒன்று மட்டுமன்றி அமெரிக்க மேற்குலகச் செல்வாக்கிற்கு உட்பட்ட ஒன்றாகவும் இருந்து வருவதை இந்தியக் கொள்கை வகுப்பாளர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதன் காரணமாகவே புலிகளின் வட்டத் திற்குள் நின்று பாராளுமன்றப் பதவிகளைப் பெற்ற தமிழர் கூட்டமைப்பின் (இந்திய விசுவாசிகளான) பாராளுமன்ற உறுப்பினர்களை வேண்டா வெறுப்புடன் டெல்கியின் கொள்கை வகுப்பாளர்கள் நடாத்தியும் வருகின்றனர். அதேவேளை புலிகள் இயக்கம் இதே இந்திய விசுவாசம் மிக்க கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக இந்தியாவை இளக வைக்கலாம் என்ற முயற்சி பலனளிக்காத நிலை தொடர்கிறது. கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இன்னும் டெல்கியின் கதவுகள் திறக்கப்படவில்லை என்பது தற்செயலான ஒன்றல்ல.

எனவே இந்திய மத்திய அரசின் மௌனம் அர்த்தமுடனேயே மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கு தமிழ் மக்களோ ஏனைய இனங்களோ ஒடுக்கப்படுவது எவ் வகையிலும் முக்கியமான ஒன்றல்ல. ஏனெனில் இந்திய மாநிலங்களில் இன மொழி மத ஒடுக்குமுறைகள் தாராளமாக இடம் பெற்று வருபவையாகும். ஆதலால் இலங்கையில் தமது பிராந்திய மேலாதிக்கத்திற்கு எவை உகந்தவைகளோ அவைகளின் மீதே இந்திய மேலாதிக்க வாதிகளுக்கு அக்கறை இருக்கும். இதனைப் புரிந்து கொள்ள மறுக்கும் பழைமை மிக்க தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் இப்போதும் இந்திய விசுவாசப் புராணம் பாடி எதிர்பார்ப்புகளுடன் இருந்து வருகின்றவை ஒரு அவலமாகும்.

மத்திய அரசின் மௌனம் மகிந்த சிந்தனை அரசின் யுத்த முனைப்பிற்கு அங்கீகாரம் மட்டுமன்றி உரிய உத்வேகத்தை வழங்கியும் வருகின்றது. ஆயுத உதவிகள், பயிற்சிகள், ராணுவத் தந்திரோபாய வழிகாட்டல்கள் போதியளவு கிடைத்து வருகின்றமை யுத்த முன்னேற்றத்திற்கு உதவுபவையாகும். அதனால் கிழக்குப் போன்று வடக்கும் விரைவில் விடுவிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் இந்திய மத்திய அரசு இருந்து வருகிறது.

அதேவேளை இடம் பெறும் யுத்தமும் வன்னிமக்கள் படும் அவலங்களும் தமிழ் நாட்டில் பெரும் உணர்வலைகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. மத்திய அரசின் நிலைப்பாடு தமிழக மக்களால் வெறுக்கப்படுகிறது. அத்துடன் கருணாநிதியின் நரித்தன அரசியல் நிலைப்பாடும் அம்பலமாகி வருகின்றது. அதேவேளை தமிழகத்தின் பிரதான கட்சிகள் ஈழத்தமிழருக்காக அனுதாப ஆதரவுக்குரல் கொடுக்க களத்தில் இறங்கி நிற்கின்றன. அந்த வகையில் அக்டோபர் 2ம் திகதி இந்தியக் கம்பனியூனிஸ்ட் கட்சி நடாத்திய உண்ணா விரதத்தில் முக்கிய கட்சிகள் பங்கு கொண்டன. அத்துடன் தனித்தனிப் பேரணிகள் மறியல்கள் நடாத்திக் கொள்கின்றன. அடுத்த சில மாதங்களில் இந்தியப் பாராளுமன்றத் தேர்தல் வர இருப்பதை மனதில் கொண்டே இம் மாநிலக் கட்சிகள் தமது மத்திய ஆட்சி எதிர்ப்பைக் கிளப்பியுள்ளன. அத்தகைய எதிர்ப்பு மத்தியுடன் இணைந்து நிற்கும் தி.மு.க ஆட்சிக்கும் எதிரான ஒன்றாகும். எவ்வாறாயினும் மாநிலக் கட்சிகளின் இலங்கைத் தமிழர் ஆதரவிற்கு ஒரு தெளிவான பொதுக் கோரிக்கைகள் முன்வைக்கப்படவில்லை. இது ஒரு தார்மீக ஆதரவாக மட்டுமே இருக்குமேயன்றி மத்திய அரசை வற்புறுத்துவதற்கு உரிய கோரிக்கைகள் கிடையாது. அக் கட்சிகளால் அவ்வாறான கோரிக்கை உடன்பாட்டிற்கும் வர முடியாது. காரணம் அரசியல் சந்தர்ப்பவாதமும் மாநிலத்தில் தாம் தாம் செல்வாக்குப் பெற்று சட்டசபை செல்லும் நோக்கமே மேலோங்கி நிற்பதுமாகும். தமிழக மக்களின் உணர்லைகளை தமிழ் நாட்டுக் கட்சிகள் தமக்குரிய வாக்குவங்கியாக மாற்றுவதிலேயே கவனம் செலுத்துகின்றனவே அன்றி ஈழத் தமிழ் மக்களின் அவலங்களுக்கு மத்திய அரசையோ மாநில அரசையோ தீர்வு காணும் பாதையில் செயல்பட வைப்பதற்காகவல்ல என்பது தெளிவாகின்றது. எவ்வாறாயினும் தமிழக மக்களின் உணர்வுகள் அனுதாபங்கள் அல்லற்படும் ஈழத் தமிழ் மக்களுக்கு ஒரு தார்மீகப் பலமாக இருப்பாற்கு அப்பால் எதுவும் நடக்கப் போவதில்லை.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# 17வது திருத்தம் எனும் "மாயமான்"

தயா

நீதி, நிர்வாக, சட்டத்துறைகளில் உயர்பதவிகளுக்கான நியமனங்களை வழங்கும் போது அரசியல் ரீதியான செல்வாக்குச் செலுத்தப்படுவதை தவிர்க்க வேண்டும் என்ற நோக்கில் அரசியலமைப்பு சபையொன்றை ஏற்படுத்தும் வகையிலேயே 1978 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பிற்கு 17 வது திருத்தம் கொண்டுவரப்பட்டது. அத்துடன் ஏற்கனவே இருந்த பகிரங்க சேவை ஆணைக்குழு நீதிச்சேவை ஆணைக்குழு என்பவற்றுக்கு மேலதிகமாக தேர்தல் ஆணைக்குழு, நிதிச்சேவை ஆணைக்குழு தேசிய பொலிஸ் ஆணைக்குழு என்பனவும் அரசியல் பேரவையும் 17 வது திருத்தச்சட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டன.

1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பினூடாக ஏற்படுத்தப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை கட்டுப்படுத்துவதாக இந்த திருத்தம் அமைந்தது. 2001 ஆண்டு கொண்டு வரப்பட்ட திருத்தச்சட்டத்துடன் அரசியலமைப்பு பேரவை 2004 வரை இயங்கியது. அதன் பின்னர் அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினர்களை நியமிப்பதில் அரசியல் கட்சிகளுக்கிடையில் இழுபறி நிலை இருப்பதனால் அரசியலமைப்பு பேரவை அமைக்கப்படாது இயங்காமல் இருக்கிறது. நிதிச்சேவை ஆணைக்குழு தேர்தல் ஆணைக்குழு என்பன அமைக்கப்படவில்லை. ஏனைய ஆணைக்குழுக்களினது தலைவர்கள் அங்கத்தவர்கள் மற்றும் உயர் பதவிக்குரியவர்களை ஜனாதிபதியே நியமித்து வருகிறார். அரசியலமைப்பு பேரவையில் பிரதமர் சபாநாயகர் பாராளுமன்ற எதிர்கட்சித்தலைவர் என்போர் பதவி வழியாகவும், ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஒருவரும் பிரதமரினதும், எதிர்க்கட்சி தலைவரினதும் சிபாரிசின் பெயரால் நியமிக்கப்படும் ஐந்து பேரும், பாராளுமன்ற பிரதிநிதித்துவம் பெற்றுள்ள ஏனைய கட்சிகள் சுயேட்சைக் குழுக்களை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் உடன்பாட்டுடன் ஒருவரும் இடம்பெறுவர். இவர்கள் கட்சி சாராத பொதுவான பிரமுகர்களாக இல்லை. இதில் பிரதமரினதும் எதிர்கட்சித் தலைவரினதும் சிபாரிசின் பேரிலானோர் ஏனைய கட்சிகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டே நியமிக்கப்படுவர். அதே போன்று ஏனைய கட்களினதும் உடன்பாட்டிலேயே இன்னொருவரும் நியமிக்கப்படுவார். இந்த உறுப்பினர்களை நியமிப்பதில் கட்சிகளிடையே உடன்பாடில்லாத படியாலேயே அரசியலமைப்பு பேரவைக்கு அங்கத்தவர்கள் நியமிக்கப்படாமல் அது இயங்காது இருக்கி றது.

அப்பேரவை இயங்கும் வகையில் சட்டத்தை திருத்த நடவடிக்கை எடுப்பதாக அரசியலமைப்பு அமைச்சர் டியூ குணசேகர அடிக்கடி கூறி வந்தாலும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அவ்வாறு திருத்தச்சட்டம் கொண்டுவராமல் குழப்பமான நிலை நீடிப்பது ஜனாதிபதிக்கும் ஆளும் கட்சிக்கும் விருப்பமாக இருக்கலாம்.

இதனால் அரசியமைப்பு பேரவையை இயங்கச் செய்ய வேண்டும் எனக் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற கட்சிகள் உடன்பாட்டுக்கு வந்து அரசியலமைப்பு பேரவைக்கு உறுப்பினர்களை நியமிக்க வேண்டும் என உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அரசியலமைப்பு பேரவை இயங்கினால் பாராளுமன்றத்தில் மக்கள் ஜனநாயகம் மலரும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை. ஆனால் நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி என்ற தனிநபரிடம் அதிகாரங்கள் குவிந்து கிடப்பதை ஓரளவுக்குத் தானும் கட்டுப்படுத்துவதற்கு முடியும். இன்றைய அமைப்பிற்குட்பட்ட ஏற்பாடாக 17 வது திருத்தச்சட்ட ஏற்பாடுகள் விஷேடமாக அரசியலமைப்பு பேரவையின் செயற்பாடுகள் அமையலாம் என்ற எதிர்பார்ப்பு சிலரிடையே உண்டு.

அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினர்கள் தெரிவு ஏறக்குறைய அனைத்து அரசியல் கட்சிகளினதும் சமூகங்களினதும் அபிப்பிராயங்களையும் கொண்டு இடம்பெறவேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தாலும் அது நிறைவேற்றப்படவில்லை. சிறிய கட்சிகளையும் சிறுபான்மை சமூகங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும்வகையில் உறுப்பினர்களை நியமிப்பதற்கு பேரினவாதத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் ஜே.வி.பி, ஹெல உறுமய என்பன முட்டுக்கட்டையாக இருக்கின்றன. அவை தங்களது கட்சிகளின் விருப்பத்தின் பேரிலேயே அத் தெரிவு இடம்பெற வேண்டும் என்று பிடிவாதமாக இருக்கின்றன. எதிர்க்கட்சித் தலைவரும் பிரதமரும் செய்யும் சிபார்சினை பேரில் தெரிவு செய்யப்பட்ட வேண்டியவர்களின் தெரிவும் பிரச்சினையாகவே இருக்கிறது.

ஆக 17 வது திருத்தச்சட்டம் பாராளுமன்றத்திலுள்ள கட்சிகள் அனைத்தினதும் உடன்பாட்டுடன் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவதில் உடன்பாடில்லை. அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினர்களை நியமிப்பதிலே அரசியல்கட்சிகளுக்கிடையே உடன்பாடில்லை. அதில் உடன்பாடு ஏற்படுமாக இருந்தால் தான் தேர்தல் ஆணைக்குழு நிதி ஆணைக்குழு போன்றன அமைக்கப்பட முடியும். அதனால் அரச உயர் பதவிகளுக்கு ஆட்களை நியமிப்பதிலும் ஜனாதிபதி தனித்தீர்மானமே முடிவாத இருப்பதை கட்டுப்படுத்த முடியும். அதாவது அரசியலமைப்பு பேரவை அந்நியமனங்களை கட்டுப்படுத்த முடியும். இதன் மூலம் உண்மையான நிர்வாகத்துறை என்று சொல்லப்படுகின்ற நிர்வாக பரிபாலனத்தில் அரசியல்வாதிகள் நேரடித் தலையீடுகள் செய்வதை ஓரளவிற்காவது கட்டுப்படுத்த முடியும்.

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தை ஜனாதிபதி நியமித்த போது அரசியலமைப்பு பேரவை இல்லாதபடியால் அது ஜனாதியின் இறுதியான தீர்மானமாகவே இருந்தது.

நிதியமைச்சின் செயலாளர் டி.பி. ஜயசுந்தர ஊழலில் சம்பந்தப்பட்டுள்ளதால் அவரை அப்பதவியில் தொடர்ந்து இருக்க அனுமதிக்க முடியாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. சில மாதங்களுக்கு முன்பு நுகர்வோர் அதிகாரசபையின் தலைவராக இருந்த ஒருவர் அப்பதவியை வகிக்க தகுதியற்றவர் என்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. இதைவிட அரசாங்கத்தின் உயர் பதவிகளை வகிக்கும் அதிகாரிகள் தொடர்பாகப் பல குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. இந்த விடயங்களில் அரசியல மைப்பு பேரவை தலையிட்டு ஒரு விதமான கட்டுப்பாட்டை செலுத்த முடியும்.

அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினர்களை நியமிப்பதில் முட்டுக்கட்டையாக இருப்பது அரசியல் கட்சிகளிடையே உடன்பாடின்மையே. அதனை மேவும் வகையில் 17வது திருத்தச்சட்டத்திற்கு இன்னொரு திருத்தத்தை கொண்டுவருவதை விடுத்து அரசியலமைப்பு பேரவை ஆணைக்குழுக்கள் மீது கட்டுப்பாடுகளை கொண்டிருக்கும் வகையில் திருத்தச்சட்டத்தை முன்வைக்க இருப்பதாகவே அமைச்சர் டி.யூ. குணசேகர தெரிவிக்கிறார்.

ஆணைகுழுக்கள் அரசியல் வாதிகளின் அழுத்தமின்றி சுதந்திரமாக இயங்க வேண்டுமென்பதற்காகவே 17வது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படுகிறது. அவ்வாறெனின் அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினர்கள் அவற்றின் மீது கட்டுப்பாட்டை செலுத்தும் விதத்தில் திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டால் அவற்றின் சுதந்திரமான இயக்கம் உறுதி செய்யப்படுமா?

எனவே கோளாறு 17வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த முடியாமல் இருப்பதில் அல்ல. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையிலேயே இருக்கிறது. தனி மனிதருக்கு சர்வ அதிகாரங்களையும் வழங்கும் ஆட்சி முறையில் வேறு சட்டங்களால் ஜனநாயகத்தை உறுதி செய்ய முடியாது. அதற்காக பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு திருப்பிச் செல்வதுதான் தீர்வும் அல்ல. இன்றைய அரசியலமைப்பு முற்று முழுதாக மாற்றியமைக்கப்பட வேண்டும். புதிய அரசியல் அமைப்பில் மக்கள் அனைவரினதும் ஜனநாயக உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக தேசிய இனங்களினதும் உழைக்கும் மக்களினதும் உரிமைகள் உரிய உத்தரவாதத்தைப் பெற வேண்டும். இதனை இன்றைய பிரதான கட்சிகள் செய்ய முன்வரப் போவதில்லை. மாறாக அதற்கான பரந்துபட்ட வெகுசன இயக்கம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

# அன்புள்ள தோழருக்கு



## தோழமையுடன் செண்பகன் எழுதும் மடல்

நாங்களும் 'இருக்கிறம்' அல்ல. நாங்கள "இயங்கிறம்' என்பதுவே முக்கியமானது." இது அண்மையில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் தோழர் ஒருவர் சொல்லக் கேட்ட விடயம்.

மனிதர் தனித்தவரல்ல. சமூகத்தில் ஒருவர். நான் மட்டுமல்ல. குடும்பம், அலுவலகம், ஊர், உறவு, அயலவர், நண்பர், பிரயாணிகள், தொழிற்சாலைகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், கட்டிடங்கள், காடுகள், தெருக்கள், வாகனங்கள், கடைகள், கடல், நீர், தீ, காற்று, ஆகாயம், உலகம், கோள்கள், பிரபஞ்சம் என என்னைச் சூழ ஒவ்வொரு கணப்பொழுதும் இயக்கம் நிகழ்கிறது. அந்த இயக்கத்தின் நடுவில் அல்லது ஒரு தொங்கலில் நானும் இருக்கிறேன்.

நான் 'சும்மா' இருக்கும் பொழுதும் எனது உடல் உள்ளுறுப்புக்கள் இயங்குகின்றன. உலகம் சுழல்கிறது. நான் மட்டும் எப்படிச் சும்மா இருப்பது. 'சும்மா இரு' என்பது மெய்ஞ்ஞானமாகும் அவலம் இன்று நெருடுகிறது. சும்மா இருக்கும்படி எமக்குப் போதிக்கப் பல வித்தகர்களும் தத்துவ விசாரர்களும் கிளம்பியிருக்கும் காலத்தில் நாம் சீவிக்கின்றோம்.

நான் சும்மா சுமையாக இந்தப் பூகோளத்தில் எப்படிச் சீவிப்பது? எதிலும் நியாயம் அநியாயத்தைப் பிரித்தறியும் நாம் எப்படிச் சுமையாக இருப்பது?

நாம் பிரபஞ்சத்தின் உற்பவிப்புகள்_பிரபஞ்சத்துக்கு நன்றி செலுத்துவது நமது கடன். நான் பிறப்பதற்கு முன்பே இந்த உலகமும் பிரபஞ்சமும் உள்ளன. நான் இறந்த பின்பும் இந்த உலகமும் பிரபஞ்சமும் மாற்றங்களுடன் இருப்பன. நானே சகலமுமல்ல. நான் உலக நாயகன், சகலகலாவல்லவன், 'சுப்பர் ஸ்ரார்', எதிலும் 'நம்பர் வண்' என்ற மனவியாதி எம்மைப் பீடிக்காதிருக்கும்படி நம்மை நாமே கண்காணித்துக் கொள்வது சமூக இயக்கத்துக்கும் எமது தனிப்பட்ட செயற்பாட்டிற்கும் இன்றியமையாதது.

நாம் பிறப்பதற்கு முதலே இந்த உலகில் மக்கள் வாழ்ந்து போராடி வென்றும் தோற்றும் முடிந்த வரலாறு உண்டு. அந்த வரலாற்றின் தொடர் விளைவுகளே நாம்.

வரலாற்றிலிருந்து கற்றுக் கொள்வதற்கு நாம் வரலாறு என்ற ஒன்று எங்கள் முன்னே இருந்தது என்பதைக் கேட்கவோ படிக்கவோ சிந்திக்கவோ எம்மில் சிலருக்கு அவகாசம் கிடைப்பதில்லை.

நானே யாவும், நானே முழுமை, நான் அழுதால் அதுவே கவலை, நான் சிரித்தால் அதுவே சந்தோசம், நான் அவமானப்பட்டால் அதுவே அவமானம், நான் வெற்றி பெற்றால் அதுவே வெற்றி. என்னை நானே முழு முதன்மையாகக் கொண்டு எனக்குக் கீழ்ப்பட்டதுதான் மற்றவை எல்லாம் என இறுமாந்து வரலாற்றை தன் சொற்படி நடக்க நினைக்கும் மனிதர்கள் உலகமயமாக்கல் நுகர்வுப் பண்பாட்டின் வார்ப்புகள் ஆவர்.

நான் வாழும் காலத்தில் சகமனிதர் படும் துயரம் எனக்குப் பொருட்டல்ல. அது அவர் தலைவிதி. அல்லது அவரது இயலாமை. அல்லது அதுதான் இயற்கை. அவர் அவ்வாறு அழுந்துவதைக கண்டு கலங்குவதோ அல்லது உதவ நினைப்பதோ கருணை காட்டுவதோ எமக்கு இடையூறானது.

நான் எனக்கு ஏதும் நன்மை இருக்குமெனில் மட்டுமே பிறருடன் பழகுவேன். இன்றைய அன்றாட நடைமுறையில் பொருண்மிய கல்வியின் கெட்டித்தனத்தில் பெற்ற 'லாபம் என்ன' என்ற 'விழுமிய மனப்பாங்கை' விழுங்கிக் கொண்டதன் வியாதியில் நம்மில் சிலர் பீடிக்கப்பட்டுள்ளனர். நம்மை நாமே விடுவிப்பதன் மூலமே அயலாரிலும் மாண்புறு மனிதர் எம்மத்தியில் வாழ்கின்றனர் என்ற மனித பண்புடன் நேசிக்கப் பழகலாம். நண்பர்களுடன் பழகும் போதே 'லாபம் எனக்கென்ன' என்று பழகும் வியாபாரப் புத்தி சமூகத்தில் இன்று பெருகிவிட்டது.

வியாபாரப் புத்தி என்பது சாமானிய மானுடரையும் பிடித்தாட்டுவதன் மூலம் மக்கள் காசின்றி செய்யக் கூடிய சாதாரண பெறுமானங்களையும் இழந்துள்ளதை நம் அன்றாட வாழ்வில் காணக்கூடியுள்ளது.

சிரித்தல், முகத்தை இனிமையாகக் காட்டல், பிறருக்கு துன்பம் ஏற்படும் போது உள்ளத்தால் வருந்துதல், பிறரது வருத்தம் பற்றி உரையாடல், பிழை எனக்கருதினால் அதனை வெளிப்படுத்தல், சரியெனக் கண்டால் ஏற்றுக் கொள்ளுதல், நல்ல செய்கைகளைப் பாராட்டல், தீய செயல்களைக் கண்டித்தல், போலிப் பரவசம் காட்டாமை, போலிப்புகழாரம் சூட்டாமை, நல்ல பகிடிக்குச் சிரித்தல், தேவையற்ற பகிடிக்குச் சிரிக்காதிருத்தல், அநியாயம் செய்பவரைக் கண்டு கோபம் கொள்ளல், தீயவரோடு சேர்வோரைக் கண்டு வெறுப்புக் கொள்ளல் போன்ற மானுடப் பெறுமானங்கள் என்பவற்றை வெளிப்படுத்துதற்கு பொருண்மியச் செலவு எதுவும் தேவைப்படாது. இரக்கம், கருணை, அன்பு, காதல், கோபம், வீரம், துணிவு, நம்பிக்கை இவை மனிதரது பண்பாட்டுப் பெறுமானங்கள். இப் பெறுமானங்களைக் கைவிட்டு அல்லது காசுக்கு விலை பேசி விட்டுக் கொடுத்து அல்லது விற்றுத் தொலைத்துவிட்டு வெறுங்கை மனிதர்களாக கழிவிரக்கப்படும் நிர்க்கதியிலிருந்து நாம் விடுபட வேண்டாமா? அல்லது எம்மையும் எமது மனித உணர்வுகளையும் காசுக்கு விலை போகும் வியாபாரப் பண்டங்களாக்குவதற்கு எம்மையே நாம் அனுமதிப்பதா?

நான் இன்று யாரைப் பார்த்துச் சிரித்தேன். யாரைப் பார்த்து அனுதாபப்பட்டேன். யாருக்கு மரியாதை வழங்கினேன். யாரிடம் வெறுப்பைக் காண்பித்தேன். யாருக்காக எனது உழைப்பைத் தாரைவார்த்தேன் என்ற பல கேள்விகளை எழுப்பினால் நான் மானுடர் பக்கம் நின்றேனா மானுடருக்கு எதிரான பக்கம் நிற்கிறேனா எனத் தீர்மானித்தல் சுலபம்.

மானுடத்திற்கு எதிரானவர்களுக்காக - காசு பொருள் புகழுக்காக உயிரை விடுதல் சுலபம். மக்கள் - சாதாரண மனிசர் நலம் வேண்டி சிறு நகத்தைத் தானும் இழத்தல் பெருமைக்குரியது. எம்முடைய இலக்கும் எம்முடைய நடத்தையும் சாமானியர்கள் சார்பானதாய் இருப்பதற்கு நம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ளல் நலம். அதுவே நாம் எமது சமூகத்துக்கும் பிரபஞ்சத்துக்கும் செய்யும் கைமாறாகும். எமது நன்றியறிதலாகும்.

ஏதோ இருக்கிறம் என்றில்லாமல் இவ்வாறு இதற்காக இயங்குகின்றோம் என்பதே எமக்கெல்லாம் இன்பம் விளைப்பதாகும்.

எனது செயற்பாடு பிரம்மாண்டமானதாக இருக்க வேண்டும். உடனடி மாற்றத்தைப் பாரிய அளவில் ஏற்படுத்துவதாக அமைய வேண்டும் என சிறு பிள்ளைத்தனமாக நாம் சிந்தித்துச் செயலில் நம்பிக்கையிழத்தலைத் தவிர்த்தல் பயன்தரும்.

வானம் ஏறி வைகுண்டம் போவதைப் பற்றி பிரமிப்புக் கொள்வதில் பயன் இல்லை. கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியுமா என்பதில் கவனஞ் செலுத்துதல் பிரயோசனமானது.

என்னைச் சூழ்ந்துள்ள நண்பர் எனது உறவினர், அயலவர் என மக்கள் மத்தியில் இருவேறு உலகக் கண்ணோட்டங்கள் உள்ளன. இதில் மக்கள் சார்பான கண்ணோட்டம் ஒன்று. மற்றது மக்கள் நலன் கருதாத அதிகார வர்க்க நலன் சார்பானது.

மக்கள் சார்பான கண்ணோட்டம் உடையோரை அடையாளம் காணுதல், அவர்களுடன் அளவளாவுதல், அவர்களுடன் உறவு பூணுதல் என்பதுவே மக்கள் ஊழியனின் பணியாகும். அதிகார வர்க்க நலன் உடையாரோடு போராடுதல் தவிர்க்கவியலாதது. மக்களின் சிறிய சிறிய நலன்களைப் பெறுவதற்கும் போராடுதலே ஒரே வழியாகும்.

அதிகார வர்க்கச் சக்திகளுடன் சமரசம் சாத்தியமல்ல. போராட்டம் தவிர்க்கவியலா நியதி.

மக்கள் சக்தியைக் கட்டியெழுப்புதலில் விட்டுக் கொடுக்காத - சளைக்காத முயற்சி நம் அன்றாட அலுவல்களில் இணைக்கப்படுவதே இயக்கத்துக்கான முன் நிபந்தனையாகும்.

உலக ரீதியாகச் சிந்திப்பதே நம் உள்ளத்தை வலுப்படுத்தும். எமது உள்ளூர் நிலைமைகளுக்கேற்பச் செயற்படுவதே எமது உடலைத் திடப்படுத்தும். உருக்கொத்த உறுதியுடன் முன் செல்ல வழி பிறக்கும். புதிய வார்ப்புகளாக உருமாற்றம் பெறமுடியும்.

கொம்யூனிஸ்ற் என்பவர் ஆயுள் உறுப்பினர் அல்ல. காசைக் கொடுத்து ஆயுள் முழுதும் வர்க்க விடுதலைக்கான அங்கத்துவத்தைக் கோரல் முடியாது.

எமது அன்றாட அலுவல்களில் எமது சளைக்காத மக்கள் சார்பு நடத்தையின் மூலம் தினந்தினம் நாம் புடம் போடப்படுகின்றோம். அன்றாடம் புதுப்பிக்கப்படுகின்றோம். அதன் மூலமே எமது உறுப்புரிமையை கௌரவப்படுத்தலாம்.

ஒவ்வொருநாளும் ஒவ்வொரு கணமும் மக்கள் சக்தியை வளப்படுத்தும் வர்க்க முத்திரை எம்மீது பதிக்கப்படுகிறதா என்பதை நாம் பரீட்சித்துப் பார்ப்பதே எம்மீது நாம் கொள்ளும் உயர் கௌரவம் ஆகும். நன்றி

மறுமடலில் சிந்திப்போம

# மதசார்பின்மையை சாத்தியமாக்க கலாசார அணிதிரட்டல் அவசியம்

மாலை 10 மணிமுதல் காலை 5 மணிவரை ஒலிபெருக்கிகள் பயன்படுத்தக் கூடாது என்ற சட்டத்தை சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சர் பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றினார். ஒலி மாசாக்கம் மிகப்பெரிய சுற்றாடல் கேடு என்றும் இவையெல்லாம் தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்றும் பாராளுமன்றத்தில் முழங்கியவர் சுற்றாடல் அமைச்சரும் ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினருமான சம்பிக ரணவக்க. இதற்கு எதிராக முஸ்லீம்கள் தடையுத்தரவு கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். ஆனால் மேதகு உயர் நீதிமன்றமோ அதை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது.

அண்மையில் இச்சட்டத்தை மீறியதற்காக புத்த பிக்கு ஒருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போது அவர் நீதிமன்றத்துக்கு வருகை தராததன் நிமிர்த்தம் அவருக்கு "பிடியாணை" பிறப்பிக்கப்பட்டது. அதன் படி மேற்படி பௌத்த பிக்கு கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டார். அவரது பிணை மனுவும் மறுக்கப்பட்டது. பிரதம நீதிமன்றக் கட்டடத்தொகுதியில் கூடிய புத்த பிக்குமார் உயர் நீதிமன்றத்தில் பெரிய குழப்பம் விளைவித்ததோடல்லாமல் உயர் நீதியரசர் உட்பட்ட உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மன்றுக்கு வரும் போது எழுந்து நிற்காமல் அமர்ந்திருந்து நீதிமன்ற சம்பிரதாயங்களை அவமதித்தனர். ஆனால் அவர்களுக்கு எதிராக "நீதிமன்றத்தை அவமதித்த" குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்படவுமில்லை, அதேவேளை நீதியரசர்கள், குற்றம் சாட்டப்பட்ட புத்த பிக்குவை விடுதலை செய்யச் சொல்லி உத்தரவிட்டனர்.

இதைத் தொடர்ந்து ஜனாதிபதி பௌத்த குருமார் இளைப்பாறுவதற்கு நீதிமன்றக் கட்டிடத் தொகுதியில் ஒரு அறையை வழங்குமாறும் பௌத்த குருமார் காத்து நிற்பது சரியல்ல எனவும் கூறியிருந்தார். இதன் பின்னர் சுற்றாடல் அமைச்சர் மாலை 10 மணி முதல் காலை 5 மணி வரை ஒலி பெருக்கியைப் பயன்படுத்த விரும்புபவர்கள் தங்கள் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையத்திடம் அனுமதி பெற்றுப் பயன்படுத்தலாம் என்றும் கூறினார். தற்போது நடைமுறையிலுள்ள சட்டமூலம் விரைவில் மற்றியமைக்கப்படும் என்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் ஒரு விளக்கம் அளித்திருந்தார்.

மறுபுறம் பௌத்த பிக்குமார் ஆசனத்திலிருந்து அரசருக்கே எழுந்து நிற்பதில்லை, எனவே நீதிமன்றில் எழுந்து நிற்கத் தேவையில்லை என்ற வாதம் முன்வைக்கப்பட்டது. இங்கே த்ான் "நீதிமன்றத்தின் முன் எல்லோரும் சமன்" என்பது சரியா என்ற கேள்வி வருகிறது! நீதி என்று வரும் போது அதற்கு முன் எவ்வித பாகுபாடும் காட்டப்படலாகாது என்கிறது சட்டம். ஆனால் இலங்கையில் நிலைமையோ இவ்வாறு இருக்கிறது. ஒரு நாடு குறித்தவொரு மதத்திற்கு அரசியல் அமைப்பில் முன்னுரிமை கொடுப்பதாக அறிவித்துக் கொள்கிறபோது இவ்வாறான சிக்கல்கள் தவிக்க முடியாதவை. புத்த பிக்குகளே அரசியல் கோலோட்சும் போதும் சரி, அரசியல் அமைப்பே பௌத்த மதத்துக்கு பிரதான தானம் வழங்கச் சொல்லும் போதும் சரி நீதித்துறையும் சட்டமும் அதற்கு ஏற்றவாறு எழுதப்படுவதும் வளைந்து கொடுப்பதும் இயல்பானதே. இவ்விடத்தில் தான் மதச்சார்பின்மையின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது. மதச் சார்பின்மை பற்றிப் பேசுகின்ற போது கே.என். பணிக்கர் சொல்லும் "பண்பாட்டு அணிதிரட்டலின்" அவசியத்தை நாம் பார்ப்பது அவசியமாகிறது.

மதம் ஆட்சியதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு மதவாத பாசிசத்தை அடைய எப்போதுமே முயற்சிக்கும். அவ்வாறான ஒரு நிலையை மதம் அடைந்துவிடும் பட்சத்தில் மதச்சார்பான சட்டமூலங்களை நிறைவேற்றுவது, எனைய மதங்களையும் நம்பிக்கைகளையும் தடை செய்வது போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சிகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்படும். ஆனால் அப்போது ஜனநாயகமும் மதச்சார்பின்மையும் மறுக்கப்பட்டாதது போல ஒரு தோற்றம் காட்டப்பட்டபடியே இருக்கும். மதச் சார்பற்ற சக்திகள் தங்களுக்குள் அணிதிரளாவிட்டால் மேற்சொன்ன அபாயங்கள் வரும் காலம் வெகு தொலைவில் இல்லை. ஒரு உடனடியான வெளிப்படையான விவாதம் தான் இம் முன் முயற்சிகளுக்கு தேவை. இது மதச்சார்பற்ற சக்திகள் என்பவையாக மட்டும் நின்றுவிடக் கூடாது. அதைக் கடந்த நேச சக்திகளை ஒருங்கிணைக்கின்ற, ஒன்றுசேர்க்கின்ற ஒரு பணி எம்முன்னே உள்ளது. காரணம் மதச்சார்பின்மை என்வளவு பலவீனமாக உள்ளது என்பதை கடந்த காலம் எமக்கு தெளிவாகக் காட்டியுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக வெளிப்படையான தத்துவார்த்த கொள்கை விவாதம் அத்தியாவசியமாகிறது.

மதச்சார்பின்மையின் கடந்த கால செயற்பாடுகள் குறித்து மதத்தை ஆதரிப்பவர்களும் எதிர்ப்பவர்களும் இரண்டு விதமான கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

1. மதச் சார்பின்மை என்பது அந்நியத் தன்மை கொண்டது.
2. மதச் சார்பின்மை மதவாதம் முன்னிறுத்தும் சவால்களுக்கு முகம்கொடுக்க முடியாத உள்ளார்ந்த இயலாமை.

இதிலே முதலாவது மிகக் குறுகிய கண்ணோட்டமாகும். இது சமூகத்திலுள்ள மதச்சார்பின்னை நடவடிக்கைகளை அலட்சியப் படுத்துவதோடு அல்லாமல் பலம் இழக்கச் செய்யும் வாதமாகும். மற்றது நவீன எதிர்ப்புக் கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. அது மதச் சகிப்புத்தன்மையை வேண்டி நிற்கின்றது. இவை இரண்டும் சரிபோல தோன்றினாலும் அடிப்படையில் இவை மதவாத சக்திகளை ஆதரித்தே நிற்கின்றன. இவற்றை வலியுறுத்தும் பலர் மேற்கத்திய விமர்சகர்ளோடு பல தளங்களில் ஒத்துப் போகும் நிலையில் இருக்கிறார்கள். மதவாரியாகத் திரட்டப்பட்டதன் மூலம்தான் ஜனநாயகத்தில் பங்கெடுக்கக் கூடிய வாய்ப்பு கிடைத்துள்ளது என்ற அளவுக்கு வாதிடத் தொடங்கியுள்ளார்கள்.


மதவாத சக்திகள் தொடர்ந்து கலாசார மற்றும் சமூக விடயங்களில் முன்னேற்றம் கண்டே வருகின்றன. இது மிகவும் ஆபத்தானது. அவர்கள் கலாசாரத்தையும் சமூகத்தையும் மதத்தின் ஒரு பகுதியாக கட்டமைக்கின்றனர். இதனால்தான் பெரும்பான்மையானோர் மதச் சார்பற்றவர்களாக இருந்தாலும்கூட மதவாத சக்திகள் வெற்றி பெறக் கூடியதாக இருக்கிறது. இது அபாயகரமானது. இன்றைய நிலையில் மதமும் கலாசாரமும் வேறுபாடுகள் அற்றவை, இரண்டும் அடிப்படையில் ஒன்றுதான் என்ற தோற்ற மயக்கத்தை உருவாக்குவது மதவாதிகளின் தந்திரமாக உள்ளது. மேலும் மதவாத அரசியலாக மக்களை அணிதிரட்டுவதும் இங்கு நிகழ்கிறது. உலக வரலாற்றில் மதம் மற்றும் கலாசார முன்னேற்றம் ஆகியன சமுதாய முன்னேற்றத்தோடு பின்னிப்பிணைந்ததாகவே இருந்து வந்திருக்கிறது. இதனால் கலாசார ஒருமைப்பாட்டுக்கு மதமுலாம் பூசும் செயற்பாடுகள் நடந்தேறுகின்றன. இதனாலேயே "பிரிக்க முடியாத அணுக்கூறுகளின் உருமாற்றம்" என இதை அந்தோனியோ கிராம்கி சொல்கிறார்.

மதச் சார்பின்மைக்கான செயற்பாடுகளும் ஜனநாயகத்திற்கான போராட்டமும் ஒன்றுடன் ஒன்று தொடர்பில்லாதது போல் தெரியலாம். ஆனால் உண்மை அதுவல்ல. மனித உரிமைக்காகப் போராடும் அனைவரும் மதச் சார்பின்மைக்காகவே போராடுகிறார்கள். ஜனநாயகத்தின் அவசியத்தை வலியுறுத்தும் அனைவரும் மதச்சார்பின்மையின் அவசியத்தையும் வலியுறுத்துகிறார்கள். மதவாதத்திற்கெதிரான போராட்டம் பிராச்சாரத்துடன் மட்டும் நின்று விட முடியாது. அது கலாசார அணிதிரட்டலை நோக்கி நகர வேண்டும். கலாசார அணிதிரட்டலே மதச்சார்பின்மைக்கான போராட்டத்தை முன்னெடுக்கக் கூடிய சிறந்த வழிமுறையாகும். மத நம்பிக்கைகளால் ஊறிப்போயுள்ள சமூகத்தை மீட்டெடுக்கக் கூடிய சிறந்த மூலோபாயம் கலாசார அணிதிரட்டலே.

கே.என். பணிக்கர் கூறும் செயற்பாடுகள் இன்றைய நிலையில் இலங்கைக்கும் அவசியமாகிறது. எமது சமுதாயம் பல வழிகளில் ஒரு முக்கிய திருப்புமுனையில் நிற்கிறது. மதச்சார்பின்மைக்கான போராட்டம் முன்னெடுக்கப்படாதவிடத்து மதச் சார்புள்ள பாசிச ஆட்சிகள் உருவாவது தவிர்க்கவியலாததாகிப் போவதோடு இன்னொரு மதச்சார்பின்மைக்கான போராட்டத்தை முன்னெடுக்க முடியாமலும் போகலாம்.

**– தமிழ்மகன்**

## பொதுவுடைமைவாத முன்னோடி தோழர் மு. கார்த்திகேசன்



இலங்கையின் பொதுவுடைமை இயக்க முன்னோடிகளில் ஒருவர் தோழர் மு. கார்த்திகேசன். அவர் தென்னிலங்கையில் கல்வி கற்ற பின் வடபுலத்திற்கு பொதுவுடைமை இயக்கப் பணிகளைத் தொடக்கி முன்னெடுப்பதற்காக அனுப்பப்பட்டவர். அப் பணியினை பல்வேறு நெருக்கடிகள் சவால்கள் போராட்டங்களின் மத்தியில் முன்னெடுத்து வந்தவர். வடபுலத்தில் சாதாரண உழைக்கும் மக்கள் தொட்டு முற்போக்கு அறிவுஜீவிகள் வரை அவர் மீது அன்பும் மதிப்பும் வைத்திருந்தனர். கட்சித் தோழர்கள் தோழமையுடன் மாஸ்ரர் என்றும் தோழர் கார்த்தி என்றும் அழைத்தனர். பழைமைவாதப் பிற்போக்காளர்கள் அவரை கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் என ஒருவகை வன்மத்துடன் பார்த்தனர். கல்வித் துறையில் சிறந்த ஆசிரியனாக அதிபராகப் பணி புரிந்து ஆசிரிய உலகில் நன் மதிப்புப் பெற்றவர். மாணவர்கள் பெற்றோர் சக ஆசிரியர்களால் முன்மாதிரியானவர் என அடையாளம் பெற்றவர். அவ்வாறே தனது கொள்கை நிலைப்பாட்டாலும் அதற்கேற்ற எளிமை வாழ்க்கை முறையாலும் கம்யூனிஸ்ட் தோழர்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து மறைந்தவர் தோழர் கார்த்திகேசன். அத்தகைய தோழரின் கம்யூனிஸ்ட் வாழ்வும் பணியும் வாழும் கம்யூனிஸ்டுகளுக்கும் வரப்போகும் புதிய தலைமுறைக் கம்யூனிஸ்டுக்களுக்கும் சிறந்த முன் மாதிரியாகும். அத்தகைய தோழர் மு. கார்த்திகேசனின் 31வது நினைவு தினம் கடந்த செப்ரெம்பர் 9ம் திகதியாகும். அவரது நினைவிற்கு புதிய பூமி தனது தோழமையான உணர்வுகளை சமர்ப்பிக்கின்றது.

## கம்யூனிஸ்ட் போராளி தோழர் நவம்



தோழர் சி. நவரட்ணம் வடபுலத்து பொதுவுடைமை இயக்கத்தின் இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்தவர். தனது இளமைக் காலத்தில் பொதுவுடைமை இயக்கத்தின் வாலிபர் இயக்கத்தில் இணைந்து கட்சி உறுப்புரிமை பெற்று ஒரு கம்யூனிஸ்ட் போராளியாக வாழ்ந்தவர். கட்சி முன்னெடுத்த போராட்டங்களில் முன்னின்று போராடி வந்த ஒரு தோழர். மாக்சிச லெனினிச மாஓசேதுங் சிந்தனையை சொல்லாலும் செயலாலும் கடைப்பிடித்து வாழ்ந்தவர் தோழர் நவம். அவர் புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களில் மட்டுமன்றி அரசியல் தத்துவார்த்த தளத்திலும் மாக்சிச லெனினிச மாஓசேதுங் சிந்தனையின் உறுதியான நிலைப்பிற்கு உரம் சேர்த்த தோழர்களில் ஒருவராக இருந்தார். அந்த வகையில் கட்சிக்குள்ளும் வெளியிலும் இடம் பெற்ற அரசியல் தத்துவார்த்த விவாதங்களில் கலந்து கொண்டு புரட்சிகர நிலைப்பாட்டை முன்னெடுத்தும் வந்தவர். தோழர் நவம் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் முக்கிய முன்னணிப் போராளிகளில் ஒருவராக இருந்தவர். அதேவேளை புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் வாலிபர் இயக்கம் கட்சி என்பனவற்றின் பிரதேசக் குழுக்களில் இருந்து செயல்பட்டவர். புதிய- ஜனநாயக கட்சியின் மத்திய குழுவின் அரசியல் குழுவில் அங்கம் பெற்று தலைமைத் தோழர்களில் ஒருவராக இருந்து பணிபுரிந்தவர். 2002ம் ஆண்டு ஒக்ரோபர் 8ம் திகதி அன்று தோழர் நவம் மாரடைப்பால் சாவு எய்தினார். அவரது இழப்பு இலங்கையின் மாக்சிச லெனினிச இயக்கத்திற்கும் புதிய- ஜனநாயக கட்சிக்கும் பேரிழப்பாகியது. அரவது நான்காவது நினைவு தினம் இம் மாதம் எட்டாம் திகதியாகும். அவரது நினைவு என்றும் நம்மத்தியில் அகலாது நிலைத்து நிற்கும் எனப் புதிய பூமி நினைவு கூர்ந்து கொள்கிறது.

# உலக கொலைகாரன் புஷ்சை இந்திய மக்கள் நேசிப்பார்களா?

ஒரு அடிமை தனது எசமானிடம் ஏதாவது பெறவேண்டின் அல்லது ஏதாவது ஒன்றைப் பெற்று விட்டால் எசமானைப் புகழ்புகழ் என்று புகழ்ந்து உச்சாணியில் ஏற்றி வைப்பது வழக்கம். அவ்வாறு தான் மன்மோகன் சிங் என்ற அடிமையும் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் என்ற தனது எசமானைப் போற்றிப் புகழ்ந்து உச்சி மோந்துள்ளது.

அண்மையில் நியூயோர்க் சென்ற இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதியைச் சந்தித்தார். அவ் வேளையில் உலக மக்களால் காறி உமிழப்படும் அமெரிக்க ஜனாதிபதி புஷ்சை உச்சியில் இருந்து உள்ளம் கால்வரை புகழ்ந்து தள்ளினார். தனது புகழுரையில் 'உங்களை இந்திய மக்கள் மிகவும் ஆழமாக நேசிக்கின்றனர்' என்றும் கூறிக் கொண்டார். இதைவிட இந்திய மக்களுக்கு வேறு அவமானம் இருக்க முடியாது. இந்திய மக்கள் போராட்டப் பாரம்பரியம் மிக்க மக்கள். அந்நிய கொலனித்துவ ஏகாதிபத்தியவாதிகளையும் அவர்களது ஆக்கிரமிப்பு ஆதிக்கம் சுரண்டல் என்பனவற்றை எதிர்த்தும் வீரம் மிக்க வரலாற்றுப் போராட்டங்களை நடாத்தியவர்கள். இன்றும் நடாத்தி வருபவர்கள். அண்மையில் புஷ் இந்தியா வந்த போது லட்சக்கணக்கான இந்திய மக்கள் கோபாவேசத்துடன் கொலைகாரனே! திரும்பிப் போ என முழக்கமிட்டு எதிர்த்தவர்கள்.

அத்தகைய மக்களின் இறைமை கௌரவம் சுய மரியாதை யாவற்றையும் அணுசக்தி ஒப்பந்தம் மூலம் அமெரிக்காவிற்கு அடிமை சாசனம் எழுதிக் கொடுத்தவர் மன்மோகன் சிங். அவர் அமெரிக்காவினதும் புஷ்சினதும் அடிமை விசுவாசியாக இருக்கலாம். ஆனால் இந்திய மக்கள் ஒருபோதும் அமெரிக்காவின் அடிமை விசுவாசிகளாகமாட்டார்கள். அத்தகைய வீரம் மிக்க மக்கள் "உங்களை ஆழமாக நேசிக்கிறார்கள்" என்று புஷ்சுக்கு எடுத்துக் கூற மன்மோகன் சிங்கிற்கு என்ன உரிமை இருக்கிறது. மன்மோகன் சிங்கும் சோனியாவும் அத்வானியும் கருணாநிதியும் அமெரிக்காவையும் புஷ்சையும் ஆழ்ந்து நேசிக்கிறார்கள் என்பது அப்பட்டமான உண்மை. அதேபோன்று முதலாளித்துவப் பெரு முதலைகளான டாட்டா, பிர்லா, அம்பானி போன்றோர் நேசிக்கலாம். அல்லது கோடிகோடியாக மக்களின் பணத்தைக் கறக்கும் இந்தியா நடிக நடிகைகள் நேசிக்கலாம். அல்லது சாமிவேடம் பூண்ட காவிக் கயவர் கூட்டம் மனதாரப் புகழலாம். ஆனால் கோடானு கோடி இந்திய உழைக்கும் மக்கள் உலகின் முதலாம் இலக்கக் கொலைகாரனான புஷ்சை எப்படி நேசிக்க முடியும். பத்துலட்சத்திற்கு மேற்பட்ட ஈராக்கிய மக்களையும் பல்லாயிரக் கணக்கான ஆப்கானிஸ்தான் மக்களையும் தினம் தினம் வேட்டையாடி இரத்தப் பலி எழுத்து வரும் அமெரிக்க கொலைகார ஜனாதிபதியை எவ்வாறு இந்திய மக்கள் நேசிக்க முடியும். இந்திய ஆளும் வர்க்கத்தின் உயர் சொத்து சுகம் பெற்ற மேட்டுக்குடி சக்திகளின் இதயம் கவர்ந்தவர் புஷ்சாக இருக்காலாம். ஆனால் இந்தியாவில் ஏகாதிபத்தியத்தையும் அதன் ஏவலர்களையும் எதிர்த்துப் போராடி வரும் இந்திய மக்கள் ஒரு போதும் மன் மோகன் சிங்கின் அடிமை விசுவாசப் புகழ்ச்சியை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# அமெரிக்கா நடாத்திய மனிதப்படுகொலைகள்

## தென்கொரியாவில் அம்பலம்



டேஜியான் எனுமிடத்தில் 1950- ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அழித்தொழிப்பில் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்ட தங்களது உறவினர்களின் எலும்புகளைத் தோண்டியெடுக்கும் தென்கொரியர்கள்.

மனித குல விரோதி இட்லரையே விஞ்சும் வகையில் இரண்டாம் உலகப் போர் முடிந்த அடுத்த சில ஆண்டுகளிலேயே இலட்சக்கணக்கான மக்களைப் படுகொலை செய்த மிகக் கொடிய பயங்கரவாத மிருகம் தான் அமெரிக்க ஏகாதிபத்தியம். முதலாளித்துவ வரலாற்றாளர்களால் மூடி மறைக்கப்பட்ட இந்த உண்மையை தென்கொரியாவில் தோண்டத் தோண்ட வெளிவரும் படுகொலைப் புதை குழிகளின் எலும்புக் கூடுகளே நிரூபித்துக்காட்டுகின்றன. இரண்டாம் உலகப் போரில் பாசிச முகாம் வீழ்த்தப்பட்டு, ஜப்பானிய ஏகாதிபத்தியம் தோல்வியுற்று சரணடைந்ததும் அதன் காலனியாக இருந்த தென் கிழக்காசிய நாடுகளைக் கைப்பற்றி தனது காலனியாதிக்கத்தை நிறுவ அமெரிக்க ஏகாதிபத்தியம் துடித்தது. அதற்கு முன் வியட்நாம், இந்தோனேசியா, மலேயா, கொரியா ஆகிய தென்கிழக்காசிய நாடுகளில் கம்யூனிஸ்டுகளும் நாட்டுப்பற்றாளர்களும் இணைந்து காலனியாதிக்கத்துக்கு எதிரான தேசவிடுதலைப் போரில் முன்னேறி புதிய சுதந்திர அரசுகளை நிறுவி அதிகாரத்தைக் கைப்பற்றினர். அவற்றுக்கெதிராக ஆங்கிலேய அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஆக்கிரமிப்புப் போர் தொடுத்து கம்யூனி



டேஜியான் நகர முன்னாள் சிறைக் காவலர் லீஜுன்- யங், 1950- ஆம் ஆண்டு அரசியல் கைதிகள் எவ்வாறு கொல்லப்பட்டனர் என்பதை ஒரு நேர்காணலின் பொழுது நடித்துக் காட்டுகிறார்.

ஸ்டுகளையும் நாட்டுப்பற்றாளர்களையும் படுகொலை செய்து தமது பொம்மையாட்சிகளை நிறுவி புதிய காலனியாதிக்கத்தை நிலை நாட்டினர்.

கொரியாவின் வடபகுதியில் கம்யூனிஸ்டுகளும் நாட்டுப் பற்றாளர்களும் இணைந்து ஆயுதமேந்திப் போராடி ஜப்பானிய காலனியாதிக்கவாதிகளை விரட்டியத்து அப்பிராந்தியத்தை விடுதலை செய்திருந்தனர். தென்பகுதியில் அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகள் வந்திறங்குமுன்னர் கொரியாவின் அனைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களும் கம்யூனிஸ்டுகளும் கூடி தேசவிடுதலை முன்னணியின் தலைவரான லியூ-வூன்- கியாங் என்பவர் தலைமையிலான கொரிய மக்கள் குடியரசைப் பிரகடனம் செய்தனர். ஆனால் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களோ தென் கொரியாவைக் கைப்பற்றிக் கொண்டு தேச விடுதலை முன்னணியை ஒடுக்கி லியூ-வூன்- கியாங்கையும் இதர தலைவர்களையும் படுகொலை செய்து சைங் மான் ரீன் என்ற சர்வாதிகாரி தலைமையில் அமெரிக்க ஆதரவு பொம்மையாட்சியை நிறுவினர்.

ஏற்கெனவே கொரியாவின் வடபகுதியை விடுதலை செய்து சுதந்திர அரசை நிறுவியிருந்த கம்யூனிஸ்டுகளும் நாட்டுப்பற்றாளர்களும், தென்பகுதியைக் கைப்பற்றிய அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போர் தொடுத்து கொரியாவை ஐக்கியப்படுத்த முயன்றனர். கொரிய மக்களின் நீதியான இப்போரை அன்றைய சோவியத் ரஷ்யாவும் சீனாவும் ஆதரித்து ஆயுத உதவியோடு படைகளையும் அனுப்பின. மறுபுறம் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள், கொரியாவின் தென் பகுதியில் தமது பொம்மையாட்சியை நிறுவி வடபகுதியின் மீது போர் தொடுத்தனர். 1950 யூன் 25 - ஆம் தேதியிலிருந்து 1953 யூன் 27- ஆம் தேதி வரை நீடித்த இப்போர் இரண்டாம் உலகப் போருக்குப் பின் நடந்த மிகக் கொடிய போர் என்று சித்தரிக்கப்படுகிறது. அதன்பிறகு சமாதான ஒப்பந்தம் உருவாகி கம்யூனிஸ்டுகள் தலைமையிலான வடகொரியா, அமெரிக்கக் கைக்கூலிகளின் தலைமையிலான தென்கொரியா என கொரிய நாடு பிளவுபட்டது.

மூன்றாண்டுகளுக்கு நீடித்த கொரியாவின் தேச விடுதலைப் போரின் போது அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் கட்டவீழ்த்துவிட்ட பயங்கரவாதமும் படுகொலைகளும் பாசிச இட்லருக்குப் பாடம் சொல்லித் தருவதாக இருந்தன. அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் வடகொரியாவின் மீது போர் தொடுத்து பேரழிவுகளை நடத்தியதோடு மட்டும் நின்றுவிடவில்லை. தமது பொம்மையாட்சியின் கீழுள்ள தென்கொரியாவில் கம்யூனிஸ்டுகளையும் நாட்டுப்பற்றாளர்களையும் தொழிற்சங்க விவசாய இயக்கத்தினரையும் ஆயிரக்கணக்கில் படுகொலை செய்தனர். கம்யூஸ்டு ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இலட்சக்கணக்கில் அப்பாவி மக்களைப் படுகொலை செய்து அவர்களைப் பெருங்குழிகளில் போட்டுப் புதைத்தனர். போரில் வடகொரியப் படைகள் பின்வாங்கியபோது கம்யூனிஸ்டுகளின் கட்டுப்பாட்டிலிருந்த கிராமங்களுக்குள் நுழைந்த அமெரிக்கப் படைகள் அங்கிருந்த அப்பாவி மக்களை விசாரணைக் கைதிகளாகப் பிடித்துச் சென்று சுட்டுக் கொன்று பெரும் புதை குழிகளைத் தோண்டிப் புதைத்துள்ளன.

சர்வதிகாரி சைங்மான்ரீ தலைமையிலான அமெரிக்க பொம்மையாட்சி கம்யூனிசத்தை ஆதரித்த 3லட்சம் விவசாயிகளை அரசின் "தேசிய வழி காட்டுதல் கூட்டமைப்பில்" கட்டாயமாகச் சேர்த்து அவர்களுக்கு கம்யூனிசத்துக்கு எதிரான கல்வி அளித்தது. பின்னர் அத்தனை பேரையும் சுட்டுக்கொன்று பெரிய குழிகளை வெட்டி ஆயிரக்கணக்கில் பிணங்களைப் போட்டுப் புதைத்தது. இதுதவிர பயனற்ற பல பழைய சுரங்கங்களிலும் பிணங்களைப் போட்டு மூடியது.

ஒருவரல்ல இருவரல்ல இலட்சக்கணக்கான கொரிய மக்களை இனப்படுகொலை செய்த அமெரிக்க வெறியாட்டத்தைப் பற்றி ஆலன் வின்னிங்டன் என்ற பிரிட்டிஷ் செய்தியாளர் அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் நாளேடான "டெய்லி வோர்க்கர்" இல் அப்போதே எழுதினார். ஆனால் இது கம்யூனிஸ்டுகளின் அவதூறு பிரச்சாரம் என்று அமெரிக்கா கூசாமல் பொய் கூறியது. மறுபுறம் வடகொரிய மற்றும் சீனாவும் தான் அப்பாவி கொரிய மக்களைக் கொன்றதாக இன்று வரை பொய்ப்பிரச்சாரத்தை நடத்தி வருகிறது. கேட்ட மாத்திரத்திலேயே அதிர்ச்சியைத் தோற்றுவிக்கும் இக்கோரமான படுகொலைகளில் தமது உற்றார்- உறவினர்களை இழந்தவர்கள் 1990 வரை தென்கொரியாவில் நீடித்த அமெரிக்க ஆதரவு பெற்ற பாசிச சர்வாதிகார ஆட்சிகளால் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டனர். அவர்களது குழந்தைகள் கூட 'இடதுசாரிகள்' என்று முத்திரைக்குத்தப்பட்டுப் பள்ளிகளில் ஒதுக்கப்பட்டனர். அவர்களைப் போலீசு எந்நேரமும் கண்காணித்ததோடு விசாரணை என்ற பெயரில் அடிக்கடி கைது செய்து வதைத்தது. இதனால் பயபீதியில் உறைந்து போன இவர்கள் இப் படுகொலைகள் பற்றி வாய் திறக்கவே முடியவில்லை. கடும் வேதனையைச் சுமந்து கொண்டு காலங்கள் உருண்டோடின.

2002- ஆம் ஆண்டில் தென்கொரியாவில் வீசிய கடும் புயல் பெருமழையால் பல்லாயிரக்கணக்கானோரைக் கொன்று புதைத்த மிகப் பெரிய மரணக் குழி ஒன்றிலிருந்து எலும்புக் கூடுகள் வெளியே தெரியத் தொடங்கிய பின்னரே அமெரிக்காவின் இனப் படுகொலை பற்றிய உண்மைகள் மெதுவாகக் கசியத் தொடங்கின. இப் படுகொலைகள் பற்றி விசாரணை நடத்தப்பட வேண்டும்



புதைகுழிகளில் கொரிய மக்களைத் தள்ளி அமெரிக்காராணுவம் சுட்டுக்கொல்லும் கொடூரம். இப் படம் கொரிய ஆக்கிரமிப்பு போரின் போது அதில் ஈடுபட்ட சிப்பாய்களால் எடுக்கப்பட்டதாகும்.

என்று தென்கொரிய மக்கள் தொடர்ந்து போராடியதால் போராட்ட நிர்ப்பந்தம் காரணமாக தென்கொரிய அரசு கடந்த 2006- ஆம் ஆண்டில் "அமைதி மற்றும் சமாதானத்துக்கான ஆணையம்" அமைத்து விசாரணையைத் தொடங்கியது. அச்சத்தையும் தயக்கத்தையும் உதறிவிட்டு ஏராளமான மக்கள் இந்த ஆணையத்திடம் சாட்சியமளித்தனர். அதனடிப்படையில் புதைகுழிகளைத் தோண்டத் தொடங்கியதும் குவியல் குவியலாக எலும்புக் கூடுகள் வெளிவரத் தொடங்கின. தென்கொரியாவின் வடக்கே வடகொரியாவை ஒட்டிய எல்லைப்புற பகுதியில் மட்டும் 160- க்கும் மேற்பட்ட இடங்களில் இதுபோன்ற மரணப் புதை குழிகள் கண்டறியப்பட்டன.

டேஜியான் சிறைச்சாலையின் முன்னாள் சிறைக் காவலரான லீஜுன்- யங்- "கம்யூனிஸ்டுகளை ஆதரித்தார்கள் என்ற ஒரே குற்றத்துக்காக அப்பாவி மக்கள் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் இச்சிறைச்சாலையில் சுட்டுக் கொல்லப்பட்டனர்" என்றும் "பெண்கள்- குழந்தைகள் உள்ளிட்ட இடதுசாரிகள் பல்லாயிரக்கணக்கில் தென்கொரிய பாசிச இராணுவத்தால் மிருகத்தனமாகக் கொல்லப்பட்டனர்." என்றும் இந்த ஆணையத்தில் சாட்சியமளித்துள்ளார். கிம்- மான்- சிக் என்ற முன்னாள் தென்கொரிய இராணுவ அதிகாரி அரசியல் கைதிகளை வரிசையாக நிற்க வைத்து அவர்களின் கைகளைப் பின்புறமாக மடித்து இரும்புக் கம்பியால் அனைவரையும் பிணைத்து சுட்டுக் கொன்ற கொடூரத்தை தற் போது மனசாட்சிக்குப் பயந்து சாட்சியம் கூறியிருக்கிறார்.

அமெரிக்க இராணுவமும் அதன் தலைமையின் கீழ் கட்டியமைக்கப்பட்ட தென்கொரிய பாசிச இராணுவமும், வடகொரிய இராணுவத்தினரைப் போல உடையணிந்து கொண்டு கவச வண்டிகளில் செங்கொடியுடன் கிராமம் கிராமமாகச் செல்வார்கள். செம்படையினர் வருவதாகக் கருதி வரவேற்க ஓடிவரும் மக்களை அங்கேயே சுட்டுக் கொல்வார்கள் என்று ஆணையத்தின் முன் பலர் சாட்சியமளித்துள்ளனர்.

தென்கொரியாவை ஆக்கிரமித்திருந்த அமெரிக்கப் படைகளுக்கு அன்று தளபதியாக இருந்தவர் டக்ளஸ் மெக்ஆர்தர். கம்யூனிஸ்டுகளையும் நாட்டுப்பற்றாளர்களையும் உழைக்கும் மக்களையும் ஈவிரக்கமின்றிக் கொன்றொழிக்கும் அவனது இப்பயங்கரவாத உத்தியேகமெக்கார்திசம் என்று குறிப்பிடப்படுகிறது. போரில் சிக்கி வடகொரியாவிலிருந்து தென்கொரியாவுக்கு அகதிகளாக ஓடி வந்தவர்களைக் கூட சுட்டுக் கொல்லும் அளவுக்கு மெக்கார்திசம் வெறியாட்டம் போட்டது.

"அப்பாவி மக்களைக் கண்மூடித்தனமாக கொன்றொழிப்பதையே அமெரிக்கா தனது கொள்கையாகக் கொண்டுள்ளது." என்று 1950- களில் தென்கொரியாவுக்கான அமெரிக்கத் தூதர் அன்றைய அமெரிக்க வெளியுறவுச் செயலர் டேன்ரஸ்க்கு எழுதியுள்ள கடிதமே இதனை நிரூபித்துக் காட்டுகிறது. இதுதவிர அன்றைய அமெரிக்க சிப்பாய்களால் படம் பிடிக்கப்பட்ட போர்க்களக் காட்சிகள் கடந்த ஆண்டில் சில அமெரிக்கப் பத்திரிகைகளில் வெளியாயின. கைகள் கட்டப்பட்ட நிலையில் வெள்ளுடை அணிவிக்கப்பட்ட அரசியல் கைதிகள் பெருங்குழிகளின் அருகில் வரிசையாக நிறுத்தப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டு குழிகளில் வீசப்படும் காட்சிப் படங்களும் அவற்றில் இருந்தன. மேலும் அமெரிக்க விமானப் படையில் பணியாற்றி ஓய்வுப் பெற்ற உளவுத்துறை அதிகாரியான டொனால்டு நிக்கோலஸ் தனது நினைவுக் குறிப்பு நூலில் தென்கொரியாவின் சுவோன் பகுதியில் 1800 பேர் அமெரிக்க இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டதைப் பார்த்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு தென்கொரியாவின் பல பகுதிகளில் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் நடத்திய இனப்படு கொலைகள் பற்றி இந்த ஆணையத்தில் 215 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தனது விசுவாச பொம்மையாட்சி நிறுவப்பட்டிருந்த போதிலும் தென்கொரிய மக்களை இலட்சக்கணக்கில் படுகொலை செய்த அமெரிக்க ஏகாதிபத்தியம், வடகொரியா மீது எத்தகைய அட்டூழியங்களை ஏவியிருக்கும்? வடகொரியா மீதான ஆக்கிரமிப்புப் போரில் தான் முதன்முதலாக "நாபாம்" வகைக் குண்டுகளைக் கொண்டு அமெரிக்கா தாக்கியது. நெருப்பு மழை பொழியும் இந்த வகைக் குண்டுகள் வீசப்பட்டு வடகொரியாவின் பல்லாயிரம் கிராமங்களும் நகரங்களும் புல்- பூண்டு கூட இல்லாமல் தீக்கிரையாக்கப்பட்டன. வடகொரிய மக்கள் தொகையில் ஏறத்தாழ 20 சதவீதத்தினர் படுகாயமடைந்ததோடு உணவின்றிப் பட்டினி கிடக்க வேண்டிய நிலைக்கும் ஆளாயினர். தென்கொரியா, வடகொரியாவைச் சேர்த்து ஏறத்தாழ 20 இலட்சம் கொரிய மக்கள் இந்த அமெரிக்க ஆக்கிரமிப்புப் போரில் கொல்லப்பட்டனர்.

மூன்றாண்டுகள் நீடித்த இந்த கொரிய ஆக்கிரமிப்புப் போர் பின்னாளில் அமெரிக்கா நடத்திய மிகப் பெரிய ஆக்கிரமிப்புப் போர்களுக்கெல்லாம் ஓர் ஒத்திகையாக அமைந்துள்ளது. வியட்நாம், சோமாலியா ஆப்கானிஸ்தான் ஈராக் என அமெரிக்க இராணுவம் எங்கெல்லாம் காலடி எடுத்து வைத்ததோ அங்கொல்லாம் முதுகெலும்பையே சில்லிட வைக்கும் அளவுக்கு காட்டுமிராண்டித்தனமான படுகொலைகள் நடத்தப்பட்டன. நடத்தப்படுகின்றன.

அமெரிக்கப் பயங்கரவாதிகள் நடத்திய படுகொலைகள் பற்றி விசாரணை தென்கொரியாவில் தொடர்கிறது. அமெரிக்க விசுவாச தென்கொரிய அரசு இப்படுகொலைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் என்று நம்புவதற்கு அடிப்படையே இல்லை. ஆனால் தென்கொரிய மரணப் புதை குழிகளில் புதைக்கப்பட்ட உண்மைகள் பூதமாகக் கிளம்பவே செய்யும். அனைத்துலக உழைக்கும் மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டப் பெருநெருப்பு மூண்டு அது உலக மக்களின் கொடிய எதிரியான அமெரிக்க ஏகாதிபத்தியத்தைச் சுட்டெரிக்கவே செய்யும்.

அழகு

நன்றி: புதிய ஜனநாயகம் யூலை 2008

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# சோஷலிசமும் தேசியமும்

சோஷலிசம் என்பது பொதுப்படக் கூறினால் சக்திக்கேற்ப உழைப்பு உழைப்புக்கேற்ப ஊதியம் என்ற அடிப்படையில் உற்பத்திச் சாதனங்கள் சமூக உடைமையாக உள்ள ஒரு சமூக அமைப்பைக் குறிக்கும். மாக்சிய வாதிகள் அதைக் கம்யூனிச சமுதாயத்தினை எட்டுவதற்கு முந்திய நிலையாகக் கொள்வர். சோஷலிசத்தின் கீழ் அரசு என்ற அமைப்பு இருக்கும். எனினும் அந்த அரசு முதலாளிய அரசுகளினின்று வேறுப்பட்டதாக உழைக்கும் மக்களின் அதிகாரத்தை நடைமுறைபடுத்துகிற அரசாக இருக்கும். சோஷலிஸத்தின் கீழ் வர்க்கங்கள் இருப்பதால் வர்க்க முரண்பாடுகள் இருக்கின்றன. வர்க்க வேறுபாடுகளற்ற ஒரு சமுதாயத்தின் உருவாக்கத்தின் போக்கிலே அரசு சிதைந்து அழிகிறது. எனினும் சோஷலிசம் என்பதை வெறுமனே உற்பத்திச் சாதனங்களின் மீதான அரச கட்டுப்பாடு என்று வரையறுக்கிறவர்கள் இருக்கிறார்கள். இவர்களிற் பெரும்பாலானவர்கள் சமூகத்தின் வர்க்கத் தன்மையை ஏற்பதில்லை. அதற்கான காரணம் அவர்கள் சமுதாயத்தின் வர்க்க இயல்பை அறவே அறியாதவர்கள் என்பதில்லை. ஆனால் அவர்கள் வர்க்க முரண்பாடுகளை விட அடிப்படையானவையாக வேறு சமூக அடையாளங்களைக் கருதுகிறார்கள்.

**சோஷலிசம் வர்க்க அடிப்படை கொண்டது தேசியவாதம் இன மொழி மதத்தை வற்புறுத்துவது**

இஸ்லாமிய சோஷலிசம் கிறிஸ்துவ சோஷலிசம் என்பன இஸ்லாத்துக்கும் கிறிஸ்துவத்திற்கும் சோஷலிசத்தன்மை வழங்குகிற முயற்சிகளாகத் தோன்றுகின்றன. எனினும் உண்மையில் நடப்பது ஏதெனில் சோஷலிசத்தை மட்டுப்படுத்த மத அடையாளம் பயன்படுகிறது. இவ்வாறான கொள்கைகளை முன்வைக்கிறவர்கள் சமூகச் சீர்திருத்தத்தையும் வறுமையிலிருந்து நிவாரணத்தையும் சில சமயம் வெவ்வேறு அளவுகளில் சமூக நீதியையும் வற்புறுத்துவதற்காகத் தங்களது மதங்களிலிருந்து அந்தச் கொள்கைகட்குச் சாதகமான அம்சங்களை முன்வைக்கின்றனர். எனினும் எந்த மத நூல்களை அவர்கள் தமது ஆதாரங்களாகப் பயன்படுத்துகின்றனரோ அதே மதநூல்களின் பேரால் அதிகார பூர்வமான மத நிறுவனங்கள் முதலாளியத்தையும் வேண்டியபோது நிலவுடைமையையும் என்பபோதும் ஏகாதிபத்தியத்தையும் நியாயப்படுத்துவதற்குத் தயங்குவதில்லை. எனினும் முற்போக்கான கிறிஸ்துவ இஸ்லாமிய அமைப்புக்கள் கம்யூனிஸ்ற்றுக்கள் உட்பட இடதுசாரிகளுடன் பொதுவான சமூக விடுதலை நோக்கங்கட்காக ஒத்துழைத்துள்ளனர். அவர்களது பங்களிப்பு குறிப்பிட்ட வரையறைகளைத் தாண்ட வேண்டுமாயின் அவர்கள் மதவாதத்துடன் மோதாமல் அதைச் சாதிக்க இயலாது.

**தேசங்களின் சுய நிர்ணய உரிமை என்பது சோஷலிசத்தின் அடிப்படையில் எழுந்ததாகும்.**

மத அடையாளத்தை விட வலுவான ஒரு சக்தியாக முன்னேறிய முதலாளிய நாடுகளில் தேசியவாதம் இருந்து வந்துள்ளது. அங்கெல்லாம் தேசியவாதத்தின் வலிமைக்கு முன் பணிந்து போய்த் தேசியவாதிகளாகவும் சோஷலிச வாதிகளாகவும் தோற்றங் காட்டுகிறவர்கள் இருந்து வந்துள்ளார். அதேவேளை சோஷலிசம் என்ற பேரில் மக்களைக் கவரவும் தேசியவாதத்தை ஒரு வெறியாக வளர்த்துப் பெருமுதலாளியத்திற்குப் பணியாற்றி வந்துள்ளவர்களும் இருந்துள்ளனர். இவ்வாறான போலியான சோஷலிசம் ∴ பாஸிஸவாதிகளாற் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது மட்டுமன்றிச் சமூக ஜனநாயகவாதிகள் என்று தம்மைச் சொல்லிக் கொண்ட பல அரசியல் அமைப்புக்கள் தமது நாடுகளின் ஆளும் வர்க்கங்கள் தேசபக்தியின் பேரால் பிற தேசங்களையும் தமது நாட்டினுள் உள்ள தேசிய இனங்களையும், சமூகப்பிரிவுகளையும் ஒடுக்கும் போது அந்த ஒடுக்குமுறைக்கு உடந்தையாக்கி நிற்கவும் நேர்ந்துள்ளது. பிரித்தானிய தொழிற்கட்சி முதலாக ஐரோப்பியச் சமூக ஜனநாயக 'இடதுசாரிக்' கட்சிகளும் கொலனிய யுகத்தில் இவ்வாறே நடந்து கொண்டன. இதனாலேயே அவற்றைச் "சமூக ∴ பாஸிசவாதிகள்" என லெனின் குறிப்பிட நேர்ந்தது. சமூக ஜனநாயகவாதிகள் மட்டுமன்றிச் சந்தர்ப்பவாத அரசியலில் இறங்குகிற கம்யூனிஸ்ற்றுக்களும் தங்களை மாக்சியவாதிகள் என்று சொல்லிக்கொள்ளுகிற பிற இடதுசாரிகளும் அந்த விதமாகவே நடந்து கொள்ள நேரும் என்பதைப் பல ஐரோப்பிய நாடுகளிலும் இலங்கையிலும் இந்தியாவிலும் நேபாளத்திலும் கண்டிருக்கிறோம்.

ஒரு தேசியவாதி சோஷலிஸத்தை ஏற்பவராக இருக்க முடியுமா இல்லையா என்ற கேள்விக்கு முடியும் என்றே பதில் அமையும். ஆனால் அவரது தேசியவாதத்தின் தன்மை என்ன என்பதைப் பொறுத்து அவரது சோஷலிசத்தின் தன்மை அமையும்.

தேசிய இனம், தேசம் என்பன மனிதரின் சமூக அடையாளங்கள். அவை வரலாற்றால் உருவானவை. அவ்வாறே அவை வரலாற்றுப் போக்கில் மாறக்கூடியவை. அவற்றுக்கு எந்தவிதமான நிரந்தர இயல்பும் இல்லை. அவை எப்போது முக்கியத்துவம் பெறுகின்றன என்பதை ஆராய்ந்தால் அவற்றுடன் இணைந்திருக்கிற வர்க்க நலன்களை நாம் அடையாளங் காணலாம்.

ஒரு தேசத்தினதோ தேசிய இனத்தினதோ பேரால் இன்னொரு தேசமோ தேசிய இனமோ ஒடுக்கப்படுகிற போது ஒடுக்குமுறையை நியாயப்படுத்தத் தேசிய உணர்வு தேசப்பற்று, தேசிய நலன் என்கிற விதமான கருத்துக்கள் பயன்படுகின்றன. ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் ஒரு அதிகார வர்க்கத்தின் நலன் சார்ந்த சிந்தனையே ஆதிக்கஞ் செலுத்துவதைக் காணலாம். இது கொலனிய யுகத்திற் காணப்பட்டது. நவகொலனிய யுகத்திலும் காணப்படுகிறது. கொலனியமும் ஏகாதிபத்தியமும் மட்டுமன்றிப் மூன்றாமுலக நாடுகளின் அதிகார வர்க்கங்களும் இவ்வாறான தேசிய நலன்களை வற்புறுத்துவதைக் காணலாம். இவ்வாறான தேசியவாதத்தின் பின்னாலுள்ள அதிகார வர்க்கங்கள் பிற தேசங்கள் மீதான தமது ஆக்கிரமிப்பையும் அடக்குமுறையையும் சுரண்டலையும் நியாயப்படுத்தத் தமது சமூகத்தின் பெரும்பான்மையைத் திருப்திப்படுத்த வேண்டியுள்ளது. இங்கே கடும் வலதுசாரிப் போக்குடையோர் தேச நலன் என்பதை

**தேசியவாதம் சோஷலிசப் பக்கம் வரவும் முடியும் ஏகாதிபத்தியத்தின் பக்கம் நிற்கவும் முடியும்.**

மட்டுமே வலியுறுத்தித் தமது ஒடுக்குமுறையை உள்நாட்டிலும் பிரயோகிப்பர். தம்மை சோஷலிசவாதிகளாகக் கூறிக் கொள்ளும் சமூக ஜனநாயகவாதிகள் உள்நாட்டில் சில சமூகச் சீர்திருத்த நடவடிக்கைகளில் அக்கறை காட்டுவர். எனினும் சமுதாய அமைப்பை மாற்றுவது பற்றியோ தொழிலாளிவர்க்க அதிகாரம் பற்றியோ அவர்கள் உடன்படமாட்டார்கள். உண்மையான சோஷலிசவாதிகள் மட்டுமே தேசிய, தேசிய இன ஒடுக்குமுறையை எதிர்ப்பர். தேசங்களின் சுயநிர்ணய உரிமை என்ற கருத்து சோஷலிஸச் சிந்தனையின் அடிப்படியிலிருந்தே எழுந்தது. லெனின் தான் அதனை முதலில் முன்வைத்தார் என்பதும் இன்று வரை வேறு நோக்கமின்றி நேர்மையாகச் சுயநிர்ணயக் கோட்பாட்டை ஆதரிப்பவர்களாக மாக்ஸிச லெனினிச வாதிகளே இருந்து வருகின்றனர் என்பதும் மறுக்க இயலாத உண்மைகள். மேலாதிக்கத்திற்கும் ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் எதிராக விடுதலைக்காகப் போராடும் தேசியம் அந்த நோக்கங்கட்குட்பட்டு முற்போக்கானது அத்தகைய விடுதலைப் போராட்டங்கட்கு இடதுசாரிகள் ஆதரவு வழங்குவது மட்டுமன்றி வழி நடத்தித் தலைமை தாங்கவும் இடமுண்டு. எனினும் விடுதலைக்காகப் போராடுகிற தேசிய இயக்கங்கள் எல்லாமே முற்போக்கான உலக நோக்கை உடையனவல்ல. அவற்றினுள் பலவாறான வர்க்க நிலைப்பாடுகளும் அரசியற் சிந்தனைகளும் இயங்குகின்றன. பழைமைவாதம் அடிப்படையான சமூக அமைப்பைப் பேணும் நோக்கு என்பனவற்றையும் பிற தேசிய இனங்களையும் தேசங்களையும் இழிவாகவும் பகைமையுடனும் நோக்குகிற தன்மையையும் நாம் பல தேசிய விடுதலை இயக்கங்களினுட் காணுகிறோம். அதே இயக்கங்களுள் இவற்றுக்கு மாறான மனித சமத்துவமும் சமூக நீதியும் வேண்டிநிற்கும் போக்குக்களையுங் காணுகிறோம். இவ்விதமான எதிரெதிரான போக்குக்கள் குறுகிய காலத்திற்கு மட்டுமே ஒன்றாக இயங்க இயலும். இந்திய காங்கிரஸ், சீனாவின் கொமின்டாங் போன்றவற்றுள் இயங்கிய இடதுசாரிகள் அங்கு ஆதிக்கஞ் செலுத்திய நிலவுடைமை முதலாளியச் சிந்தனைகட்கு எதிராக உள்ளிருந்து போராட இயலாது போனதும் அக் கட்சிகளிலிருந்து வெளியேறினர்.

காங்கிரஸும் கோமின்டாங்கும் இறுதியில் சுரண்டும் வர்க்கங்களின் அமைப்புக்களாகவே ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றின. எனினும் கொலனியத்திற்கும் அந்நிய மேலாக்கத்திற்கும் ஆக்கிரமிப்புக்கும் எதிரான போராட்டமே முதன்மையான முரண்பாடாக உள்ள போது இடதுசாரிகள் அவற்றுடன் ஒத்துழைக்க வேண்டிய நிலையில் உள்ளனர். அதேவேளை அவற்றின் பிற்போக்கான நடவடிக்கைகளை நட்பு முறையிலும் கண்டித்தும் அழுத்தங்களைக் கொடுக்க நேரிடுகிறது.

முதலாளிய நலன்களை வலியுறுத்துகிற தேசியம் தேசிய விடுதலை இலக்கு எட்டபபட்ட பிறகு தனது சுரண்டும் வர்க்கத் தன்மையை வெளிப்படுத்துகிறது. நாட்டினுள் தேசிய இன ஒடுக்கலிலும் தொழிலாளி வர்க்கதினதும் பிற உழைக்கும் மக்களினதும் போராட்டங்களை நசுக்குவதிலும் கவனங் காட்டுகிறது. தருணங் கிடைக்கும் போது தன்னை ஒரு பிராந்திய வல்லரசாக்க முயல்கிறது. அதுவும் போதாமல் தனக்கு வசதியானபோது பிற மூன்றாமுலக நாடுகட்கு எதிரான ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கும் போருக்கும் ஆதரவு தரவும் அது தயங்குவதில்லை.

இதற்கான காரணம் என்ன? தேசியத்தின் சுரண்டும் வர்க்கப் பரிமாணத்தின் அடிப்படையிலிருந்து மேற் கூறிய விதமான போக்குகள் உருவாகின்றன. இதற்கு மாறாகவும் தேசியம் இயங்கலாம். அந்தத் தேசியம் தேசியவாதத்தை முதன்மைப் படுத்துவதில்லை. அது தேசிய இனவிடு தலையை முதன்மைப்படுத்துகிறது. சகல தேசங்களதும் தேசிய இனங்களதும் சமத்துவத்தையும் சுதந்திரத்திற்கான உரிமையையும் அது வலியுறுத்துகிறது. அந்த உலக நோக்கின் இன்னொரு பரிமாணமாக அது பலவேறு சமூக ஒடுக்குமுறைகளையும் இல்லாதொழிப்பதிற் கவனங்காட்டுகிறது. அதன் வர்க்கப்பார்வை உழைக்கும் மக்களினதாகவே இருக்கும்.

தேசியம் என்பது பிற தாக்கங்கட்கு உட்படாது செயற்படக் கூடிய ஒரு கோட்பாடல்ல. அது எப்போதுமே வர்க்க நலன்களுக்கும் குறிப்பிட்ட ஒரு சமூக வர்க்கத்தினது அல்லது சில வர்க்கங்களது ஆதிக்கத்துக்கும் உட்பட்டே இயங்குகிறது.

விடுதலைப் போராட்டங்கள் அனைத்திலும் பெருந் தியாகங்களைச் செய்வோரும் வீரதீரத்துடன் போரிடுவோரும் பெரும்பாலும் உழைக்கும் மக்களும் சமூகத்தில் தாழ்நிலையில் வைக்கப்பட்டுள்ளவர்களுமேயாவர். ஆனாலும் தேசியவாத அமைப்புக்களில் அதிகாரம் அவர்களது கைகளில் இல்லை. எவ்வாறு சமூக உற்பத்தியில் அவர்களது உழைப்புச் சூறையாடப்பட்டு ஒரு சிறுபான்மை தன்னை வளப்படுத்திக் கொள்கிறதோ அவ்வாறு அல்லது அதைவிட மோசமாக அவர்களது தியாகங்களும் அர்ப்பணிப்பும் பங்களிப்புக்களும் வசதிபடைத்த வர்க்கத்தினருக்குப் பயன்படுகின்றன. குறிப்பாக விடுதலைப் போராட்டங்கள் வெற்றி பெற்ற அல்லது மேவி நிற்கிற சூழ் நிலைகளில் இந்தத் தன்மை வலுப்பெறலாம். இவ்வாறு நிகழும் போது ஒரு ஒடுக்குமுறையாளனிடமிருந்து பெற்ற வெற்றியை ஏகாதிபத்திய த்திடம் இழந்துவிடுகிற நிலை உருவாகலாம். இதற்குத் தென்னா பிரிக்காவும் ஒரு உதாரணமாகி வந்துள்ளது.

தேசியம் என்பது முழுமையான தேசிய அல்லது தேசிய இன விடுதலையாக அமைய வேண்டுமானால் அது தன்னை உள் விவகாரங்ணகளில் சமூகநீதி மனித சமத்துவம் (அதாவது சோஷலிஸ நோக்கங்கள்) என்பனவற்றுடன் அடையாளப்படுத்த வேண்டும். வெளி விவகாரங்களில் அது ஏகாதிபத்திய எதிர்ப்பில் முனைப்பாக இருக்க வேண்டும். இத்தகைய தேசியம் சர்வதேசிய உணர்வுடன் உடன்பாடானதும் தேசிய் விடுதலையை மானுட விடுதலையுடன் சேர்த்து முன்னெடுப்பதுமாக அமையும். அப்போது தேசியமும் சோஷலிசமும் கியூபாவிற் போன்று உடன்படுகின்றன. தேசியத்தின் தன்மை தேசிய விடுதலைப் போராட்டம் முதலாக எந்த வர்க்கப் பார்வையும் வர்க்க நலன்களும் ஆதிக்கஞ் செலுத்துகின்றன என்பதிலேயே தங்கியுள்ளன.

மோகன்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



## இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன் 14

# பொருளாதாரச் சரிவினிடையே தொழிலாளர் போராட்டங்கள்

1929க்குப் பின்பு இலங்கையின் பொருளாதாரம் உலகப் பொருளாதாரத் தேக்கத்தின் கடும் பாதிப்புக்குட்பட்டது. ஏற்றுமதிகள் கடுமையான சரிவைச் சந்தித்தன. இறக்குமதிகளும் குறைந்தன. வேலையின்மை, விலைவாசி உயர்வு போன்ற நெருக்கடிகள் சாதாரண மக்களை குறிப்பாக நகர்சார்ந்த தொழிலாளரை மிகவும் பாதித்தன. இந்தச் சூழ்நிலையில் தொழிலாளரின் வேலை நிறுத்தப் போராட்டங்களை முறியடிப்பதில் முதலாளி வர்க்கம் தீவிரமாக நின்றது. வர்க்க அடிப்படையிலான முழுமையான ஒற்றுமையுடைய ஒரு தொழிலாளி வர்க்கமாக இருந்திருந்தால் இந்த விதமான முதலாளியத் திமிருக்கு எதிராக உறுதியாக நின்றிருக்க இயலும். ஆனால் அப்படிப்பட்ட வர்க்க ஒற்றுமையை உருவாக்கக்கூடிய ஒரு தொழிலாளர் இயக்கத் தலைமை அப்போது இருக்கவில்லை.

ஏ.ஈ. குணசிங்ஹவின் சிறுமுதலாளிய வர்க்க நிலைப்பாடு தொழிலாளிவர்க்க அதிகாரம் பற்றிச் சிந்திக்கக் கூடிய நிலையில் அவரை வைத்திருக்கவில்லை. அவரது அரசியலின் சந்தர்ப்பவாதம் அவரது வர்க்க இயல்புடன் தொடர்புடையது என்றே கூற வேண்டும். அவரது மாக்ஸிய விரோதமும் பிரித்தானிய தொழிற் கட்சியின் வலதுசாரிப் போக்குடையவர்களுடனான நெருக்கமும் அவரது அரசியலை முற்றிலும் சந்தர்ப்பவாதப் போக்கிலேயே நகர்த்தின.

வேலை நிறுத்தங்களை முறியடிக்கப் பெருமுதலாளிகள் எல்லாரும் பயன்படுத்துகிற ஒரு உபாயம் வேலையில்லாது கஷ்டப்படும் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவது ஆகும். அதிலும் அத் தொழிலாளர்கள் இன்னொரு சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கும் போதும் அந்த வேறுபாடு காரணமாக பகைமை ஏற்கெனவே இருக்கிற போதும் அந்த உபாயம் சிறப்பாகப் பலனளிக்கிறது. இதை அமெரிக்காவில் ஹென்ற ஃபோர்ட் பாவித்திருக்கிறார். அங்கே வெள்ளையர்- கறுப்பர் என்ற வேறுபாடு பயன்பட்டது. இலங்கையில் இலங்கையர் (முக்கியமாகச் சிங்களவர்) நடத்திய வேலை நிறுத்தப் போராட்டத்தை முறியடிக்க இந்தியத் தொழிலாளர்கள் பயன்பட்டனர்.

ஏற்கெனவே இந்தியத் தொழிலாளர்கட்கு எதிரான ஒரு நிலைப்பாட்டை எடுத்து 1928ல் நடேசையரைத் தொழிற்சங்க சம்மேளனத்திலிருந்து விலக்கிய ஏ.ஈ. குணசிங்ஹ தனது தொழிற்சங்க அமைப்பின் வேலை நிறுத்தங்கள் முந்திய காலங்களிற் பெற்ற விதமான வெற்றியைப் பெற இயலாது போன சூழ்நிலையில் அதற்கான உண்மையான காரணங்களை அறிந்து தொழிலாளி வர்க்க ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கு மாறாகப் பேரினவாதத் திசையில் அன்று இந்தியத் தொழிலாளர்கள் எண்ணிக்கையில் சிங்களவர்கட்கு அடுத்தபடியாக இருந்த நிலையில் அவர்களை இலக்கு வைத்துத் தனது இனவாத அரசியலை முன்னெடுத்தார். இந்தியாவி லிருந்து வந்த மலையாளிகளும் தமிழரும் அவரது இன வெறுப்பு அரசியலின் இலக்குக்களாயினர்.

எனினும் இந்த இனவாத அரசியலால் ஏ.ஈ. குணசிங்ஹவின் தொழிற்சங்க அரசியலைக் காப்பாற்ற இயலவில்லை. ஏனெனில் குணசிங்ஹ தொழிலாளர்களை வர்க்கக் கண்ணோட் டத்திலோ தொழிலாளிவர்க்கத் தலைமை என்ற நோக் கிலோ அணி திரட்டி வளர்த்தவரல்ல. அவரது நோக் கம் தொழிலாளரது நலன்கள் என்றிருந்த போதும் அவை முதலாளிய முறையின் வரையறைகட்கு உட் பட்ட நலன்களாகவே காணப்பட்டன. அவரது அரசி யல் நோக்கங்கள் தொழிலாளரது ஆதரவுடன் தன் னைப் பயப்படுத்துகிற நோக்கம் கொண்டனவாக இருந்ததால் தொழிலாளரது உடனடிப் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்வதற்கு அப்பால் அவரால் தொழிலாளர்களை ஒரு வர்க்கமாக ஒன்றிணைத்து அரசியல் விழிப்பூட்டும் அளவுக்குச் செல்ல வாய்ப்பு இருக்கவில்லை. எனவே தான் தொழிலாளர்கட்கு உடனடியாகக் கண்ணிற்படக்கூடிய இலக்குக்களை அவர் தெரிந்தெடுத்து தாக்கத் தொடங்கினார்.

1915 கலவரங்களின் போது வறுமைப்பட்ட நகரத் தொழிலாளர்கட்கு முஸ்லீம் சில்லரை வணிகர்கள் எதிரிகளாகக் காணப்பட்டது போல 1929க்குப் பின்பான வேலையின்மைக்குக் காரணமாக இந்தியாவிலிருந்து வந்த தொழிலாளர்கள் குறிப்பாக மலையாளிகள் அடையாளங்காணப்பட்டனர். இது குறுகிய காலத்தில் குணசிங்ஹ தலைமைக்கு வசதியாக இருந்தாலும் தொழிலாளரின் போராட்டங்கட்கு வெற்றி பெற்றுத் தர வல்லதாக இருக்கவில்லை. 1929ம் ஆண்டு லேக்ஹவுஸ் வேலை நிறுத்தத்தின் போது தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்களை வரவழைத்து லேக்ஹவுஸ் நிறுவனம் வேலை நிறுத்தத்தை முறியடித்தது. 1930ல் வீட்டு வேலைக்காரர்களாக இருந்த மலையாளிகளால் சிங்களவர்கட்கு அந்த வேலைகள் கிடையாமல் போகின்றன என்ற பிரசாரம் நடந்தது. அதனால் மலையாள வீட்டு வேலைக்காரர்கள் இலக்கு வைத்துத் தாக்கப்பட்டனர். இந்தப் பின்னணியில் ஏ.ஈ. குணசிங்ஹ வெள்ளையர்கள், இந்திய முஸ்லிம்கள், மலையாளிகள், போராக்கள் (வணிகசமூகம்) ஆகியோர் சிங்கள சமூகத்தின் இருப்பை ஒழிக்கக் காரணமாகவுள்ளனர் என்று தனது "வீரயா" ஏட்டில் எழுதினார். இது 1915 கலவரக் காலத்தின் இனவாதச் சிந்தனையின் ஒரு நீட்சியேயாகும். இதிற் கவனிக்க வேண்டியது என்னவெனில் ஒடுக்குமுறையாளர்கள் சிங்கள முதலாளிகளாக இருந்த போதும் அவர்கள் எதிரிகளாக அடையாளங் காணப்படவில்லை என்பது தான். அதேவேளை குணசிங்ஹ வெள்ளையர்களைப் பற்றிச் சொன்ன போதும் அவர் கொலனிய ஆட்சிக்கு எதிரான நிலைப்பாட்டினின்று போராடவில்லை. 1931ல் அரச சபைக்கு அவரது தொழில் கட்சியிலிருந்து அவரும் எஸ். டபிள்யு திஸாநாயக்கவும் தெரிவாயினர். வேலையின்மை, பட்டினி என்பன மக்களை வாட்டத் தொடங்கிய சூழலில் பஞ்சப் பட்டோருக்கான நிவாரணநிதி ஒதுக்குமாறு அவர் அரச சபையில் வேண்டுகோள் விடுத்தார். அவருக்கு ஆதரவாக பண்டாரநாயக்கவும் பேசினார். அந்தக் கோரிக்கைக்கு ஆதாரவான பிரேரணை மிகப் பெரும்பான்மையான வாக்குக்களால் நிறைவேறியது. அதை விடக் கொழும்பு நகரசபை வேலையிழந்த எழுதுவினைஞர்கட்கும் தொழிற் பயிற்சியுடைய தொழிலாளருக்கும் நிவாராணம் வழங்கியது. எனினும் இவை நாடளாவிய பொருளாதார அவலத்துக்கு முகங் கொடுக்கப் போதுமானதாக இருக்கவில்லை.

1929ல் லேக்ஹவுஸ் வேலை நிறுத்தம் தோற்ற பின்பு 1931ல் டைம்ஸ் வேலைநிறுத்தம் தோல்வி கண்டது. டைம்ஸ் நிறுவனம் வேலையில்லாதோரைப் பயன்படுத்தி வேலைநிறுத்தத்தை முறியடித்தது. 1933ல் நடந்த கோல்ஃபேஸ் ஹொட்டேல் வேலை நிறுத்தமும் இவ்வாறே முறியக்கப்பட்டது.

நாடு ஒரு பொருளாதார நெருக்கடியையும் கொலனிய நிருவாகம் பற்றிய அதிருப்தி காரணமான அரசியற் கொந்தளிப்பையும் கொண்டிருந்த 1929 முதலான ஐந்து ஆண்டுகளில் தொழிலாளர்களது போராட்டங்கள் ஏன் தோல்வி கண்டன? வெறுமனே முதலாளிமாரது லாபத்திற்கு ஊறாக வேலை நிறுத்தம் என்கிற ஆயுதத்தைப் பாவிக்க இயலாத படி அன்றைய பொருளாதாரத் தேக்க நிலை தடையாக இருந்தது. அதே போராட்டங்கள் வர்க்க அடிப்படையிலான தொழிலாளர் ஐக்கியம் கொலனி ஆட்சிக்கு எதிரான பரந்துபட்ட ஐக்கிய முன்னணி என்ற அரசியற் தளங்களிலிருந்து முன்னெடுக்கப்பட்டிருந்தால் அவற்றின் கதையே வேறாக இருந்திருக்கும். ஆனால் குணசிங்ஹவினதும் இலங்கைத் தொழிற்கட்சியினதும் அரசியல் நோக்கு அப்படி அமைந்திருக்கவில்லை. கொலனிய ஆட்சிக்கு எதிரான அரசியல் இயக்கம் இலங்கையில் பொருளாதார நெருக்கடியின் விளைவான இன்னல்கள் மிகுந்த ஒரு சமூகச் சூழலில் இடதுசாரிச் சிந்தனையின் தோற்றதுத்துடனும் எழுச்சியுடனும் இணைந்தே விருத்தி பெற்றது. எனினும் அதன் குறைபாடுகள் இலங்கையின் இடதுசாரி இயக்கத்தின் வரலாற்றின் மீது மட்டுமன்றி நாட்டின் எதிர்காலத்தின் மீதும் பாதிப்பை ஏற்படுத்தின. இது பற்றிப் பின்னர் விரிவாக நோக்குவோம்.

# புதுவசந்தம் ஒரு பார்வை

**புதுவசந்தம் தேசிய கலை இலக்கியப் பேரவையின் 35வது ஆண்டு மலர் தேசிய கலை இலக்கியப் பேரவை 44 மூன்றாம் மாடி கொழும்பு மத்திய சந்தைக் கூட்டுத்தொகுதி கொழும்பு 11 2008 ரூ 350/=**

பத்து ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் வெளிவந்துள்ள புதுவசந்தம் தேசிய கலைஇலக்கியப் பேரவையின் முப்பத்தைந்து ஆண்டுக் கால வளர்ச்சியையும் அது சார்ந்து நிற்கும் கலை இலக்கிய நோக்கையும் சமூக இலக்கையும் தெளிவாக அடையாளப்படுத்தி நிற்கிறது.

இன்றைய சூழலில் கலை இலக்கியங்களில் நோக்கும் போக்கும் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டுவது சி.கா. செந்திவேலின் "கலை இலக்கியமும் அரசியலும்" எனுங் கட்டுரை. மலையகத் தமிழக் கலை இலக்கிய இயக்கப் போக்கை வரலாற்று நோக்கில் தொகுத்து அது செல்ல வேண்டிய திசையை அடையாளங்காட்டுவது இ. தம்பையாவின் கட்டுரை. மலையக இலக்கியங்களின் செல்நெறி பற்றி "ஒடுக்கப்பட்டோர் இலக்கியமும் மலையக மக்களும்" என்ற ஜெ. சற்குருநாதனின் கட்டுரை மலையக இலக்கியம் எதிர்நோக்குகிற சவால்களை விளக்கி என்.ஜி.ஓக்களின் ஊடுருவலின் விளைவுகளைப் பற்றிய எச்சரிக்கையை முன்வைக்கிறது. ஒடுக்கப்பட்டோர் இணைந்து ஸ்தாபன ரீதியான முறையிற் செயற்படுவதன் தேவையைச் சோ. தேவராஜாவின் "இரு வேறு உலகங்களும் இரு வேறு மனிதர்களும்" என்ற கட்டுரை கூறுகிறது. சில மாதங்கள் முன்னர் தெ. ஞா. மீநிலங்கோ ஆற்றிய பேராசிரியர் கைலாசபதி நினைவுப் பேருரையான "விடுதலை நோக்கில் தேசிய இலக்கியமும் சர்வதேச இலக்கியமும்" எனுங் கட்டுரை பேராசிரியர் கைலாசபதி வலியுறுத்திய சமூக நோக்கத்தையும் உலகளாவிய பார்வையையும் விரிவுபடுத்தி விளக்கி நிற்கிறது. அது இம் மலர் மூலம் ஆவணப்படுத்தப்பட்டமை மிகவும் வரவேற்கத்தக்கது. அச் சிந்தனைத் தடத்தின் வழியே வரும் சிங்கள இலக்கியத்தில் நாட்டாரியல் என்ற சை. கிங்ஸ்லி கோமஸின் கட்டுரை நாட்டாரிலக்கியத்தின் சர்வதேசப் பொதுமைப் பண்புகளைக் கூறி நிற்கிறது. சி. சிவசேகரத்தினதும் ந. இரவீந்திரனின் கட்டுரைகள் மேற்கூறிய கட்டுரைகளின் தன்மையிலிருந்தும் விலகி நிற்கின்றன. தமிழில் தனிச் சிறப்புக்கள் என்ற கட்டுரை தமிழின் வலிய அம்சங்களை உணராமல் அதன் சிறப்புக்கள் என்று பழம் பெருமை பேசுகிற போக்கை விமர்சிக்கிறது. இக் கட்டுரை மேலும் விரிவாக எழுதப்பட்டிருப்பின் அதில் முன்வைக்கப்பட்ட வாதங்களை விளங்கிக் கொள்ள வசதியாய் இருந்திருக்கும். இரவீந்திரனுடைய "பாரதியின் கருத்தியல் தளம் ஒரு சிறு குறிப்பு" எனுங் கட்டுரை 1982ல் எழுதப்பட்ட




நூலொன்றிற் கூறப்பட்ட கருத்துக்கட்கு மறுப்புப் போலவும் பாரதியை ஒரு வழிபாட்டுப் பொருளாக்குகிற தொனியிலும் அமைந்துள்ளது. பாரதியை ஆன்மீக நாத்திகர் என்று அவர் அடையாளங்காட்ட முற்படுவதும் பாரதியின் கருத்தியற் தளத்தில் காலூன்றியபடி மார்க்சியத்தின் சரியான பிரயோகத்தை உள்வாங்க வேண்டும் என்ற பரிந்துரையும் கட்டுரையின் உள்ளடக்கத்தின் மூலம் நிறுவப்படாமல் நிற்கின்றன. மலருக்குச் சிறிது பொருத்தமற்ற முறையில் அமைந்துள்ளது என்றே தோன்றுகிறது.

பேரவையின் தேசிய மாநாட்டு அறிக்கை கவனமாகவே அமைந்த போதும் அதில் ஒரு சில தகவல்கள் விடுபட்டுப் போனமை பற்றி மாநாட்டிற் குறிப்பிடப் பட்டுள்ளது. எவ்வாறாயினும் அது ஈழத்துத் தமிழ்க் கலை இலக்கிய வளர்ச்சியின் அதி பயனுள்ள ஒரு பகுதியின் வரலாற்றையும் பங்களிப்பையும் புதிய தலைமுறையினர்க்காக ஆவணப்படுத்தி நிற்கிறது.

செம்மலர்கள் வீதி நாடகக் குழுவின் இயக்குநர் சிவ. இராஜேந்திரனுடைய செவ்வி இன்று பரவலாகக் காணக் கிடைக்கிற சுய விளம்பர வீரப்பிரதாபங்கட்கு மாறாக வெகுஜனப் போராட்ட நோக்குடைய ஒரு நாடகக் குழுவின் செயற்பாடுகளைப் பற்றிய ஒரு பயனுள்ள விவரணமாகக் கூட்டுச் செயற்பாட்டுக் கண்ணோட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளமை மெச்சத் தக்கது. சிவ. இராஜேந்திரன் தனது கலை இலக்கியப் பார்வையை மேலும் விரிவாக எல்லாரும் பயனுறும் வகையிற் கட்டுரைகளாகத் தொடர்ந்து வழங்க முன்வர வேண்டும்.

இரண்டு தமிழாக்கங்கள் உட்படப் பத்துச் சிறுகதைகள் உள்ளன. அனைத்துமே சமகாலச் சமூகப் பிரச்சினைகளைப் பல்வேறு கோணங்களிலிருந்து நோக்குவன. அவை அனைத்திலும் சமூக நீதிக்கான வேட்கை வெளிப்படுவது வரவேற்கத்தக்க ஒரு அம்சமாகும். கதைகள் பற்றிய குறிப்பான விமர்சனங்களை எழுத இடம் போதாமையால் அவை பற்றிய கலந்துரையாடல்கள் பயனளிக்கும்.

கோகிலா மகேந்திரனின் "இலக்குப் புள்ளி" எனுங் கலந்துரையாடல் அரங்கு தமிழில் நவீன நாடக அரங்க வளர்ச்சிக்குப் பயனுள்ள பங்களிப்பை வழங்கும் என நம்புகிறேன். மலரில் வழங்கப்பட்டதினும் விரிவான முறையில் நாடகப் பிரதியை விருத்தி செய்ய இயலும் என்றுந் தோன்றுகிறது.

நூலின் உள்ளே சோ.ப வின் தமிழாக்கம் உட்டபடப் பதினாறு கவிதைகளும் உள் அட்டையில் மேலும் மூன்று தமிழாக்கங்களும் உள்ளன. ஈழத்தின் தலைசிறந்த கவிஞரான முருகையனது இன்னமும் மிகவும் பொருத்தமான "இரண்டாயிரமாண்டுப் பழைய சுமை எங்களுக்கு" என்ற கவிதை போக மற்ற அனைத்தும் புதிய ஆக்கங்கள். ஒவ்வொன்றும் வேறுபட்ட கவிதை வடிவங்களையும் கூறும் விதங்களையும் கொண்டுள்ளன. வெகுசன இலக்கியக் கண்ணோட்டத்திலான கவித்துவ எழுச்சிக்கு இவை கட்டியங் கூறி நிற்கின்றன.

அழகான முகப்புடன் பொலிவான வெளித் தோற்றமும் சீரான முறையில் அமைக்கப்பட்ட பக்கங்களும் மலருக்கு மேலுஞ் சிறப்புச் சேர்த்தாலும் அச்சுப் பிழைகள் மிகுதியாயுள்ளமையும் ஓரிரு இடங்களில் அச்சுக்கோப்புக் கோளாறுகளும் மலரின் பெறுமதியைக் கொஞ்சங் கீழிறக்குகின்றன.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் முப்பத்தைந்தாம் ஆண்டு நிறைவின் ஆவணமாக மட்டுமன்றி ஒரு புதிய கலை இலக்கிய நம்பிக்கைச் சுடரை ஏற்றி வைத்துள்ள முறையிலும் இம் மலர் விரிவான வாசிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டியதாகும்.

திருமுகன்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# கொழும்பில் தமிழர் தங்கியிருப்பது ஏன்?

இந்தக் கேள்வியை எழுப்பி இருப்பவர் மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் பாதுகாப்புச் செயலாளரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷவாகும். கொழும்பில் வந்து தங்கியுள்ள தமிழர்கள் மத்தியிலிருந்தே பயங்கரவாத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது என்ற சாரப்படவும் பாதுகாப்புச் செயலர் தான் வழங்கியுள்ள நேர்காணல் ஒன்றில் கூறியுள்ளார். அவரது நேர்காணலின் சாராம்சம் முழுக்க முழுக்க பேரினவாத அகங்காரத் தொனி கொண்டதாகும். இந் நேர்காணல் வெளிவந்த இரண்டு நாட்களிலேயே 21-09-2008 அன்று கொழும்பில் தங்கியுள்ள தமிழர்கள் குறிப்பாக வடக்கிலிருந்து 2003ம் ஆண்டுக்குப் பின் வந்தவர்கள் பொலீஸ் நிலையங்கள் சுட்டிக் காட்டிய இடங்களில் வைத்து பதிவுகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். நேரிலும் ஒலி பெருக்கிகள் மூலமும் தெரியப்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்ட மேற்படி செயல் தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாத ஒடுக்கு முறையின் ஒரு வடிவம் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. அதன் மூலம் வடக்குத் தமிழர்கள் இரண்டாம்தரப் பிரசைகளாக இழிவுபடுத்தி நடாத்தப்பட்டிருக்கிறார்கள். இலங்கையின் அனைத்து சட்ட பூர்வ ஆவணங்களிலும் "இலங்கையர்" என்றே தமிழர்களும் பதியப்படுகிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாகக் கொள்ளப்படும் அரசியல் அமைப்பும் இலங்கையர் அனைவரும் சமமானவர்கள் என்றே குறிப்பிடுகிறது. அத்தகைய இலங்கையர் இலங்கையின் எப்பாகத்திலும் வசிப்பதற்கும் ஏனைய உரிமைகளைக் கொண்டிருப்பதற்கும் முழுத் தகுதியுடையவர்கள் என்றே கூறப்பட்டிருக்கிறது. அவ்வாறு தான் தமிழர்களும் இந் நாட்டைத் தமது நாடாகக் கொண்டே தொன்று தொட்டு வாழ்ந்து வருகிறார்கள். வடக்கு கிழக்கை பூர்வீகமாகக் கொண்டு வாழ்ந்து வந்த தமிழர்கள் தமது பாரம் பரிய பிரதேசங்களில் பௌத்த சிங்களப் பேரினவாதம் தனது ஆதிக்கக் கரங்களை நீட்டி இன முரண்பாட்டை வளர்த்து இன ஒடுக்கு முறையை விரிவாக்கியது. இதனைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. தமது பாரம்பரிய நிலங்களும் பிரதேசங்களும் பறிக்கப்படுவதையும் தமிழ் மொழி இரண்டாம் தரம் ஆக்கப்படுவதையும் கல்வி வேலை வாய்ப்பு இதர துறைகளில் புறக்கணிக்கப்படுவதையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் அவ்வப்போது வடக்கு கிழக்குத் தமிழர்களின் சார்பான கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. இதனை முன்வைத்தவர்களும் அதற்கான தலைமை தாங்கியவர்களும் தமிழர் பழைமைவாத மேட்டுக்குடி வழிவந்த அரசியல் தலைமைகளாகவே இருந்தனர். அதேவேளை அதே வகையினரான சிங்கள மேட்டுக்குடி ஆளும் வர்க்கத்தினர் பேரினவாதிகளாகி ஆதிக்கம் செலுத்தினர். இவ்விரு தரப்பினரும் தத்தமது உயர்வர்க்க ஆதிக்கம் ஆளும் அதிகாரம் என்பனவற்றுக்காக இன முரண்பாட்டை இன்றைய யுத்தம் வரை வளர்த்தனர். இதில் பாதிக்கப்பட்டவர்கள் வடக்கு கிழக்கின் தமிழர்கள் மட்டு மன்றி மலையகத்தின் தமிழர்களாகவும் இருந்தனர்.




இன முரண்பட்டிற்கு ஆரம்ப முளை நிலையிலேயே இலகுவாகத் தீர்வு கண்டிருக்க முடியும். அதற்கான சந்தர்ப்பங்கள் யாவும் பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கத் தலைமைகளால் திட்டமிட்ட வகையில் நிராகரிக்கப்பட்டு தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன. தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் உரிமை மறுத்தல்களுக்கும் உரிய நியாயம் வழங்கப்பட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசையும் கோரிக்கையுமாகும். அதற்குப் பழைமைவாதத் தலைமைகளும் அதன் பின் ஆயுதம் ஏந்திய தமிழ் இளைஞர் அமைப்புகளும் தலைமை தாங்கின. வரலாறு வேண்டி நின்ற தலைமையை மேற் சொன்னவர்களே தமிழ் இனத்தின் தமிழ் மொழியின் பேரால் தமதாக்கிக் கொண்டனர். பழம் பெருமையையும் வெறும் இனப் புகழ்ச்சியையும் வீரதீரப் பிரதாபங்களையும் பேசியவர்களை தமது தலைமைகளாக தமிழ் மக்கள் ஏற்றனர். அதன் இன்று வரையான எதிர் விளைவுகள் எவ்வாறு அமைந்து வந்தன என்பது சுய விமர்சன வழிகளில் அரசியல் மறு மதிப்பீட்டிற்கு தமிழ் மக்கள் வர வேண்டிய ஒரு கால கட்டம் வந்துள்ளது என்பதும் இவ் வேளை சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

நிற்க, மேற்குறித்த சூழல்களின் ஊடாக வளர்ந்து வந்த யுத்தம் அதற்கெதிரான போராட்டங்களின் மத்தியில் வடக்கு கிழக்கு மக்கள் கடந்த மூன்று தசாப்த காலத்தில் அனுபவித்தவைகள் கொஞ்ச நஞ்சமல்ல. உயிரிழப்புகள் இடப்பெயர்வுகள் சொத்தழிவுகள் தொழில் இழப்புகள் உள்ளிட்ட வாழ்வாதாரங்கள் யாவற்றையும் பறிகொடுத்த மக்களாகவே வாழ்ந்து வருகின்றனர். இத்தனைக்கும் மத்தியில் தமிழ் மக்கள் தமது வாழ்வைத் தொடரவே செய்கின்றனர். ஒவ்வொரு முனையிலும் துன்பதுயரங்கள் மத்தியில் வாழ்க்கைப் போராட்டத்தை நடாத்தியே வருகின்றனர். அந்த வகையில் கொழும்புத் தலைநகர் அமைந்துள்ள மேல் மாகாணத்திற்கு தமிழ் மக்கள் வருவதும் தங்கியிருந்து தமது அலுவல்களை மேற்கொள்வதும் அவர்களது அடிப்படைத் தேவை காரணமாகவேயாகும். அது கூட ஒரு வகைப் போராட்டமானதேயாகும். கொழும்பில் வந்து வசிக்கும் வடக்குக் தமிழர் எல்லோரும் சுகபோகம் அனுபவிக்கவரவில்லை. அவ்வாறு சுக போகம் அனுபவிக்கும் தமிழர்கள் ஏற்கனவே இங்கு வந்தவர்கள். நிரந்தரமாகிய கொழும்பு வாசிகள். அவர்கள் பெரும் வீடுவாசல்கள் தொழில்வருமான வசதி மிக்கவர்கள். அவர்களின் வர்க்க வசதிகள் சாதாரண தமிழர்களிடமிருந்து வேறுபட்டவை. அத்தகையவர்கள் சிங்கள பௌத்த ஆளும் வர்க்கத்துடன் உறவு பூண்டு சொத்து சுகங்களுடனே வாழ்ந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக 2003ம் ஆண்டுக்கு முன்பு என்ற எல்லை மட்டுமன்றி கடந்த மூன்று தசாப்த காலத்தில் கொழும்பு வந்த தமிழர்கள் சொகுசு நோக்கி வந்தவர்கள் அல்லர். வடக்கு கிழக்கில் நெருக்கடிகள் மோதல்கள் யுத்த அடக்குமுறைகள் இயக்கங்களின் ஜனநாயக மறுப்புகள் சகோதர படுகொலை நிகழ்வுகள் மத்தியில் தமது இருப்பிடங்களை விட்டு கொழும்பு வந்த வர்கள். புலப்பெயர்வின் மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டு கொழும்பில் வாழுமாறு தமது பிள்ளைகளால் உறவினர்களால் கட்டாயப்படுத்தப்பட்டவர்கள். இத்தகையவர்கள் இன்றும் தமது சொந்த மண்ணின் மீதான பற்றுடனும் திரும்ப வேண்டும் என்ற ஏக்கத்துடனுமே வாழ்ந்து வருகின்றனர். இத்தகையோரை ஏன் இங்கு வாழ்கிறீர்கள் என்று பேரினவாதம் கேட்பதற்கு உரிய பதில் நீங்களும் உங்களது இன ஒடுக்கு முறையும் தான் காரணம் என்றே தமிழ் மக்கள் கூறுகிறார்கள்.

இதற்கும் மேலாக தங்கு விடுதிகள் வாடகை வீடுகளில் தங்கியிருக்கும் தமிழர்கள் கடற்கரைக் காற்றைச் சுவாசித்து ஐந்து நட்சத்திரக் ஹோட்டல்களில் கூடிக்கும்மாளம் அடிக்க வந்தவர்கள் அல்லர். வடக்கு கிழக்கு இலங்கையின் ஒரு பகுதியாகவும் கொழும்பு அதன் தலைநகராகவும் இருக்கின்றன. சகல அரசாங்க தனியார் துறைத் தலைமையகங்களும் கொழும்பிலேயே இருக்கின்றன. கல்வி சுகாதாரம் மருத்துவம் உள்ளிட்ட ஏனைய சமூகத் தேவைகளுக்கும் கொழும்பிற்கே வர வேண்டியுள்ளது. ஒற்றையாட்சியை இறுகக் கட்டிப் பிடித்து நிற்பதன் மூலம் அதிகாரப் பகிர்வு மறுக்கப்படுகிறது. மாகாண சபைக்கான பதவிப் பிரமாணம் கூட அலரிமாளிகையில் தான் நடாத்தப்படுகிறது. இந் நிலையில் நாட்டு மக்கள் அனைவருமே கொழும்புக்குத் தான் வருகிறார்கள். கடவுச் சீட்டு அடையாள அட்டை சாரதி அனுமதி உள்ளிட்டவை இங்கு தான் இறுதி நிலைப் பூர்த்தி செய்யப்படுகிறது. வெளிநாடு செல்லும்



சகல செயற்பாடுகளும் சர்வதேச விமான நிலையமும் இங்குதான் உண்டு. இவற்றை நாட்டின் பாதுகாப்புச் செயலாளர் அறியாதிருக்கிறாரா? அப்படி அறிந்திருந்தால் வடக்கின் தமிழர்கள் ஏன் இங்கு வரவேண்டும் என்ற கேள்வியை எழுப்பியிருக்கமாட்டார்.

எனவே தமிழர்கள் கொழும்பு வருவதற்கும் தமது விருப்பப்படி தங்கியிருப்பதற்கும் தமது அலுவல்களைச் சுதந்திரமாகச் செய்வதற்கும் பூரண உரிமையுடையவர்கள். அவர்கள் இந்நாட்டின் குடிசார் மக்கள். அவர்கள் எவருக்கும் இரண்டாம் தரப்பிரசைகள் அல்லர். அவர்களை ஏன் வந்தாய் எங்கு இருக்கிறாய் எப்போது போகப் போகிறாய் என்ன செய்கிறாய் எனக் கேட்க முடியாது. அப்படிக் கேட்பது அரசியலமைப்பின்படி அடிப்படை உரிமை மீறலாகும். அவசரகாலச் சட்டத்தையும் நிறைவேற்று அதிகாரத்தையும் கொண்டு தமிழ் மக்களின் அடிப்படை வாழ்வுரிமையை மறுக்க முடியாது. இன ஒடுக்கல் இனச்சுத்திகரிப்பாக மாறுமானால் அது அப்பட்டமான ஃபாசிசமாகவே வளர்ச்சி பெறும். அப்போது அது தமிழ் மக்களை மட்டுமன்றி முஸ்லீம் சிங்கள மக்கள் உள்ளிட்ட அனைத்து மக்களையும் வேட்டையாடவே செய்யும் என்பதை மறக்கலாகாது.

*வடபுலத்தான்*

# கண்டதும் கேட்டதும்

## செய்திக் கோப்பு

## செஞ்குருவி

### ● புஷ்சின் பாதையில் மகிந்த

"வடக்கில் நான் மேற்கொண்டிருப்பது மனிதாபிமான நடவடிக்கையாகும். அதனைப் பொது மக்கள் பாதிப்படையாதவாறு முன்னெடுக்குமாறு படைகளுக்கு உத்தரவிட்டிருக்கின்றேன். நான் யுத்தப் பிரியன் அல்லன். ஜனநாயகத்தை நிலை நாட்டவே பாடுபடுகின்றேன்" இவ்வாறு நியூயோர்க் நகரில் உள்ள ஒரு விகாரையில் இடம் பெற்ற நிகழ்வில் ஜனாதிபதியானவர் கூறியிருக்கிறார். இதையே தான் ஏற்கனவே அமெரிக்க அதிபர் புஷ் ஈராக், ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிப்பு யுத்தத்திலும் கூறி வருகிறார். எனவே உலகின் பொது எதிரியான புஷ்ஷின் பாதையில் மகிந்த என்று கூறலாம் தானே. ஆட்கள் வேறு குரல்கள் ஒன்றாகவே காணப்படுகிறது.

### ● துடக்கும் புனிதமும்

தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு தலைமை தாங்கியோரில் ஒரு பிரிவினர் இந்தியாவையும் மறு பிரிவினர் அமெரிக்க- மேற்குலகையும் நம்பிக்கையான எசமானர்களாக நம்பி வந்தனர். அண்மையில் கூட ஒரு ஆய்வாளர் சென்னைக்கு ஊடாக டெல்லியை நமது கைக்குள் போடவேண்டும் என்று எழுதினார். மற்றொருவர் அமெரிக்கா மனித உரிமையின் பெயரால் ஏதேதோ தலையிட வேண்டும் என எழுதினார். அதற்கு சீனாவைப் பூதாகரமாகக் காட்டுவது அவரது வழமையான எழுத்து. இப்போது இந்த ஆய்வாளர்கள் எல்லாம் "நாங்கள் யாரையும் நம்பக் கூடாது" என்று விரக்தியில் சோக கீதம் எழுதுகிறார்கள். இதையே அந்நிய ஆதிக்க சக்திகளை நம்பிப் போராட்டத்தை உரிய திசையில் முன்னெடுக்க முடியாது என மாக்சிச லெனினிச வாதிகள் முன்பிருந்தே கூறி வருகிறார்கள். தமிழ் தேசியவாத ஆய்வாளர்களுக்கு அவர்கள் சொன்னால் துடக்கு தாங்கள் கூறினால் புனிதம்.

### ● உள்ளொன்றும் புறமொன்றும்

ஐ.நா சபையில் ஜனாதிபதி நாலு வார்த்தை தமிழில் கூறி விட்டார். அதற்குப் போற்றுதல்கள் ஒருபுறம். அது ஒரு ஏமாற்று என மறுபுறம் கருத்துக்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஜனாதிபதி உலக மன்றத்தில் தமிழுக்கு மேன்மையிடம் அளித்திருக்கிறார் என்றால் அவரது ராணுவத் தளபதி கனேடியப் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் சிங்களவர்களுக்கே இலங்கை சொந்தமானது ஏனையோர் வாழ்ந்து விட்டுப் போவதில் ஆட்சேபனை இல்லை என்றும் கூறி இருக்கிறார். ஜனாதிபதி உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசியுள்ளார். தளபதி உள்ளம் திறந்து தங்களது பேரினவாத ஆதிக்க நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளார். இதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லையே.

### ● சாதியத்திற்கு ஒரு சோற்றுப் பதம்

வடபுலத்திலிருந்து ஒருவர் கொழும்பு வந்திருந்தார். சில நாட்கள் தனது உறவினரான ஒரு பல்கலைக்கழக விரிவுரை யாளரான உறவினருடன் தங்கியிருந்து சில இடங்களுக்கும் போய் வந்தார். ஒரு நாள் வெள்ளவத்தையில் உள்ள மரக்கறி உணவகத்தில் தேனீர் குடிக்க உட்காந்திருந்தனர். இரண்டு கிளாஸ் களில் தேனீர் கொண்டு வந்து வைக்கப்பட்டது. உடனே அந்த வடபுலத்து நபர் சற்றுக் கோபத்துடன் இதில் வேண்டாம் கப்பில் கொண்டு வர எனத் திருப்பி விட்டார். கூட வந்த இளைஞர் ஏன் என்று கேட்டார். அதற்கு அந்த மனிதர் சொன்ன பதில் "கிளாசில் கொடுப்பது மற்ற ஆட்களுக்குத் தான்" என்றார். இளைஞரான அந்த விரிவுரையாளருக்கு தூக்கிவாரிப்போட்டது. இதில் மேலும் ஒரு தகவல் அந்த வடபுலத்து மனிதர் கிளிநொச்சியில் ஒரு பொறியியலாளராகப் பணியாற்றுபவர் என்பதாகும். சாதியம் மறைந்து விட்டது என்பது உண்மையா? மேற்படி சம்பவத்தை நமது தமிழ்ச் சூழலில் ஒரு சோற்றுப் பதமாகக் கொள்ளலாமா?

### ● புலம் பெயர்ந்தவர்கள் மத்தியில்

தற்போதைய வன்னி நோக்கிய யுத்தத்தின் வேகம் புலம் பெயர்ந்த நாடுகளின் தமிழர்களிடையே வாதவிவாதங்களைத் தோற்றுவித்துள்ளது. வெற்றியா தோல்வியா எனப் பந்தயம் பிடிக்கும் அதே வேளை புலிகள் இயக்கத்திற்கு அப்பாலான பல்வேறு தமிழ் இயக்கங்களும் இன்றைய சூழலில் தம்மைப்பலப்படுத்திக் கொள்ள வேகமாக முயன்று வருகின்றன. அதற்காக இணையத் தளப் போரிலும் ஈடுபட்டும் வருகின்றனர். என்னதான் நடந்தாலும் தமிழர் பழைமைவாதக் கருத்தியலையும் சுயநிர்ணய உரிமைக்கான தவறான கொள்கையையும் மக்கள் விரோத நடைமுறைகளையும் நிராகரித்து சரியான கொள்கைகளைப் பின்பற்றாவிடின் யாரும் எந்தப் பெயரில் செயல்பட்டாலும் பழையனவற்றைக் கொதிப்பிக்க முற்படும் செயலாகவே இருக்கும். அதனால் தமிழ் மக்களுக்கு எதுவும் ஆகப்போவதில்லை.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



தேசிய கலை இலக்கியப் பேரவையின்

# "புது வசந்தம்" கட்டுரைகள் பற்றி ஒரு விமர்சனக் குறிப்பு

புதிய மலையகம் மகேந்திரன்

உலகின் கலை இலக்கிய வரலாற்றுத்தளம் எப்போதும் இருவேறான இயக்கப் போக்குகளினூடே இயங்கி வந்திருக்கிறது. ஒன்று ஆளும் வர்க்க நலன் சார்ந்தது. மற்றது ஆளப்படுகின்ற சுரண்டப்படுகின்ற மக்களுக்கானது. ஆளும் வர்க்க கலை இலக்கியம் சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் உட்படுத்தப்படுகின்ற மக்கள் மீதான பண்பாட்டு கலாச்சார ஆதிக்கப் போக்குடையதாகவும் அம்மக்களின் சிந்தனைகளையும் உணர்வுகளையும் எழுச்சியையும் நசுக்கி ஆளும் வர்க்க ஆதிக்க நலனை நிலைநிறுத்திக் கொள்ளவதற்கானதாகும். ஒடுக்கப்பட்டோர் இலக்கியம் ஆளுகைக்கு எதிரான குரலாகவும் கோடான கோடி மக்களின் உணர்வுப் பிழம்பாகவும் இருந்து வந்துள்ளது. அந்த வகையில் உலகின் விடுதலைப் போராட்ட வரலாற்றினை நோக்கும் போது அவற்றுக்கு வழி சமைப்பதாகவும், வலுச்சேர்பதாகவும் கலை இலக்கியம் ஆற்றி வந்திருகின்ற பணி காத்திரமானது. இன்றைய உலக மக்கள் கலை இலக்கியத்தளம் ஏகாதிபத்திய மேலாதிக்க கருத்து நிலை சிந்தனைகளினாலும் நவீன ஊடக ம.்.பியா ஆக்கிரமிப்புகளினாலும் கணனி வலையமைப்பு சினிமா இழிநிலை பண்பாட்டு சீரழிவுகளினாலும் மக்கள் விரோத வர்க்க விரோத கோட்பாட்டு இசங்களினாலும் பழமைவாத வரட்டுவாத அடிப்படைவாத சிந்தனைகளினாலும் மிக மோசமான ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் சமூக விடுதலைக்கான மக்கள் கலை இலக்கிய தளமானது மிக கடுமையான நெருக்குதல்களுக்கும், சவால்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றது.

அந்த வகையில் பயங்கரமான போர் சூழலும் இன மேலாதிக்கமும் மேட்டுக்குடி மேலாண்மை இந்திய சினிமா மெகா தொடர் மயம் வரட்டுத்தனமான மொழிப்பற்று தேசியவாத மக்கள் விரோத கூப்பாடுகள் நிறைந்த ஈழத்து தமிழ் இலக்கியப் பரப்பில் மக்கள் கலை இலக்கிய கோட்பாட்டினை முன்னுறுத்தி காத்திரமான செயற்பாட்டு வடிவங்களுடன் தனது முப்பதைந்து வருட வரலாற்று பயணச்சாதனையுடன் நிமிர்ந்து நிற்கும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் பணி வரவேற்புக்கும் வாழ்துதலுக்கும் உரியதாகும். அந்த வகையில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஆண்டு விழா சிறப்பு மலராக வெளிவந்திருக்கும் "புது வசந்தம்" ஒரு வரலாற்று ஆவணமாக நோக்கத்தக்கது.

"புது வசந்தம்" இன்றைய ஈழத்து கலை இலக்கியப்பரப்பல் பேசப்பட வேண்டிய பல காத்திரமான விடயங்களை படைப்பாக்கமாக கொண்டு நேர்த்தியான வடிவமைப்புடன் வெளிவந்திருக்கிறது. கட்டுரைகள், கவிதைகள், சிறுகதை மொழி பெயர்ப்புகள் என "புது வசந்தம்" தாங்கி வந்திருக்கும் படைப்புக்கள் ஆழமான வாசிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டியவையாகும். அத்தோடு ஈழத்து இலக்கிய தளத்தில் முனைப்பு கொள்ள எத்தனிக்கும் தமிழ் தேசியவாதம், புரட்டல் வாதம், மக்கள் விரோதம், பழமை வாதம், அடிப்படைவாதம், பின்நவீனத்துவம், மக்கள் விரோத கோட்பாடுகளுக்கும் அவை சார்ந்த படைப்பிலக்கிய வாதிகளுக்கும் தகுந்த பதிலடி கொடுப்பதாக அமைந்துள்ளது.


வர்க்க நிலையையொட்டிய கலை இலக்கிய சிந்தனைக்கும் அவை தொடர்பான கருத்தாடல்களுக்கும் வழியமைப்பதாக "புது வசந்தம்" தாங்கி வந்திருக்கும் கட்டுரைகள் அமைந்துள்ளன.

"தமிழின் தனி சிறப்புகள்" இது பேராசிரியர் சி. சிவசேகரம் அவர்களின் கட்டுரையாகும். மொழியின் பயன்பாட்டுத் தொடர்பில் ஆழமானதோர் ஆய்வுத் தேவையினை வலியுறுத்துவதாக அமைந்திருக்கிறது. இக்கட்டுரை சமூக சார்பற்ற குருட்டுத்தனமான மொழிப்பற்றும் விஞ்ஞான பூர்வமான மதிப்பீடுகளுக்கப்பாலான மூட நம்பிக்கைகளும் நிலைத்த பழைமைவாதிகளிடம் சிக்கித் தவிக்கும் தமிழ் மொழி வேண்டி நிற்கும் நியாய பூர்வமான கட்டுடைப்புகள் பற்றி பேசுகிறது. எந்தவொரு மொழியின் பெருமையும் சிறப்பும் அதன் சமூக தேவைகளில் இருந்தே முன்னெழுகிறது. கால தேவையினை மறுக்கும் வரட்டு வாதமும் மாற்றங்களை மறுக்கும் பழம்பெருமையும் ஒரு மொழியின் வளர்ச்சிக்கு தடையாக அமைவதோடு அதன் அழிவுக்கும் வித்திடும் என்பதை எச்சரிக்கிறார். அத்தோடு தமிழ் மொழியில் அதன் தனிதன்மை சிதையா வண்ணம் செய்யப்பட வேண்டிய மாற்றங்களுக்கான அவசியப்பாட்டினை வலியுறுத்துகின்றார். வெறுமனே பழம் பெருமை பேசிக் கொண்டிருப்பதிலோ புராணங்கள் பற்றி வாய்ச் சவடால் அடித்துக் கொண்டிரு ப்பதிலோ எதுவும் நடந்துவிடப் போவதில்லை. ஒரு சமூகத்தின் யதார்த்த சூழலுக்கும் தேவைகளுக்கும் ஏற்றவகையிலும் எதிர் நிலை சவால்களுக்கு முகம் கொடுக்க வல்லதாகவும் ஒரு மொழி சீரமைக்கப்படும் போதே அது சமூக விடுதலைக்கான ஆயுதம் என்ற வகையில் கூர்மையடையும். கட்டுரையாசிரியர் தென்னாசிய தென்கிழக்காசிய சமூகங்களுடைய தேவைகளுடன் நமது மொழி விருத்தி பற்றிய தேவையினைப் பொருத்திப்பார்ப்பது அவசியம் எனக் கூறுகிறார். இது ஆக்கபூர்வமான ஆய்வு தேவைக்கும் காத்திரமான விவாதத்திற்கும் வழி அமைப்பதாக அமைந்துள்ளது. எனவே இம் முன் மொழிவானது நீண்ட வரலாற்று அடிப்படைகளையும், பண்பாட்டுக் கூறுகளையும் கொண்ட இன சமூகங்களின் சுய அடயாளத்தினதும் வர்க்க விடுதலைக்கான தேவைப்பாடுகளின் அடிப்படையில் சிந்திக்க வேண்டியதோர் விடயமாக அமைகிறது.

பொதுவாகவே மலையகலை இலக்கியத்தளம் பற்றிய ஆய்வுகள் மிக அரிதாகவே உள்ளது. இந்த நாட்டின் மிக மோசமான உழைப்புச் சுரண்டலுக்கும் இன வன்முறைகளுக்கும் ஆக்கிரமிப்புகளுக்கும் உள்ளாக்கப்படுகின்ற ஒரு சமூகம் என்ற வகையில் அம்மக்களின் கலை பண்பாடுகள் பற்றியும் அச் சமூகத்தளத்தில் தோற்று விக்கப்படும் படைப்பிலக்கியங்கள் மீதான வர்க்க நிலை ஆய்வு மிக அவசிய மானதொன்றாக உள்ளது. அந்த வகையில் "புது வசந்தம்" மலையக இலக்கியம் தொடர்பான இரண்டு கட்டுரைகள் உள்ளட க்கப்பட்டுள்ளன.

## மலையக தமிழ் கலை இலக்கிய இயக்கப் போக்கு

மலையக தமிழ் கலை இலக்கிய இயக்கப் போக்கு என்ற கட்டுரை சமூக பொருளாதார பண்பாட்டு அரசியல் ரீதியில் மிக கொடூரமிக்க சவால்களுக்கும் ஆக்கிரமிப்புகளுக்கும் தொடர்ந்தும் முகம் கொடுத்து வரும் ஒரு மக்கள் கூட்டம் தனது இருநூறு வருடகால வரலாற்றில் தொழிலாளி வர்க்க வாழ்வியல் பண்பாடுகளோடு தேசிய இனமாக வளர்ச்சிப் பெற்று நிற்கும் மலையக மக்களின் கலை இலக்கிய வளர்ச்சிப்படிகளை விவரித்து செல்கிறது. கூத்துகலை, நாட்டார் பாடல்கள், படைப்பிலக்கியம் என்ற அடிப்படையில் தனது பார்வை விரித்துச் செல்கிறது. மலையக கலை இலக்கியப் போக்கு கோ. நடேசய்யர், மீனாட்சியம்மையார் ஆகியோரல் தோற்று விக்கப் பட்ட எதிர்ப்பிலக்கிய வெளிப்பாடுகளின் தொடர்ச்சியாக இன்றும் தொடர்வதாக சுட்டிக் காட்டுகின்றார். இன்று இலக்கிய உலகை மலினப் படுத்திக் கொண்டிருக்கும் துஷனைகளுக்கப் பால் மலையக இலக்கியம் மக்களின் உரிமை குரலோடு ஒலிக்கிறது எனக் குறிப்பிடுகின்றார். அறுபதுகளிலே முனைப்பு பெறுகின்ற மலையக இலக்கியம் மலையக மக்களின் தேசிய அடையாளத்துக்கான அடித்தளத்தை தோற்றுவித்ததோடு மலையகத்துக்கான தனித்துவமான இலக்கிய போக்கினை அடையாளப்படுத்தியது எனலாம். இக்கால கட்டத்திலேயே மலையகம் என்ற சொற்பதம் பிரயோகத்திற்கு வந்தது என்பதையும் குறிப்பிடலாம். குறிப்பாக இக்கால கட்டத்தில் வெளிவந்த நாவல்கள் இம்மக்களின் வாழ்வியலையும் அவர்களின் உணர்வுகள் பொருளாதார அரசியல் சுரண்டல்கள் அவற்றுக்கெதிரான எதீர்ப்புணர்வுகள் என்பவற்றை பிரதிபலிப்பவையாக அமைந்திருந்தது. இவை மலையக இலக்கியத்திற்கே செழுமையும் தனி சிறப்பையும் கொடுப்பதாக அமைந்திருந்ததைக் குறிப்பிடலாம். ஆனால் கடந்த இரு தசாப்த காலத்தை நோக்கும் போது மலையகத்தின் நாவல் இலக்கியம் மிக பெரிய வீழ்ச்சிப் போக்கைக் காட்டுவதாகக் காணப்படுகின்றது. சிறுகதைகளைப் பொறுத்தவரையிலும் இவ்வாறானதோர் நிலைப்பாட்டினையே காணக்கூடியதாகவுள்ளது. அன்றைய சிறுகதைகள் ஏற்படுத்திய சமூகத்தாக்கம் இன்றைய படைப்புகளில் தொனிக்கின்றதா என்பது கேள்வியே. அதேபோல் ஆரம்பக் காலங்களில் தோட்டப்புறங்களில் மிக முக்கிய இடம் வகித்து வந்த நாடகக் கலை இன்று மலையக மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தில் இருந்து மிகத் தூரப் போய்விட்டிருக்கிறது. எனவே மலையக இலக் கியப் போக்குப் பற்றி பேசும் போது மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் மலையக படைப்பிலக்கிய துறை எதிர் கொள்ளும் சவால்கள் சமூக பொருளாதார அரசியல் தாக்கம் என்பன தொடர்பில் ஆய்வது அவசியம். மேலும் 90களுக்கு பின்னரான மலையக படைபிலக்கிய போக்கு பற்றியும் மலையகப் பெண் எழுத்தாளர்களின் படைப்பாக்கல்கள் பற்றியும் பேசியிருத்தால் பயனுடையதாக அமைந்திருக்கும்.




## ஒடுக்கப்பட்டோர் இலக்கியமும் மலையக மக்களும்

ஒடுக்கப்பட்டோர் யார் என்பது பற்றியும் அவர்கள் சார்பான இலக்கியம் பற்றியும் சிறு அறிமுகத்தை தருவதாக அமைந்திருக்கிறது. ஆனால் இக் கட்டுரையாசிரியர் தான் சொல்ல வரும் விடயத்தை ஒழுங்கமைப்பில் விளக்கிச் செல்வதில் தவறிழைத்து விடுகிறார். அதேவேளை ஒடுக்கப்பட்டோர் இலக்கியத்திற்கான பண்புக் கூறுகளோடு மலையக இலக்கியத்தை ஒப்பிட்டு ஆராய முனையும் கட்டுரையாசிரியர் அதனை ஆய்வு முயற்சியாகவோ ஆழ்ந்த தேடலாகவோ அன்றி வெறுமனே மேலோட்டமாக சொல்லிச் செல்கிறார். குறிப்பாக மலையக இலக்கியங்களில் ஒடுக்கப்பட்டோர் இலக்கியங்களுக்குரிய அம்சங்கள் உள்ளடங்கி இருப்பினும் அவை முழு வீச்சைக் காண முடியவில்லையென குறிப்பிடுகின்றார். மலையக இலக்கியங்களை ஒடுக்கப்பட்டோர் இலக்கிய பண்புகளோடு ஒப்பிட்டு அதன் தன்மைகளை ஒப்பு நோக்கி ஓர் ஆய்வினை முன்வைத்திருப்பாராயின் இக் கட்டுரை மிக பயனுடையதாக அமைந்திருக்கும்.

## சிங்கள இலக்கியத்தில் நாட்டார் இயல்

இக்கட்டுரை நாட்டார் பாடல்களை தமிழருக்கு அறிமுகம் செய்யும் முயற்சி என்ற வகையில் வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும். பொதுவாகவே உழைக்கும் மக்களின் உணர்வுகளையும் எழுச்சியையும் அம்மக்களில் நேரடி உள்ளக் குமுறலாக வெளிப்படுத்துபவை நாட்டார் பாடல்களே. அந்த வகையில் ஒரே தேசத்தில் வாழும் வேறுபட்ட மொழி, பண்பாட்டு வாழ்வியல் அம்சங்களை கொண்ட மக்களின் உணர்வு வெளிப்பாடுகளை இன்னொரு மக்களுக்கு அறிமுகப்படுத்துவது மிக முக்கியமான விடயமாகும். இங்கு தொழில்பிரிவு, வாழ்வியல், காதல், நகைச்சுவை, விளையாட்டு என்ற அடிப்படையில் சிங்கள நாட்டார் பாடல்களின் வகைகளை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இரண்டு பாடல்கள் மட்டுமே இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"ஜனகவி" என அமையாளப்படுத்தப்படும் சிங்கள நாட்டார் பாடல்கள் சுவையும் சுவராஷ்யமும் மிகுந்த பல அம்சங்களை கொண்டிருக்கிறது. இதில் இன்னும் சில பாடல்களையும் அவற்றின் சமூக வர்க்க கருத்து நிலைப்பாட்டையும் எடுத்து நோக்கி இருப்பின் மேலும் சிறப்புடையதாக அமைந்திருக்கும். இக் கட்டுரையில் குறிப்பிடப்பட்ட பாடல் எழுத்து பிழை காரணமாக கருத்தற்றதாக உள்ளது.

சரியான பாடல்

லஸ்சன ஹிம வத்தே மா வீ
பெஸென்னே
துக் தென அலி எதுன்
பன்னா அரின்னே
ரெக் மென் தெவியனே
வெல் பத் புதின்னே
துப்பத் கம நிசாய் மம
மெல் ரக்கின்னே.

என்பது தான் என நம்புகிறேன்.

கட்டுரை தொடரும்..

## பொய்கள்

சிறுவர்களிடம் பொய்க்• கதைகள்
சொல்லாதீர்கள்! தவறு.
பொய்யை உண்மையென்று
நிரூபிப்பது அதை விடத் தவறு.

வானில் சொர்க்கத்தில்
கடவுள் இருக்கிறார் என்றும்
உலகெல்லாம் இன்பத்தில் மிதக்கிறது
என்றும் கூறாதீர்கள்.

நீங்கள் சொல்வதை அவர்கள்
புரிந்து கொள்வார்கள்!
அவர்களே வருங்கால மக்கள்

எண்ணற்ற நம் துன்பங்களை
அவர்களுக்கும் உரையுங்கள்!
வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும்.
என்பதை மட்டுமல்லாமல்- அது
தற்போது எப்படி இருக்கிறது
என்பதையும் பார்க்கட்டும்.

தடைகள் இருக்கின்றன.
தகர்க்கச் சொல்லுங்கள்!
துயரங்களும் துன்பங்களும்
தோன்றக் கூடும்.
அழிக்கச் சொல்லுங்கள்!
இன்பத்தின் விலையை
அறிய முடியாதவர்கள்
இன்புறவே இயலாது!
தவறு என்று கண்டதை
மன்னிக்காதீர்- ஏனெனில்
அவைகள் திரும்பவும்
நேர்ந்து அதிகமாகக் கூடும்- பின்
நமது மாணவர்கள்
நாம் மன்னித்ததற்காக
நம்மை மன்னிக்க மாட்டார்கள்.

யெவ்கனி யெவ்ருஷென்கோ
ரஷ்யக் கவிஞர்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# இந்திய- அமெரிக்க அணு சக்தி ஒப்பந்தம் 123

# சில கேள்விகள்...... சில பதில்கள்......

**கேள்வி:** காங்கிரசும் அதன் கூட்டாளிகளும், இந்திய அமெரிக்க அணு ஆற்றல் உடன்பாட்டின் மூலம் நம் நாட்டின் மின்சாரத் தேவைகள் நிறைவு செய்யப்படும் என்றும் இது பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் என்று 'அணு ஆற்றல் தேசீயமே' தேச பக்தி என்றும் சொல்கிறார்களே?

**பதில்:** இந்த வாதம் மணல் மீது கட்டப்பட்ட கோட்டை. கட்டுக் கதைகளின் தொகுப்பு. ஆகஸ்ட் 15, 1947க்குப் பிறகு, 2008 வரை 62 ஆண்டுகளில் இந்தியாவில் ஒட்டுமொத்த எரிசக்தி ஆற்றலில் 3% தேவைகளை மட்டுமே அணு ஆற்றல் நிறைவு செய்துள்ளது. இப்போதைய ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தால் அரசாங்கம் சொல்லும் கணக்குப்படியே 12 ஆண்டுகளுக்குப் பிறகு 2020ல் அணு ஆற்றலால் கிடைக்கும் எரிசக்தி மொத்த எரிசக்தியில் வெறும் 7% ஆக மட்டுமே இருக்கும்.

ஆகவே இந்த ஒப்பந்தம் போடுவதால் உடனடியாக மின்சார வெட்டு நீங்கி வீட்டிற்கும் வீதிக்கும் தொழிற்சாலைக்கும் வயல் செழிக்கப் பாயும் நீருக்குமான மின்சாரம் வழங்குதல் அதிகமாகும் என்பது ஆதாரமற்ற பொய். உள்கட்டுமான வசதிகள் பெருக்கம் பொருளாதார வளர்ச்சி என்பவற்றிற்கும் இந்த ஒப்பந்தத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது.

**கேள்வி:** அணு ஆற்றல் மூலம் மின்சாரம் என்பது சுத்தமானது, பாதுகாப்பானது என்று சொல்லப்படுகிறதே?

**பதில்:** தவறு. அணுக் கதிர்வீச்சும் அணுக் கழிவுகளும் என்பவை உலகிற்கே மனித இனத்திற்கே ஆபத்தானவை. பெரிமி மூன்று மைல் தீவுகள், செர்னோபில் ஏற்பட்ட பாதிப்புக்களில் இருந்து உலகம் இன்னமும் மீளவில்லை. பெல்ஜியம், ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின், ஸ்வீடன், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் கட்டம் கட்டமாகவாவது தமது அணு உலைத் தொழிலைக் காலாவதி யாக்கி விட்டன. அமெரிக்கா, மேற்கு அய்ரோப்பா ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்து தற்சமயம் மூன்று அணு உலைகள் தான் கட்டு கிறார்கள்.

**கேள்வி:** அணு ஆற்றல் மூலம் கிடைக்கும் மின்சாரம் மலிவானதா?

**பதில்:** அமெரிக்காவுடனான தீய நட்பால் உலகின் தீராப்பகையை இந்தியா பெறுவது என்பது நாம் தருகிற பெரிய அரசியல் விலை. அது போக பொருளாதார ரீதியாகவும் இது கூடுதல் செலவாகும். நிலக்கரி மூலம் பெறும் எரிசக்தி ஆற்றலுக்கு ஒரு யூனிட்டிற்கு ரூ. 2.50தான் செலவாகும். ஆனால் அணுசக்தி ஆற்றல் ஒரு யூனிட்டிற்கு ரூ.3.50 ஆகும். இறக்குமதி செய்யப்பட்ட உலைகள் மூலம் என்றால் ஒரு யூனிட்டிற்கு ரூ. 5.50 ஆகும்.

**கேள்வி:** யுரேனியம் மூலம் மட்டும்தான் அணுசக்தி ஆற்றல் உருவாக்க முடியுமா?

**பதில்:** நிச்சயமாக அப்படிச் சொல்ல முடியாது. யுரேனியத்தை செறிவூட்ட, மறுபதப்படுத்த இறக்குமதி கட்டாயம் வேண்டும் என்றும் அதற்காகத்தான் அமெரிக்காவுடன் ஒப்பந்தம் என்றும் சொல்லப்படுகிறது. இந்தியாவில் 3 லட்சம் டன் தோரியம் சேமிப்பு இருக்கிறது. அதன் மூலம் அணுசக்தி ஆற்றல் பெற முடியும்.

**கேள்வி:** 123 ஒப்பந்தம் என்று ஏன் சொல்லப்படுகிறது?

**பதில்:** 123 என்பது நில், கவனி, ஓடு என ஓட்டப் பந்தயம் துவங்கத் தரப்படும் அழைப்பு அல்ல. அமெரிக்க அணு ஆற்றல் சட்டம் 1954ன் பிரிவு 123ன் கீழ் அமெரிக்கா மற்ற நாடுகளோடு அணு ஆற்றல் தொடர்பாகப் போடுகின்ற ஒப்பந்தங்கள் "123 ஒப்பந்தங்கள்" என அழைக்கப்படுகின்றன.

**கேள்வி:** ஒப்பந்தம் இனிமேல்தான் போடப்பட வேண்டுமா?

**பதில்:** இல்லை. 23.07.2007 அன்றே அமெரிக்க இந்திய அரசாங்கங்கள் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுவிட்டன.

**கேள்வி:** அப்படியானால் ஒப்பந்தம் 23.07.2007 முதல் அமுலாகி விட்டதா?

**பதில்:** அப்படி இல்லை. ஜுலை 25. 2006ல் மன்மோகன் புஷ்ஷைச் சந்தித்தார். இந்தியா மீதான அணு ஆற்றல் வழங்குதலுக்கான தடைகளை அகற்றுவதில் உதவ அமெரிக்கா தயாராயுள்ளது என புஷ் சொன்னார். மன்மோகன்- புஷ் கூட்டறிக்கை தயாரானது. இந்திய அமெரிக்க அணு ஆற்றல் ஒப்பந்தம் பற்றி மன்மோகன் அக்டோபர் 2006 இந்திய நாடாளுமன்றத்திற்கு 'திருப்தியளிக்கக் கூடிய விதத்திலான விளக்கங்களை' வழங்கினார். அதற்குப் பிறகு அமெரிக்க நாடாளுமன்றத்தில் டிசம்பர் 2006ல் அய்ட் சட்டம் நிறைவேறியது. ஜார்ஜ் புஷ் மார்ச் 2007ல் இந்தியா வந்தார். பின்னர் 23.07.2007 அன்று ஒப்பந்தம் கையெழுத்தானது. இது வரையில் நடந்ததில் ஒரு கட்டம் தான் முடிந்துள்ளது. இந்த ஒப்பந்தம் தொடர்பாக சர்வதேச அணுசக்தி ஆற்றல் முகாமையும் (IAEA) அணு ஆற்றல் வழங்குவோர் குழுமமும் (NSG) ஒப்புதல் அளித்தாக வேண்டும். மீண்டும் அமெரிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் தந்தாக வேண்டும். அதற்குப் பிறகே ஒப்பந்தம் முழுமை யாகச் செயல்பாட்டிற்கு வரும். வியன்னாவில் நடைபெறும் IAEA சர்வதேச அணு ஆற்றல் முகாமை கூட்டத்திற்குச் செல்வதற்கு முன்புதான், இந்திய நாடாளுமன்றத்தில் 22.07.2008 அன்று நம்பிக்கை வாக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

**கேள்வி:** 2007ல் போட்ட ஒப்பந்தம் தான் இந்தியா போட்ட முதல் 123 ஒப்பந்தமா?

**பதில்:** இல்லை. 1963லேயே 30 ஆண்டுகளுக்கு இந்தியாவுக் கும் அமெரிக்காவுக்கும் இடையில் ஓர் ஒப்பந்தம் போடப்பட்டது. அதுவும் 123 ஒப்பந்தம்தான்.

**கேள்வி:** அந்த ஒப்பந்தம் என்ன ஆனது?

**பதில்:** அந்த ஒப்பந்தம் 30 ஆண்டுகள் அமுலில் இருக்கவில்லை. இந்திய- சோவியத் நட்புறவு ஒப்பந்தத்தாலும் அணுகுண்டு வெடிப்பு சோதனையாலும் அதிருப்தி அடைந்த அமெரிக்கா 1970களிலேயே ஒருதலைபட்சமாக அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்து தான் வழங்கிய உதவிகளை திடீரெனத் திரும்பப் பெற்றுக் கொண்டது.

**கேள்வி:** இந்தியா என்பிடி சிடிபிடி ஒப்பந்தங்களில் கையயொப்பமிடவில்லை. அதாவது அணு ஆற்றல் பரவல் தடைச் சட்டம் குண்டு வெடிப்பு பரிசோதனைக்குக் அனைத்துந் தழுவிய தடை ஒப்பந்தங்களில் கையொப்பமிடாததால் இந்தியாவின் அணு ஆற்றல் தொடர்பான எந்தத் திட்டங்களுக்கும் எந்தத் தடையும் கிடையாது என்றும் ஹைட் சட்டம் ஓர் அமெரிக்க சட்டம் என்பதால் அது அமெரிக்காவை மட்டுமே கட்டுப்படுத்தும் என்றும் சொல்கிறார்களே?

**பதில்:** இந்தியா என்பிடி சிடிபிடி ஒப்பந்தங்களில் கையொப்பமிடவில்லை என்பது சரிதான். ஆனால் இறுகும் அமெரிக்க போர்த்தந்திர பிடியும், ஹைட்சட்டமும் பேராபத்துக்களே.

**கேள்வி:** கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல முடியுமா?



**பதில்:** ஹென்றி ஜே ஹைட் இந்திய அமெரிக்க அணுசக்தி ஒத்துழைப்பு சட்டம் டிசம்பர் 2006ல் அமெரிக்க நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்டது. இந்த அமெரிக்கச் சட்டத்தில் ஆபத்தான பிரிவுகள் உள்ளன. பிரிவு 102 (6) (பி) படி அமெரிக்காவுடன் ஒப்பந்தம் போடுகிற நாட்டில் தங்குதடையற்ற ஜனநாயக ஆட்சிமுறை இருக்க வேண்டும். அந்த நாட்டின் அயல் விவகாரக் கொள்கை, அமெரிக்க அயல் விவகாரக் கொள்கையுடன் ஒத்திசைவு கொண்டதாக இருக்க வேண்டும். பிரிவு 102 (பி) படி இந்தியாவுக்கு அணு ஆற்றல் ஒத்துழைப்பு தருவதை அமெரிக்கா நிறுத்திவிட்டால் அமெரிக்கா மற்ற நாடுகளும் ஒத்துழைப்பு தராமல் பார்த்துக் கொள்ளும். பிரிவு 103 (4) படி ஈரானைத் தனிமைப்படுத்த கட்டுப்படுத்த ஈரான் மீது தடைகள் விதிக்க இந்தியா அமெரிக்காவுக்கு ஒத்துழைப்பு தரும். இந்த ஷரத்துக்கள் இந்தியாவின் இறையாண்மையை சுதந்திரத்தை அமெரிக்கா கட்டுப்படுத்த உதவுபவை. அமெரிக்கா தொடுத்துள்ள தொடர்கிற சர்வதேச பயங்கரவாத எதிர்ப்புப் போர் என்ற பெயரிலான ஏகாதிபத்தியப் போரில் இந்தியா ஓர் இளநிலைக் கூட்டாளியாக்கப்படும்.

விஷயம், ஹைட் சட்டத்தோடு முடிந்துவிடவில்லை. ஏற்கனவே அமெரிக்காவுடன் ஒரு பாதுகாப்பு ஒத்துழைப்பு வரையறை ஒப்பந்தத்தை இந்தியா போட்டுள்ளது. கூட்டு போர்ப்படைப் பயிற்சிகளில் ஈடுபடுகிறது. ஈரானுக்கெதிராக இருமுறை வாக்களித்துள்ளது. ஈரானோடு ஆழ்குழாய் மூலம் எரிவாயு கொண்டு வரும் ஒப்பந்தத்தை பேசாமல் நிறுத்திவிட்டது. ஆக்கிரமிப்பாளரான இஸ்ரேலுடன் ராஜீய மற்றும் இராணுவ உறவுகளை வலுப்படுத்தி வருகிறது. கூச்சமற்ற அமெரிக்க அடியாளாக பிராந்திய மேலாதிக்கமாக மாற முயற்சி எடுக்கிறது.

**கேள்வி:** சீனா ஹைட் சட்டத்தால் பாதிக்கப்படாதா?

**பதில்:** பாதிக்கப்படாது. மாறாக அமெரிக்க- சீன 123 ஒப்பந்தத்தின் பிரிவு 2 (1)ல் ஒப்பந்தத்தின் இரு தரப்பினரும் தத்தமது நாட்டுச் சட்டங்கள்படி ஒப்பந்தத்தை அமல்படுத்துவார்கள் என்றும் ஒப்பந்தக் கடமைகளை நிறைவேற்ற தத்தமது நாட்டுச் சட்டத்தைத் துணைக்கு அழைக்க மாட்டார்கள் என்றும்தான் சொல்லப்பட்டுள்ளது.

**கேள்வி:** ஒப்பந்தத்தை உடனே நிறைவேற்றாவிட்டால் பெரும் சிக்கல் என்றார்களே?

**பதில்:** அது சரி அல்ல. புஷ் ஆட்சிக் காலம் முடிகிறது. அடுத்து அதிபராக வாய்ப்பு இருக்கும் மெக்கெய்னும் ஒபாமாவும் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். சீனா ஜப்பான் போன்ற நாடுகள் அவசர அவசரமாய் ஒப்பந்தத்தை அமலாக்கவில்லை. சிக்கல்களை சர்ச்சைகளைத் தீர்க்க 10 முதல் 20 ஆண்டுகள் வரை எடுத்துக் கொண்டன.

**கேள்வி:** அமெரிக்காவில் போட்ட ஹைட் சட்டம் போல் நாமும் இந்தியாவில் ஒரு சட்டம் போட்டால் எல்லாம் சரியாகி விட்டதா?

**பதில்:** ஏகாதிபத்தியம் "சுதந்திர வர்த்தகம்" என்றுதான் எப்போதும் முழங்கும். கடலில், பெரிய மீனைப் போல் சிறிய மீனுக்கும் வாயைத் திறந்து மற்றதை விழுங்கச் சுதந்திரம் உண்டு என்று சொல்வது மோசடியே. ஏனெனில் பெரிய மீனால் தான் சிறிய மீனை விழுங்க முடியும். சிறிய மீனால் பெரிய மீனை விழுங்க முடியாது. நாம் மேலை ஏகாதிபத்திய நாடுகளிடம் வாங்குபவர்கள். அவர்கள் வழங்குபவர்கள். இந்த ஒப்பந்தமே அணு ஆற்றல் ஒத்துழைப்பு பெற முடியாமல் நாம் தனிமைப்படுத்தப்பட்டு தீண்டாமைக்கு உள்ளாக்கப்பட்டதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கானது என்று சொல்லப்படும் போது ஒப்பந்தத்தை ரத்து செய்ய நாம் ஒரு சட்டம் போட்டுக் கொள்ளலாம் என்பது ஒரு ஏமாற்று வாதம். பா.ஜ.க அமெரிக்காவோடு போர்த்தந்திர உறவைத் தான் எதிர்க்கவில்லை என்று சொல்வதையும் அவர்கள் தான் ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளைத் துவக்கினார்கள் என்பதையும் அவர்கள் ஆட்சிக்கு வந்தால் அவர்களும் ஒப்பந்தம் போடுவார்கள் எனச் சொல்வதையும் மனதில் கொண்டு அவர்கள் சொல்லும் இந்த மோசடி வாதத்தை நாம் பரிசீலிக்க வேண்டும்.

**கேள்வி:** நமது அணுசக்தி ஆற்றல் திட்டம் எது எப்படியானாலும் தன் போக்கில் தொடர முடியும் என்று சொல்லப்படுகிறதே?

**பதில்:** தவறு. நாட்டில் உள்ள 22 உலைகளில் 12 உலைகள் சர்வதேச ஆய்வுக்கு உட்படுத்தப்படும். நாம் வேறு அணு வல்லரசுகளின் உலைகளைச் சோதிக்க முடியாது. ஒப்பந்தம் ரத்தானாலும் சர்வதேச ஆய்வு தொடரும்.

**கேள்வி:** எரிசக்தியை மின் ஆற்றலை பெருக்கிக் கொள்ள நாம் பிற நாடுகளுடன் உறவாடவே கூடாதா?

**பதில்:** உலகின் எந்த நாடும் மற்றொரு நாட்டுடன் உறவாடாமல் இருக்க முடியாது. இன்றைய உலகில் அமெரிக்கா, ஜப்பான், மேற்கு அய்ரோப்பிய நாடுகள் அமெரிக்க தலைமையிலான ஒரு முகாமில் உள்ளன. அமெரிக்கா ஒரு துருவ உலகிற் முயற்சிக்கும் போது எரிசக்தியின் மீதும் இயற்கை விவசாய கனிம மற்றும் மனித வளங்கள் மீதும் நிதி மீதும் சந்தை மீதும் கட்டுப்பாடு செலுத்த முயல்கிறது. உலக மக்கள் தொகையில், சீனாவும், இந்தியாவுமாக மூன்றில் ஒரு பகுதி மக்கள் உள்ளனர். ஆனால் இந்த இரண்டு பெரிய நாடுகளும் உலகின் மொத்த எரிசக்தியில் 8% மட்டுமே நுகர்கின்றன. இன்று ரஷ்யா, சீனா, வெனிசூலா, ஈரான் மற்றும் முன்னாள் சோவியத் யூனியன் நாடுகள் தங்கள் எரிசக்தி ஆற்றலையும் அதன் மீதான சர்வதேச உறவுகளையும் பலப்படுத்தி வருகின்றன. சர்வதேச முதன்மைப் பயங்கரவாத நாடான உலக மக்களின் முதல் பகைவனான அமெரிக்காவோடு ஒரு போர்த்தந்திர அடிமைத்தன உறவைத் தேடாமல் இருப்பது, அணு ஆற்றல் ஒப்பந்தத்தைப் போடாமல் இருப்பது தான் உலக அமைதிக்கும் இந்திய இறையாண்மைக்கும் நல்லது. ஈரானோடு பாகிஸ்தான் வழியாக நிலத்தடி குழாய்கள் மூலமாக இயற்கை எரிவாயுவைக் கொண்டு வரும் ஒப்பந்தம் போடுவது மலிவானது. மேலும் பக்கத்து வளரும் நாடுகளோடு பொருளாதார அரசியல் நல்உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளவும் அது உதவும்.

**கேள்வி:** நாடாளுமன்ற ஒப்புதல் இல்லாமல் சர்வதேச ஒப்பந்தங்கள் போட முடியுமா?

**பதில்:** துரதிஷ்டவசமாக நமது அரசியலமைப்புச் சட்டத்தில் சர்வதேச ஒப்பந்தங்களுக்கு நாடாளுமன்ற ஒப்புதல் பெற வேண்டிய கட்டாயங்கள் ஏதுமில்லை. 22.07.2008 வாக்கெடுப்பில் என்ன நடந்தாலும் ஒப்பந்தத்தைக் தொடர தான் தயார் என அமெரிக்கா சொன்னதைக் கவனிக்க வேண்டும்.

**கேள்வி:** இந்த ஒப்பந்தத்தில் அமெரிக்காவுக்கு ஏன் இவ்வளவு ஆர்வம்?

**பதில்:** ஆடு நனைவதற்காக ஓநாய் ஒரு போதும் அழுவதில்லை. அமெரிக்கா தன் தலைமையின் கீழ் ஓர்உலகை நிறுவ வெறித்தனமான முயற்சிகளில் இறங்கியுள்ளது. உலகில் இதற்கு எதிர்ப்பும் இருக்கிறது. ரஷ்ய, சீன உறவுகள், ஷாங்காய் ஒத்துழைப்பு நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தங்கள், அமெரிக்காவின் விருப்பத்திற்குக் குறுக்கே நிற்கின்றன. ஆசியாவில் ஒரு பெரும் வல்லமை கொண்ட சக்தியாக சீனா எழும்போது அதனைக் கட்டுப்படுத்த. இந்தியாவைப் பயன்படுத்தப் பார்க்கிறது. இந்தியாவின் செல்வங்களைக் சூறையாடவும் இந்தியாவை ஓர் ஏகாதிபத்திய ஏவல் நாயாக மாற்றவும் அமெரிக்கா முயற்சிக்கிறது. இதற்கு காங்கிரஸ், பாஜக மற்றும் அவர்களது கூட்டாளிகள் துணை போகிறார்கள்.

அமெரிக்காவின் அணு உலைத் தொழில் 30 ஆண்டுகளாக புதிய ஆர்டர்கள் ஏதுமின்றி இருக்கிறது. வசதியாக விலை போகாத உலைகளை இப்போது இந்தியாவின் தலையில் கட்ட முடியும்.

**கேள்வி:** இந்த ஒப்பந்தத்தை முறியடித்திருக்கக் கிடைத்த கடைசி வாய்ப்பு 22.07.2008 நாடாளுமன்ற நம்பிக்கை வாக்கெடுப்பு தானா?

**பதில்:** நிச்சயம் இல்லை. நாடாளுமன்ற நடப்புக்கள் தொடர்பாக 184, 193 என்ற இரண்டு விதிகள் உள்ளன. விதி 184ன் கீழ் விவாதமும் வாக்கெடுப்பும் கோர முடியும். விதி 193ன் கீழ் வெறும் விவாதம் தான் சாத்தியம். குரைப்பது பற்றி கடிப்பது பற்றிப் பேசியவர்கள் பல மாதங்களுக்கு முன்பாகவே விதி 184அய் பயன்படுத்தி இருக்க முடியும். குதிரை லாயத்தை விட்டு ஓடிய பிறகு லாயத்தின் கதவுகளை மூடுவது போல்தான் ஆதரவு வாபஸ் நடந்தது. 22.07.2008 வாக்கெடுப்பு ஆளும் வர்க்கங்கள் மற்றும் அவர்கள் கட்சிகளின் விருப்பப்படித்தான் நடந்தது.

**கேள்வி:** இந்த ஆபத்தில் இருந்து வெளியே வருவது எப்படி?

**பதில்:** "வரலாறு திரும்பவும் நிகழ்கிறது. முதல் முறை துன்பியல் நாடகமாகவும் இரண்டாம் முறை கேலிக் கூத்தாகவும் நிகழ்கிறது" என்றார் மார்க்ஸ். பிரிட்டிஷ் காலனிய எசமானர்கள். 'சுதந்திரம் எனது பிறப்புரிமை' என முழங்கியதற்காக திலகருக்கு ஜுலை 22, 1908 அன்று 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கினார்கள். சரியாக நூறாண்டுகள் சென்ற பிறகு ஜுலை 22, 2008 அன்று மன்மோகனும் கூட்டாளிகளும் இந்திய நாடாளுமன்றத்தில் 'அமெரிக்க அடிமைத்தனம் எமது பிறப்புரிமை' என ஊளையிட்டுள்ளனர். 1908ல் ஜுலை 28 வரை பாட்டாளி வர்க்கம் மக்களைத் தன் பின்னால் திரட்டிக் கொண்டு திலகரை விடுதலை செய்யக் கோரி மும்பை வீதிகளில் தடுப்பரண் அமைத்துப் போர் புரிந்தது. அரசியல் பொது வேலை நிறுத்தம் நடத்தியது. இதனைத் தோழர் லெனின் "இந்தியப் பாட்டாளி வர்க்கம் அரசியல் முதிர்ச்சி பெறுவதற்கான அடையாளம்" எனச் சுட்டிக்காட்டினார்.

இப்போது இந்திய நாடாளுமன்றம் தனது ஏகாதிபத்திய விசுவாசத்தை நிரூபித்திருக்கலாம். இந்திய ஆளும் வர்க்கங்களின் விருப்பத்தை நிறைவேற்றியிருக்கலாம். இந்தியாவின் புரட்சிகர தேசபக்த, ஜனநாயக இயக்கங்களும் மக்களும் வயல்வெளிகளில், ஆலைவாயில்களில், கல்லூரிகளில், வீதிகளில், வறியவர் விரோத, மக்கள் விரோத தேச விரோத ஆட்சியாளர்களுக்கும் ஆளும் வர்க்கக் கட்சிகளுக்கும் அமெரிக்க அடிமைத்தனத்திற்கும் அணு சக்தி ஒப்பந்தத்திற்கும் முடிவுகட்டத் தயாராவார்கள். அதற்கான போராட்டங்களை விரிவுபடுத்த தீவிரப்படுத்த உறுதியேற்போம்.

நன்றி: மாலெ தீப்பொறி ஆகஸ்ட் 2008.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# உலக அரங்கின் நாட்குறிப்பு



உலகோன்

## பயங்கரவாதமும் அதற்கெதிரான யுத்தமும்

அமெரிக்க கூட்டுப்படைகள் பாகிஸ்தானில் நடத்திய விமானக்குண்டுவீச்சில் சிறுவர்கள், பெண்கள் எனப்பலர் கொல்லப்பட்டனர். அதேவேளை அமெரிக்க படைகள் பயங்கரவாதத்திற்கு எதிரான போரின் நிமித்தம் பாகிஸ்தானுக்குள் நுழைந்து (அந்நாட்டின் அனுமதியின்றி) பயங்கரவாதிகளை அழிப்பதற்கான உரிமையை அமெரிக்க ஜனாதிபதி புஷ் வழங்கியுள்ளார். அதன்படி ஆப்கானிஸ்கானில் நிலை கொண்டுள்ள அமெரிக்க படைகள் அடிக்கடி பாகிஸ்தான் எல்லைக் கிராமங்கள் மீது தாக்குதல்களை நடத்துகின்றன. இது குறித்து கருத்துத் தெரிவித்த அமெரிக்க படை உயர் அதிகாரி “பாகிஸ்தான் பழங்குடி மக்கள் பொறுப்பற்றவர்கள், அவர்களுக்கு நாகரீகமாக வாழத்தெரியாது இவற்றையெல்லாம் எம்மால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது” என்றார்.

பாகிஸ்தானில் அமெரிக்கப்படைகள் நடத்துகின்ற தாக்குதல்களைக் கண்டித்த பாகிஸ்தானின் புதிய ஜனாதிபதி சர்தாரி இவ்வாறான செயற்பாடுகள் பாகிஸ்தானின் இறைமையைப் பாதிப்பதாகவும் இவற்றை தான் இனி அனுமதிக்கப்போவதில்லை என்றும் சொல்லியிருக்கிறார். சர்தாரி பாகிஸ்தானிய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது அது குறித்து கருத்து தெரிவித்த அமெரிக்கா சர்தாரி மனநலம் குன்றியவர் என்றும் இவர் பாகிஸ்தானிய ஜனாதிபதியாக தெரியப்படுவது பாகிஸ்தானிய மக்களின் நலன்களுக்கு எதிரானது என்றும் சொன்னது. யாருடைய நலன்கள் யாருக்கு ஆபத்தானது என்பது மக்களுக்கு முன்பை விட இப்போது கொஞ்சம் கூடுதலாகவே விளங்குகிறது.

குவாண்டனாமோ சிறையில் ஆறுவருடங்களுக்கு மேலாக எவ்வித விசாரணையுமின்றி அடைக்கப்பட்டிருப்பவர்கள் தங்களை விசாரணை செய்யச்சொல்லி அல்லது விடுவிக்கச் சொல்லி வழக்குத்தாக்கல் செய்த போது, தங்களுக்கு தேவையான ஆதாரங்களை திரட்ட போதுமான கால அவகாசம் இருக்கவில்லை என்றும் இன்னும் காலம் தேவைப்படும் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்ததை அடுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. “பயங்கரவாதத்திற்கு எதிரான போர்” என்பதன் பெயரால் இவ்வாறான செயற்பாடுகள் அமெரிக்காவிற்கு மட்டுமல்ல எல்லா நாடுகளிலிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இங்கேதான் “பயங்கரவாதத்திற்கு எதிரான போர்” என்பது கேள்விக்குள்ளாகிறது. எது உண்மையில் “பயங்கரவாதத்திற்கு எதிரான போர்”? இன்றைய சூழலில் அரசுக்கு எதிராக செய்யப்படும் எல்லாமே பயங்கரவாதத்திற்கு ஆதரவான செயற்பாடாவே மொழிபெயர்க்கப்படுகிறது. ‘ஒரு அமைதி ஊர்வலம்’, ‘சம்பள உயர்வை வேண்டிய தொழிலாளர் ஆர்ப்பாட்டம்’, ‘கடையடைப்பு’ எல்லாமே பயங்கரவாத நடவடிக்கைகளாக கொள்ளப்படுகின்றன.

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தை அமெரிக்கா தொடக்கி 7 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் எந்த ஒரு செயற்பாடும் பயங்கரவாதத்திற்கு ஆதரவான அல்லது எதிரான செயற்பாடாக கொள்ளக்கூடிய ஒரு அபாயத்தை நாம் அடைந்திருக்கிறோம். கருத்து தெரிவிப்பது, கலந்து பேசுவது, விவாதிப்பது என எல்லாமே பயங்கரவாதத்திற்கு ஆதரவான/எதிரான ஒன்றாகவே கொள்ளப்படும் அபாயகரமான சூழலில் இவை இரண்டுமற்று இருக்கக்கூடிய நிலை இன்று மறுக்கப்படுகிறது. இங்கேதான் “நீங்கள் எங்களுடன் நிற்கிறீர்கள் அல்லது எதிரிகளுடன் நிற்கிறீர்கள்” என்ற புஷ்சின் வரிகள் முக்கியத்துவம் பெறுகிறது.

நாம் எதிர்நோக்கும் மற்றொரு அபாயம், பயங்கரவாதத்தை மொழிபெயர்க்கும் ஊடகங்கள். அமெரிக்காவின் முகமூடியை கிழித்த அபுகிராப் படங்கள் வெளியுலகுக்கு தெரியவராமல் மறைக்க ஊடகங்கள் எடுத்துக்கொண்ட பகீரதப் பிரயத்தனங்கள் பலரும் அறிந்ததே. அக்காலப்பகுதியில் புஷ்னுடைய ஒரு வசனத்தை மீண்டும் மீண்டும் ஒளிபரப்பி ஊடகங்கள் அபுகிராப்பை மறைக்க முயற்சித்தன. அவ்வசனம் இதுதான்.


“அபுகிராப்பில் நடந்துள்ளவை நானறிய அமெரிக்காவை பிரதிபலிக்கவில்லை. நானறிந்த அமெரிக்கா அன்புமயமானது. சுதந்திரத்தில் நம்பிக்கை கொண்டது. நானறிந்த அமெரிக்கா ஈராக்கில் சுதந்திரத்தைத் தோற்றுவிக்கத்தான் இராணுவத்தை அனுப்பியுள்ளது.”

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்பது மாற்றமடைந்து ஜனநாயகத்தை நிலை நிறுத்துவது கூட பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையாக மாறியுள்ளது. ஆனால் கடந்த 7 ஆண்டுகளில் நாம் கண்டதென்று எதுவுமில்லை. 2001 மாதிரியான உலகம் இன்று இல்லை. உலகம் வெகுவாகவே மாறிவிட்டது. எல்லாத் தடைகளையும் தாண்டி சீனா வெற்றிகரமாக நடாத்திக் காட்டிய ஒலிம்பிக் போட்டிகள், ஜோர்ஜியாவில் ரஷ்யா நடாத்திய பதில் தாக்குதல் ஆகிய மிக அண்மைய இரு நிகழ்வுகள் இதற்கு சான்று.

எந்த அச்ச உணர்வை ஆயுதமாகக் கொண்டு அமெரிக்கா உலகை ஆள நினைக்கிறதோ அதே அச்ச உணர்வே அமெரிக்காவின் தோல்விக்கும் சிதைவுக்கும் காரணமாக அமையும். அமெரிக்காவின் அதிகார வெறியை அமெரிக்க மக்கள் உணர மறுத்ததன் விளைவே இன்று தினம் தினம் அமெரிக்கத்தாய்மாரின் பிள்ளைகள் சவப்பெட்டிகளில் வீடு திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். இது அமெரிக்காவிற்கு மட்டுமல்ல, அமெரிக்கா போல பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தை முன்னெடுக்கும் எல்லா நாடுகளுக்கும் பொருந்தும். ஒரு நாட்டு மக்களின் ஜனநாயகத்தையோ சுதந்திரத்தையோ தீர்மானிக்கும் உரிமை அந்நாட்டு மக்களைத் தவிர வேறு யாருக்கும் கிடையாது. மக்கள் அதிகாரத்தை கையில் எடுக்காதவரை பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தின் பெயரால் உலகெங்கும் உயிர்கள் பலியாவதும், சிறையிலடைக்கப்படுவதும், சித்திரவதை செய்யப்படுவதும் தொடரும். குவாண்டனாமோ, அபுகிராப், பூசா என சிறைக்கூடங்கள் விரியும்.

# அமெரிக்க நிதி நெருக்கடி ஏகாதிபத்தியத்தின் இயலாமை!

முதலாளித்துவத்தின் அதி உயர் வளர்ச்சியே ஏகாதிபத்தியம் ஆகும். முதலாளித்துவத்தின் வளர்ச்சி ஒரு கட்டத்தை அடைந்ததும் தேக்க நிலைக்குள்ளாகும். அதைப் போக்குவதற்கு புதிய புதிய சந்தைகள் தேவைப்படும். புதிய சந்தைகளைத் தேடும் முயற்சியில் யுத்தம் அவசியமாகிறது. முதலாவது உலக யுத்தமும் இரண்டாவது உலகயுத்தமும் முதலாளித்துவத்தின் பொருளர்தார நெருக்கடிக்குச் சந்தை தேடும் முயற்சியில் மேற்கொள்ளப்பட்டன. முதலாளித்துவ வாதிகள் தமக்குத்தாமே குழி தோண்டுபவர்கள் என கார்ல் மாக்ஸ் கூறினார். அவரது கூற்று எவ்வளவு உண்மையானது என்பதை இரண்டு உலக யுத்தங்களின் முடிவில் கண்டோம். முதலாவது உலகயுத்தத்தின் முடிவில் மகத்தான சோவியத் யூனியன் உதயமானது. இரண்டாவது உலக யுத்தத்தின் பின் சீனப் புரட்சி உட்பட பல புரட்சிகள் வெற்றி பெற்றன. சோசலிச முகாம் உருவானது. தற்போதுள்ள உலக நிலைமைகளில் ஒரு முழு அளவிலான உலக யுத்தம் எதிர்காலத்தில் ஏற்படுமா என்பதில் சர்ச்சைகள் உண்டு. வரையறுக்கப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மூலம் ஏகாதிபத்திய நாடுகள் தமது சந்தையை விரிபடுத்த முயல்கின்றன. ஈராக்கில் எண்ணையை பெற்றுக் கொள்வதற்காக அமெரிக்கா அந்த நாட்டை ஆக்கிரமித்தது. அவ்வாறே ஆப்கானிஸ்தானில் படை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. டிசம்பர் மாத முடிவில் பதவி விலக




முன் ஈரானை ஆக்கிரமிக்க புஷ் திட்டம் தீட்டி வருகிறார்.

அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய முகாமில் இப்போது பாரிய பொருளாதார நெருக்கடி தோன்றியுள்ளது. தாராளமய தனியார்மயக் கொள்கையைப் பின்பற்றினால் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம். எனவே பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்ளுமாறு உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் நாடுகளுக்கு உப தேசம் செய்து வந்தது. ஆனால் சுதந்திர சந்தைப் பொருளாதார முறையைக் கொண்டுள்ள அமெரிக்கா இன்று பாரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது. இதை அமெரிக்கா எவ்வாறு சமாளிக்கப் போகிறதென்பதை நாம் பொறுத்திருந்து பார்ப்போம். ஒன்று மட்டும் நிச்சயம். திறந்த பொருளாதாரக் கொள்கையை முழுமையாக ஏற்றுக் கொள்வதில் பல்வேறு நாடுகள் சற்று நிதானப் போக்கைக் கடைப்பிடிப்பார்கள் என எதிர்பார்க்கலாம். அமெரிக்கா எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியை விளக்குவதற்கு சில உதாரணங்கள் போதுமானதாகும்.

அமெரிக்காவில் முதலீட்டு வங்கித் தொழிலில் நான்காவது பெரிய வங்கி லேமன் சகோதரர்கள். அந்த வங்கி வங்குறோத்தாகி உள்ளதாக அறிவிக்கப்படுகிறது. 1844ம் ஆண்டு அலபாமாவில் ஜெர்மனியில் இருந்து வந்த ஷென்றி லேமன் வியாபாரத்தை ஆரம்பிக்கிறார். 1960 சிவில் யுத்தத்தின் பின் லேமன் சகோதரர் நியூயோர்க் செல்கின்றனர். 1887ல் லேமன் நியூயோக் பங்குச் சந்தையில் அங்கத்தவராகிறார். 2008 செப்டம்பரில் லேமன் சகோதர்களின் பங்குகள் 97 வீதத்தால் வீழ்ச்சி கண்டது. கணக்குப் புத்தகத்தின் படி அதன் சொத்து 4500 கோடி டொலர்கள். ஒரு வருடத்திற்கு முன் சந்தையில் அந்நிறுவனத்தின் பெறுமதி 3600 கோடி டொலராய் இருந்தது. இன்று அதன் சந்தைப் பெறுமதி 300 கோடி டொலர் மட்டுமே. 4500 கோடி கொடுப்பனவை 300 கோடியால் ஈடுகட்ட முடியுமா? எனவே தான் உத்தியோக ரீதியாக வங்கிறோத்து நிலை அறிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

உலகிலேயே மிகப் பெரிய காப்புறுதி நிறுவனம் தான் ஏஐஜீ (AIG) என அழைக்கப்படும் “அமெரிக்கன் இன்சூரன்ஸ் குழுமம்” இந்த நிறுவனத்தில் 116000 பேர் வேலை செய்கிறார்கள். 130 நாடுகளில் கிளைகள் உண்டு. அறவிடமுடியாக் கடனாக 1680 கோடி டொலர்கள் பதிவழிக்கப்பட்டது.

இந்தக் காப்புறுதி ஸ்தாபனம் வங்குறோத்து ஆவதைத் தடுப்பதற்காக அமெரிக்காவின் மத்திய வங்கி 8500 கோடி டொலரை அந்த நிறுவனத்துக் கொடுத்துதவ முன்வந்துள்ளது.

அமெரிக்கவின் மூன்றாவது பெரிய முதலீட்டு வங்கி மெறில் லின்ச் இந்த வங்கி 4680 கோடி டொலர்கள் அறவிட முடியாக்கடனைப் பதிவழிக்கப்பட்டபின் 4430 கோடி டொலருக்கு பாங்க ஒவ் அமெரிக்காவினால் செப்டம்பர் 14ம் திகதி கொள்முதல் செய்யப்பட்டது. பியர் ஸ்ரேன்ஸ் என்ற முதலீட்டு வங்கியே 2008 மார்ச் மாதத்தில் நிதிச் சிக்கலை எதிர் நோக்கியது. அந்த வங்கியை ஜே.பி மோர்கன் சேஸ் 23 கோடி 60 இலட்சத்திற்கு கொள்வனவு செய்தது.

நொதேன் றொக் எனப்பட்ட பிருத்தானிய கம்பனி ஈட்டுக்கு கடன் வழங்கும் கம்பனி. இக் கம்பனியின் நிதி நெருக்கடியைப் போக்குவதற்காக பிருத்தானியாவின் மத்திய வங்கியான பாங்க் ஒவ் இங்லண்ட் அவசர நிதியை 2007 செப்ரம்பரில் வழங்கியது. பிரான்சின் பிஎன்பி பாரிபாஸ் அமெரிக்க நிதி நெருக்கடியால் பாதிக்கப்பட்ட போது ஆகஸ்ட் 9ம் திகதி ஐரோப்பிய மத்திய வங்கி 9480 கோடி யூரோவை வங்கி அமைப்புக்கு வழங்கியது.

அமெரிக்காவின் சிற்றி குறூப் குழுமத்தின் நட்டம் 5750 கோடி டொலர்கள். சுவிற்லாந்தின் இயங்கும் யூபீஎஸ் அறவிட முடியாக் கடனாக 4180 கோடி டொலர்களை பதிவழித்துள்ளது.

இந்த நிதி நெருக்கடிகளால் இலங்கையில் பெருமளவு வெளிநாட்டு மூலதனத்தில் இயங்கும் டயலொக், ஜோன் கீல்ஸ் நிறுவனங்களின் பங்குகள் சரிந்துள்ளன. அமெரிக்காவின் நிதி நெருக்கடியும் உலக சந்தைகளின் நெருக்கடிகளும் இலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும். தினமும் பல கோடி ரூபாய்களை யுத்தத்திற்கு செலவிடும் அரசு யுத்தத்தை தொடர்வதிலும் பல சிக்கல்களை எதிர்நோக்கும்.

ஏகாதிபத்தியத்தின் திறந்த பொருளாதார முறைமையால் எமது நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்பது எதிர்பார்த்ததை விட வேகமாகவே வளர்ந்து வருகிறது. எம் போன்ற மூன்றாம் உலக நாடுகளுக்கு உபதேசம் செய்த ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலின் கீழான பொருளாதாரம் ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது. அதன் வெளிப்பாடே அமெரிக்காவில் தோன்றியுள்ள மோசமான நிதி நெருக்கடியும் பொருளாதாரச் சரிவுமாகும்.

சிறீ

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# எத்தர்கள் வரலாறு எழுதினால் எப்படியிருக்கும்?

## அஞ்ஞானமா அயோக்கியத்தனமா? 2008ன் ஞானம் சிறப்பிதழைப் பார்த்தால் விளங்கும்

நவீன இலக்கியச் சிறப்பிதழாக ஞானம் சஞ்சிகையின் நூறாவது இதழ் வந்திருக்கிறது. அதில் பெரும் பகுதியானவை கட்டுரைகள். கட்டுரைகளில் பெரும்பகுதியானவை இலக்கிய வரலாறுகள். இலக்கிய வரலாறுகளில் பெரும் பகுதியானவை பட்டியல்கள்.

பட்டியல்கள் ஆய்வாளர்கட்குத் தேவையானவை தான். என்றாலும் அவை போதுமானவை அல்ல. என்ன தேவைக்காகப் பட்டியல் ஒன்று தரப்படுகின்றது என்கிறதை நாங்கள் கவனிக்க வேண்டும். ஆய்வு என்கிற பேரில் வருகிற அரைகுறைப் பட்டியல்களால் ஒரு பிரயோசனமும் இல்லை. எழுதுகிறதுக்கு வேறு எதுவுமில்லை என்கிறதால் சிலபேர் பட்டியல் போடுவார்கள். தங்களுக்கு வேண்டியவர்களுக்கு முதுகு சொறிய சிலபேர் பட்டியல் போடுவார்கள். சில பேர் வலுங் கவனமாக முக்கியமான படைப்புக்களையும் படைப்பாளிகளையும் ஒதுக்கிப் பட்டியல் போடுவார்கள். இன்னுஞ் சிலபேர் தங்களுடைய பட்டியல்களால் தங்களுடைய முதுகுகளையே சொறிந்து கொள்ளுவார்கள்.

இந்த விதமான பட்டியல் வரலாறுகள் ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்டு வந்திருக்கிற மாற்றங்களும் வளர்ச்சிகளும் என்ன காரணத்தால் ஏற்பட்டன என்று சொல்லுவது இல்லை. அவை என்ன விதமாகச் சமூகத்தைப் பாதித்தன என்றும் சொல்லுவது இல்லை. இடையில் ஒரு படைப்பையோ எழுத்தாளரையோ புகழ்ந்து நாலு வரிகள் வரும். ஆனால் என்ன சிறப்பு என்கிறதை கட்டுரையாசிரியர் சொல்லமாட்டார். உண்மையான காரணம் உள்ளடக்கத்தை விட்டு வேறெதுவுமாக இருக்கும்.

இந்த விதமான குறைபாடுகளுக்கு ஒரு காரணம் பல ஆய்வுக் கட்டுரைகள் ஒரு தரவழி ஆய்வும் இல்லாத அவசரக் கோலங்களாக இருக்கிறது தான். அதைவிடப் பொல்லாத காரணங்களும் இருக்கின்றன. அவை வன்மம் வக்கிரச் சிந்தனை தனிப்பட்ட பகைமை பொறாமை தொடர்புடையவை.

இந்தச் சிறப்பிதழில் வலிந்து சொல்லப்பட்டுள்ள சில இடதுசாரி விரோதமான திரிப்புக்களையும் திட்டமிட்ட புறக்கணிப்புக்களையும் பற்றிச் சொல்ல வேண்டி இருக்கிறது. இந்தப் பொய்களும் போலித் தனங்களும் இப்போது சுட்டிக்காட்டப்படாவிட்டால் அவையே மற்ற ஆய்வாளர்களுக்கான ஆதாரபூர்வமான உண்மைகளாகி நாளைய இலக்கிய வரலாறாகி விடும்.

மு.பொன்னம்பலதத்தின் பொய்கள் பற்றிப் புதிய பூமியில் ஒரு கட்டுரை சிலவருடம் முந்தி வெளிவந்தது. திரும்பத் திரும்ப சளைப்பில்லாது சொல்லப்படுகிற பொய்கட்காக அவருக்கு "கொயபெல்சு" பரிசு வழங்கினால் நன்றாயிருக்கும். கைலாசபதி தினகரனில் ஆசிரியராக இருந்த போது முற்போக்கு எழுத்தாளர்கட்கு மட்டுமே ஆதரவுகாட்டினாரென்றும் அந்த அணி சாராதோர் புறக்கணிக்கப்பட்டார்கள் என்றும் அதனால் சமஷ்டி ஆட்சிக் கொள்கை இலக்கியத்தில் இருட்டடிப்புச் செய்யப்பட்டது என்றும் தனக்கே உரிய கோமாளித்தனத்துடன் அடுக்கடுக்காகப் பொய் எழுதியிருக்கிறார். இந்தக் கட்டுரையில் வருகிற பிதற்களுக்கெல்லாம் மறுமொழி எழுதுகிறது என்றால் அதற்காகவே ஒரு சிறப்பிதழ் வெளியிடக் கூடிய அளவுக்குப் புண்ணியவான் பிதற்றி வைத்திருக்கிறார்.

இந்த விதமான சில பொய்களை விமர்சனமில்லாமல் விழுங்கி மீண்டும் மீண்டும் சொல்லுகிறவர்களுள் கலாநிதி துரை மனோகரனும் ஒருவராகக் காணப்படுகிறார். உலக இடதுசாரி இயக்கம் பிளவுபட்டு நாற்பது ஆண்டுகட்குப் பிறகும் ரஷ்யசார்பு சீனசார்பு என்று எழுதி அந்தப் பிளவின் அடிப்படையையே அவர் கொச்சைப் படுத்துகிறார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பியும் என். சோமகாந்தனும் சில ஆண்டுகள் முந்தி வருத்தம் தெரிவித்ததை வைத்து 1963இல் யாழ்ப்பாணத்தின் படுபிற்போக்குச் சிந்தனையாளர்கள் நடத்திய கூட்டத்தில் கூழ் முட்டை எறிந்தது முற்போக்கு எழுத்தாளர்களின் "இமேஜைக்" குறைத்ததாக எழுதியிருக்கிறார். இந்த இரண்டு பேருக்கும் அந்தக் கூட்டத்தைக் குழப்புகிற தீர்மானம் முன்கூட்டியே தெரியும். ஏனெனில் அது எழுந்தமாக நடந்த சம்பவமில்லை. யோசித்து எடுக்கப்பட்ட முடிவு. இதை மிகவும் நேர்மையாகவே சொக்கன் சில காலம் முந்தி உறுதிப்படுத்தியிருக்கிறார். அவர் அது சரியானது என்றுங் கூறியிருக்கிறார். அன்றைய நிலைமையில் சாதி வெறி இலக்கியப் பிரமுகர்கள் ஒடுக்கப்பட்ட சாதியினர் மீதும் தொழிலாளர் மீதும் இழிசினர் என்றும் வேறு நிந்தனைச் சொற்களாலும் நாளாந்தம் கூழ்முட்டை எறிந்து கொண்டு இருந் தார்கள். அதைப் பற்றி எங்களுடைய இலக்கியப் பண்பாட்டுக்காரர்களுக்கு இது வரையிலும் ஒரு கவலையும் இருக்கவில்லை. "புரட்சி என்பது தேநீர் விருந்து வைபவமல்ல" என்று நினைவூட்ட விரும்புகிறேன். முற்போக்கு எழுத்தாளர் சங்கம் மக்களிடையே மரியாதை கெட்டது அதனாலில்லை. சந்தர்ப்பவாதிகளுக்குப் பின்னால் அந்தச் சங்கத்தை இழுத்துக் கொண்டு போனவர்கள் மக்களிடமிருந்து அந்நியப்பட்டுப் போனார்கள். தீண்டாமை ஒழிப்பு போராட்டத்தை எதிர்க்கிறவர்களுடன் சேர்ந்து நின்றார்கள். 1966இல் பேரினவாத ஊர்வலம் போனவர்களை ஆதரித்தார்கள். 1970 முதல் பதவிகளுக்குப் பின்னால் அலைந்தார்கள். இவற்றால் தான்.

அப்படிச் செய்யாதவர்கள் தங்களுடைய ஒவ்வொரு செய்கைக்கும் தட்டிக் கழித்துப் பிறர் மேல் பழி சொல்லாமல் துணிந்து பொறுப்பெடுக்கிறார்கள். நல்ல இடதுசாரிக்கு வேண்டியது "இமேஜ்" இல்லை. நேர்மையான இதயம். இது தான் கைலாசபதி காட்டிய வழி. "இமேஜ்" தேவையானவர்கள் பச்சோந்தி போல நிறங்களை மாற்றிக் கொள்ளலாம்.

கலாநிதி துரை மனோகரன் சொல்கிறது போல முற்போக்கு எழுத்தாளர் சங்கம் எழுபதுகள் வரை வீறு நடைபோடவில்லை. அறுபதுகளிலேயே படுத்து விட்டது. எழுபதுகளில் அரசாங்கத்துக்கு வால்பிடித்து எழும்பி நிற்கப்பார்த்தது. நிற்க முடியவில்லை. டொமினிக் ஜீவாவின் தளராத உழைப்பும் திரிபுவாதிகளிடமிருந்து கிடைத்த மறைமுகமான சிறு நிதி உதவியும் மல்லிகையை மாதமாதம் வெளியிட உதவி செய்தன. மற்றப்படி அந்த அமைப்பால் இலக்கியத் துறையில் எதையுமே செய்ய முடியவில்லை. இதைச் சிவத்தம்பியோ டொமினிக் ஜீவாவோ இயலுமானால் மறுக்கட்டும். என்.ஜி.ஓ ப் பிழைப்பு நடத்தி வந்த உதிரிகள் சிலர் சில ஆண்டுகள் முன்பு உருவாக்கிய ஒரு அமைப்பை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தொடர்ச்சி என்ற விதமாகச் சொல்லியிருக்கிற கலாநிதி துரை மனோகரனுக்குத் தேசிய கலை இலக்கியப் பேரவையே முற்போக்கு இலக்கியச் சிந்தனையின் மக்கள் இலக்கியப் பாசறையாக 1974 முதல் இன்று வரை இருந்து வருவதை உரிய இடத்தில் கூற முடியவில்லை. கட்டுரையின் முடிவில் இன்னுமொரு அமைப்பாக அது குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இது ஏன்?

வேண்டுமென்றே விடயங்களைத் தவிர்க்கிறதில் ஸ்ரீபிரசாந்தன் மிகுந்த ஆற்றல் உடையவராகி வருகிறார். தேசிய கலை இலக்கியப் பேரவையின் எந்தத் தொகுப்பு நூலும் அவர் கண்ணிற்படாமல் எந்த அவதாரம் அவரது கண்ணை மறைத்திருக்கிறதோ தெரியவில்லை. ஒழுங்காக ஒருதொகுப்பை வழங்குவதற்கு இரண்டு விடயங்கள் தேவை. ஒன்று திட்டமிட்ட முறையிலான கடும் உழைப்பு. மற்றது நேர்மை. தன்னுடைய அரை வேக்காட்டுத் தொகுதியை விமர்சித்தவர்கள் புலம்பித்தீர்த்திருக்கிறதாகச் சொல்லுகிற ஸ்ரீ பிரசாந்தன் கட்டுரை முடிவில் கட்டுரைக்குப் பொருத்தமின்றித் தனக்காகப் புலம்பித் தீர்த்திருக்கிறார். பிழையைப் பிழையென்று விளங்கிக்கொள்ள அறிவு வேண்டும். அதை ஏற்றுக் கொள்ள நேர்மை வேண்டும். இவரிடம் எது மிகவுங் குறைகிறது என்று விளங்கவில்லை.

பேராசிரியர்கள் நு.்.மானும் மௌனகுருவும் பாநாடகங்கள் பற்றி எழுதியிருக்கிறார்கள். பேராசிரியர் நு.்.மான் சிறுவர்கட்கான பாநாடகங்கள் பற்றியும் எழுதியிருக்கிறார். என்றாலும் அவருக்குப் பேராசிரியர் சிவசேகரம் பல வேறு செய்யுள் வடிவங்களையும் கூத்துச் சந்தங்களையும் பயன்படுத்தி எழுதிய "கிட்கிந்தை" பற்றித் தெரியாதா? "பாட்டுங் கூத்தும்" என்ற தலைப்பில் வெளிவந்த சிறுவர்கட்கான பாநாடக நூல் பற்றித் தெரியாதா? அவை பல முறை லண்டனில் மேடையேறியதும் கொழும்பில் மேடையேற்றப்பட்டதும் தொடர்ந்தும் மேடையேறி வந்ததும் தெரியாதா? பேராசிரியர் மௌனகுருவுக்கும் பேராசிரியர் சிவசேகரத்தின் சிறுவர் நாடகங்கள் பற்றித் தெரியாதா? மொழிபெயர்ப்பு நாடகங்கள் பற்றிப் பேசுகிற போதும் நூல்வடிவம் பெற்ற பேராசிரியர் சிவசேகரத்தின் நாடகங்கள் பற்றியோ பாலேந்திரா மேடையேற்றிய பிற தமிழாக்க நாடகங்கள் பற்றியோ பேராசிரியர் மௌனகுருவுக்கு எழுத இயலவில்லை என்றால் அதற்கான காரணம் அறியாமையாக இருக்க முடியாது. இதனை பேராசிரிய வக்கிரத்தனம் என்பதா அல்லது ஒரு கண்ணில் வெண்ணை மறு கண்ணில் சுண்ணாம்பு என்பதா? இந்தப் பேராசிரியப் பெருந்தகைகள் இரண்டு பேரும் சொல்ல மறந்த முருகையனுடைய நாடகம் ஒன்றும் இருக்கிறது. அவருடைய "வெறியாட்டு" என்ற நாடகம் வெற்றிகரமாக மும்முறை மேடையேறிய பின் யாழ்ப்பாணத்தில் நான்காம் மேடையேற்றம் நடவாதபடி தமிழ்த் தேசிய வாத போராட்ட இயக்கத் தலைமைக்கு அது பற்றிய பொய்த் தகவல் அனுப்பப்பட்டதால் நாடகம் தடை செய்யப்பட்டது. அதற்குப் பொறுப்பானவர்களில் இந் நாள் தமிழ்த் தேசியவாதிகளும் முன்னாள் தமிழ்த் தேசியவாதிகளும் அடங்குவார்கள்.

இளங்கீரனின் நாவல்களை மிகைப்படுத்தி பேராசிரியர் கைலாசபதி இலக்கிய உலகில் உயர்த்தி வைத்தார் என்று முறைப்படுகிற செங்கை ஆழியான் அவரது இரண்டு நாவல்கள் ஈழத்து நாவல் துறைக்கு வலு சேர்த்ததாகவும் சொல்லியிருக்கிறார் இவர் இன்னொரு இடத்தில் ஏராளமான தமிழ் நாவல்களில் ஒரு சில ஒரு சில போக எல்லாமே சருகுகள் என்றும் சொல்லி வைத்திருக்கிறார். இதில் ஞானம் ஆசிரியர் சருகல்லாத ஒரு நாவலை எழுதியதாகச் சொன்ன புண்ணியத்திற்காகவே இந்த மேற்கோள் என நம்பலாம்.

ஈழத்தில் தலித் இலக்கியம் என்ற தலைப்பில் எழுதியிருக்கிற மா. ரூபவதனன் இலங்கையிலே தலித் இலக்கியம் என்ற முத்திரை இல்லாமல் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான காத்திரமான படைப்புக்கள் 1950களில் தொடங்கி வர்க்கக் கண்ணோட்டத்தில் வெளியாகி உள்ளன என்பதை விங்கிக் கொள்ள இயலாதவராகத் தெரிகிறார். முருகையனைப் போலி இலக்கியப் படைப்பாளர் என்று வலிந்து தாக்கியும் இருக்கிறார். அதற்கும் மேலாகச் சாதிய தீண்டாமை எதிர்ப்புப் போராட்டத்தையும் வக்கிரப்படுத்தி எழுதியுள்ளார். அவருக்கு சாதிப்பிரச்சனை தானாய்த் தீரும் சண்டை வேண்டாம் என்பவர்கள் யாரென்று தெரியாது. சாதி முறையின் வரலாறும் தெரியாது. சாதி முறைக்கும் சாதியத்துக்கும் ஆதரவாக நிற்கிறவர்கள் யாரென்றும் தெரியாது. அவர்கள் எல்லாரையும் விட்டு விட்டு யார் யாரெல்லாம் சாதியத்துக்கு எதிராகத் தளராது போராடி நிற்கிறார்களோ அவர்கள் மீது சேறு வீசுகிறார்.

மார்க்சிச எதிர்ப்பு என்கிற தொற்று வியாதிக்கு செ. சுதர்சனும் உள்ளாகியிருக்கிறார். கட்டுரைக்கு எவ்வகையிலும் பொருத்தமில்லாமல் "ஒரு காலத்தில் ஈழத்துப் புனைகதைத் துறைக்கும் வாசிப்புத் துறைக்கும் வித்திட்ட பொதுவுடைமைவாதிகள் பலர் இன்று வணிக நாயகர்களாக வடிவம் எடுத்துள்ளனர்" என்று வலிந்து சாடியிருக்கிறார். தடித்த எழுத்தில் இது அச்சிடப்பட்டிருக்கிறது. இது சுதர்சனுடைய கை வண்ணமா அல்லது இது போல பிற கட்டுரைகளிலும் தடித்த எழுத்துக்களைப் புகுத்தியிருக்கிற ஞானம் பத்திரிகைக் "குடும்பத்தின்" கை வண்ணமா?. சுதர்சனுக்கும் பேராசிரியர் சிவசேகரத்தைத் தெரியாதா? வணிக நோக்கங்கள் பற்றி விளாசித் தள்ளியிருக்கிற சுதர்சன் அறிய வேண்டிய உண்மைகள் இருக்கின்றன. பதிப்பித்த புத்தங்களுக்கு நூலாசிரியர்கள் காசு தராததால் நட்டப்பட்ட நூல் வெளியிட்டாளர்கள் இருக்கிறார்கள். தொடர்ந்து நட்டப்பட்டு விரக்தியால் நூல் வெளியீட்டுத் துறையிலிருந்தே ஒதுங்கிப் போனவர்களும் இருக்கிறார்கள். மணிமேகலைப் பிரசுரத்தின் வியாபாரி மாதிரி எல்லாரையும் முட்டாளாக்குகிறவர்களை விட்டுவிட்டு ஏன் யாரோ முன்னாள் இடதுசாரியை நினைத்து 'பல' பொதுவுடைமைவாதிகளை சுதர்சன் தாக்க வேண்டும்? இப்படி பொத்தம் பொதுவான தாக்குதல்களை விட்டு குறிப்பான விமர்சனங்களை முன்வைப்பது நல்லது. முழுத் தமிழினத்தையுமே விற்றுக் கொண்டிருக்கிற தமிழ்த் தேசியவாத இலக்கிய வியாபாரிகளைப் பற்றி அப்போது பேச வேண்டி வராதா? பழைமையும் ஆன்மீகமும் பேசி ஆலயங்கள் எழுப்பிக் காசு சம்பாதிக்கிற இலக்கியச் செம்மல்கள் பற்றியும் அப்போது பேச வேண்டி வராதா? நடுநிலை பற்றி மிகவும் பேசிவருகிற ஒரு சஞ்சிகை ஞானம். இப்போது அதனுடைய நடுநிலையின் லட்சணம் பளபளவென்று ஜொலிக்கிறது. **வசந்தன்**

# மத மூடநம்பிக்கையால் திருப்பதியில் பணம் குவிகிறது

இந்தியாவில் இந்து மதக் கோவில்களும் அவை பரப்பும் மூட நம்பிக்கைகளும் ஏராளம். ஒரு புறத்தில் கருத்தியல் ஆதிக்கத்தையும் மறுபுறத்தில் பண வருவாயையும் கோவில்களும் அவற்றின் தர்மகர்த் தாக்களும் கொண்டிருக்கிறார்கள். இதற்கு ஒரு உதாரணம் தான் திருப்பதி திருமால் கோவிலாகும். உலகிலேயே பணம் தங்கம் குவியும் தனிப் பெரும் கோயிலாக அது இருந்து வருகிறது. அதில் குறைவு எதுவும் ஏற்படாதவாறு நாளாந்தம் கோவிலின் மகிமை அற்புதம் பற்றிய பரப்புரைகள் பல வழிகளிலும் செய்யப்படுகிறது. நவீன தகவல் தொழில் நுட்பம் ஊடாக உலகம் பூராகவும் உள்ள பக்த கோடிகளுடன் தொடர்பு கொள்ளப்படுகிறது. அதன் இணையத்தளம் மூலம் வெளிநாட்டுப் பக்தர்கள் வழிபாடு செய்ய ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதுடன் கிரடிக்ற் கார்ட் மூலம் லட்சம் லட்சமாகப் பணமும் பெறப்படுகிறது.

இக்கோவில் பற்றி மேலும் சில தகவல்களை "எக்கனமிக் ரைம்ஸ்" பத்திரிகை வெளிட்டிருந்தது. இக் கோவிலின் தர்மகர்த்தா நம்பிக்கை நிதியம் 2008/09 ஆண்டுக்கான வரவு செலவாக 1925 கோடி இ. ரூபாய்களை அங்கீகரித்துள்ளது. திருப்தி செல்லும் பக்தகோடிகள் அங்கு தலை முடியை முற்றாக மளித்துக் கொள்வது தொடரும் ஒரு பெரிய மூட நம்பிக்கையாகும். ஆனால் அவ்வாறு மளிக்கப்படும் தலை முடிக்கு கோவில் நிர் வாகம் ஏலம் விட்டு விற்பனை செய்வது திருமாலின் பெயரிலான ஒரு பெரும் வர்த்தகமாகும். இவ்வாறு கடந்த வருடம் இந்த தலைமுடிக்கு விடப்பட்ட ஏலத்தால் பெறப்பட்ட பணம் 2 1/2 கோடி ரூபாவாகும். இப்போது இவ்வாண்டு ஏலத்தின் மூலம் 230 கோடி ரூபா வருமானம் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்து திருப்பதி லட்டு நன்கு பரப்புரை செய்யப்பட்ட அருளுடைய லட்டு என்றே மக்கள் நம்பி ஏமாந்து கொள்கிறார்கள். தினமும் 20 ஆயிரம் லட்டுகள் விற்பனையாகின்றன. விஷேட தினங்களில் இது மேலும் அதிகரிக்கும். பெருந் தொகையான இந்த லட்டுச் செய்வதற்கு தற்போது நவீன யந்திரம் பெறப்பட்டிருப்பதாக நிர்வாகம் பெருமை கொள்கிறது. பிரசாதம் மூலம் வருடம் ஒன்றிற்கு இரண்டு கோடி ரூபாய்கள் பெறப்படுகின்றது.

இவற்றை விட நேரில் செல்லும் பக்தர்கள் என்போர் அங்குள்ள உண்டியலில் பணம் தங்கம் வெள்ளி நகைகளை போட்டுக் கொள்வார்கள். பெரும் பெரும் பணக்காரர் லட்சாதிபதிகள் கோடீஸ்வரர்கள் திருப்பதிக்குச் சென்றால் திருமாலின் பெயரால் கொழுத்த வருவாய் தான். இதில் மக்களைப் பலவழிகளிலும் ஏமாற்றும் பெரும் பெரும் புள்ளிகள் அடக்கம். அத்தகைய மிகமிக முக்கிய பிரமுகர்கள் திருமாலைத் தரிசிக்க விஷேச ஏற்பாடுகள் செய்யப் படும். அதேவேளை பணமற்ற சாதாரண பக்தர்கள் வெறும் சங்கரா பஜனையுடன் தூரத்தில் நின்று கும்பிட்டு மயிரையும் மழித்துத் திரும்ப வேண்டியது தான். காசே தான் கடவுளப்பா என்பது எவ்வளவு உண்மை.


இந்தியாவில் குறிப்பாக இந்துமத மூடநம்பிக்கை மக்களை அமுக்கி அவர்களது சிந்தனையை மழுங்கடித்து வருகிறது. அதற்கு சினிமாவும் தகவல் தொடர்பு சாதனங்களும் உதவி வருகின்றன. அரசியலிலும் பாதுகாப்பு பெறுகிறது மூட நம்பிக்கைகள். இந் நிலையில் அங்கு கோவில்கள் வர்த்த நிறுவனங்கள் போன்று செயற்பட்டு மக்களின் அறியாமை மீது கொழுத்த வியாபாரம் செய்கின்றன. இந்த வியாபாரத்திற்கும் கருத்தியல் திசை திருப்பல்களுக்கும் பிராமணியம் தனது ஆதிக்க நிலையைப் பேணி வருகிறது. மக்கள் மீண்டும் மீண்டும் மதம் தரும் மூட நம்பிக்கைச் சேற்றிற்குள் புதையுண்டவர்களாகவே இருந்து வருகின்றனர். மதம் மக்களுக்கு அபினி என்று கார் மார்க்ஸ் கூறி கூற்றின் யதார்த்தத்தை இந்தியாவில் மட்டுமன்றி இலங்கையிலும் காண்கின்றோம். இத்தகைய மத மூட நம்பிக்கைகள் உணரப்பட்டு கைவிடப்படாத வரை மக்கள் பெரும் திரளினருக்கு மீட்சியே கிடையாது.


www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

ஒக்ரோபர் 2008


# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org







பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தி அமெரிக்க ஆளும் வர்க்கத்தினால் ஆயுள் தண்டனை மற்றும் நீண்டகாலத்தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து கியூப தேசபக்தர்களை விடுதலை செய்யக் கோரி கியூபாவில் நடத்தப்பட்டுவரும் போராட்டத்தில் வெளியிடப்பட்ட சுவரொட்டியை மேலே உள்ள படத்தில் காணலாம். "ஐந்து கியூப வீரர்களையும் விடுதலை செய்" என்பதின் கீழ் அவர்களின் படங்கள் காணப்படுகின்றன.



1976ம் கியூபாவின் பயணிகள் விமானத்திற்கு குண்டுவைத்து 76பேர் கொல்லப்படக் காரணமாக விளங்கிய அமெரிக்க கைக்கூலிகளில் ஒருவனாகிய போசாடா ஹரிலஸ் இப் போதும் கியூபா வெனிசுலவேவா, நிக்காருவாவே நாடுகளில் தேடப்படும் பயங்கரவாதியாவன். இவனுக்கு அமெரிக்காவில் சுதந்திரமாக நடமாட அமெரிக்க நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது. அந்தப் பயங்கரவாதியின் படத்தை மேலே காணலாம்.




அமெரிக்காவில் லேமன் சகோதரர்களின் நிதிநிறுவனம் வங்குரோத்தாகி வீழ்ச்சி அடைந்திருப்பது முதலாளித்துவத்தின் வீழ்ச்சியை காட்டுவதாகும் என அமெரிக்காவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் தெரிவிக்கப்படுகிறது.

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.